# பூமிக்கு வந்த சூரியன்கள்

இந்துமதி

பூஞ்சோலைப் பதிப்பகம்
58, டி. பி. கோயில் தெரு
திருவல்லிக்கேணி
விவேகானந்தர் இல்லம்
சென்னை – 600 005

பூமிக்கு வந்த சூரியன்கள் (கட்டுரை)
முதற் பதிப்பு : மார்ச் 1992
விலை 16-00

BOOMIKKU VANTHA SOORIYANGAL
Essays on Women
In Tamil
by INDHUMATHI
© Indhumathi
First Edition : March' 92
128 Pages
10 Point Letters
10.5 Kg. White Printing
Box Board Binding
Printed at : Bismi Printers, Madras-5
POONCHOLAI PATHIPPAGAM
58, T. P. Koil Street
Triplicane : : Ice House
MADRAS - 600 005
Price : Rs. 16-00

17661
3365683

அச்சிட்டோர் :
பிஸ்மி பிரிண்டர்ஸ்
42, சூரப்ப முதலி தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

**S. சத்தியமூர்த்தி** I. A. A. S. **அவர்களின்**

## முன்னுரை

இலக்கிய கர்த்தா இந்துமதியின் இந்தக் கட்டுரைத் தொகுப்புக்கு முன்னுரை எழுத என்னைப் பணித்திருக்கிறார்கள். இது இந்துமதியின் உயரிய பண்புக்கு எடுத்துக்காட்டு. ஏனெனில் எழுத்துலகில் அவர் இமயச் சிகரங்களில் ஒருவர். நான் தளர் நடை போடும் குழந்தை.

ஒருவேளை இப்படியும் இருக்குமோ...? ஒரு முறை இந்துமதியிடம் ''என்னுடைய கடைசிப் பக்கங்கள் (இதயம் பேசுகிறது) உதிரிப் பூக்கள் போன்றவை. உங்கள் நாவல்கள் மல்லிகைச் சரம்; அழகாகத் தொடுக்கிறீர்கள்'' என்று சொன்னேன். அதனால் அவருடைய உதிரிப் பூக்களுக்கு என்னை முகவுரை எழுதச் சொல்லியிருக்கிறாரோ? தொடுத்துப் பார்க்கிறேன். எது எப்படி இருந்தாலும் எனக்கு இது இனிய பயணம்.

'ராஜம்' என்ற பத்திரிகையில் மாதா மாதம் ஜனித்த காகிதப் பூக்கள் இவை. காலத்தால் அழியாதவை. மோனிஷா வர்மா, கமலா தேவி, ஷபானா ஆஸ்மி, புஷ்பா, சபீதா, செல்வி போன்ற நிஜ வாழ்க்கைப் பெண்களை வானவில்லாய் சித்தரித்திருக்கிறார். அவர்களின் அறப் போராட்டங்களை, மன ஏமாற்றங்களை அழகாக விவரித்திருக்கிறார். இத்தனைக்கும் நடுவே சமூகப் பிரச்னைகளை, பெண்களின் தியாகங்களை, பெருமைகளை, சமூகக் கொடுமைகளை, அழகிய உணர்வுகளை, எதிர்காலத் திசைகளை ஆணித்தரமாக எடுத்துரைத்திருக்கிறார். சூரிய வீச்சுக்களாக வார்த்தைகள், ஒளியான கருத்துக்கள், எழுத்துலகில் பவனி வருகின்றன.

கொலுசுகள் சப்திக்கும். சத்தம் போடாது. இந்துமதியின் எழுத்துக்களில் எனக்கு இந்த நயம் மிகவும் பிடிக்கும். அவருடைய வர்ணனைகளும், சம்பவக் கோர்வைகளும், மொழியாற்றலும், கதாபத்திரங்களும், இழையோடும் சமூக சிந்தனைகளும் சுகமாக சுமைகள்... கொலுசுகளைப் போல. உதாரணத்திற்கு ஒன்றே ஒன்று: ''பெண்கள் - பூக்கள். வானத்து வெண்ணிலவு, அன்னம், கிளி, மான், மயில் என **அழகான, சாதுவான, மிருதுவான,** ஆபத்தில் கூடப் **போராடுகின்ற** வலிமையற்ற பட்சிகள், அவர்களின் முகங்கள் நிலவைப் பிடித்து சில கறைகள் துடைத்து குறுமுறுவல் பதித்த கண்ணாடி முகங்கள். கண்கள் கமலப் பூக்கள். நாசி செண்பகப்பூ. கன்னங்கள் ரோஜாக்கள், உதடுகள் கோவைக்கனி. நிறம் தாழம்பூ.''

இந்துமதியின் கதைகள், கட்டுரைகள், நாவல்கள் தாழம் பூ நிற தளிர்க்கால்கள் என்றால் அங்கே சப்திப்பது அவருடைய கொலுசு நடை.

இந்த உதிரிப்பூக்களைப் பற்றி இன்னும் எத்தனை எத்தனையோ எழுத முடியும். சுருங்கச் சொன்னால் ''பூமிக்கு வந்த சூரியன்கள்'' என்ற இந்தக் கட்டுரைத் தொகுப்பு உதிரிப் பூக்கள் அல்ல. மல்லிகைச் சரம். முகர்ந்து பாருங்கள். ஒவ்வொன்றும் பளிச்சிடும் வைரம். உங்கள் மன மேடையை அலங்கரிக்கும். அள்ளிக் கொள்ளுங்கள்.

கடைசியாக எனது இந்த முன்னுரை காட்பரீஸ் சாக்லேட்டுக்கு அணிவிக்கப்பட்ட ஜரிகைப் போர்வை. ஜரிகைப் போர்வையைத் தள்ளி விட்டு உள்ளே இருக்கும் சாக்லேட்டைச் சுவையுங்கள்.

S 6, Haddows Road, வணக்கத்துடன்
MADRAS 600 034. சத்தியமூர்த்தி.
20-2-92

## உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | தேவனல்ல மனிதனே | 9 |
| 2. | மாமியார் ஆகும் அம்மா | 17 |
| 3. | அப்டன் பார்க்கில் ஒரு அம்மா | 22 |
| 4. | உடல் வலிவும் மன வலிவும் | 32 |
| 5. | மிதவைகள் தானா பெண்கள்? | 42 |
| 6. | சுதந்திரப் போராட்டத் தியாகி திருமதி கமலாதேவி சட்டோபாத்யாயா | 51 |
| 7. | ஷபானா ஆஸ்மி என்றொரு சமூகப் பொறுப்புள்ள நடிகை | 59 |
| 8. | திருடனைப் பிடித்த தீரப் பெண் பிரபா | 64 |
| 9. | காரியம் யாவினும் கை கொடுக்கும் | 73 |
| 10. | புஷ்பா என்றொரு பூ மனம் கொண்டவள் | 79 |
| 11. | ஆதிவாசிப் பெண்ணின் அறப்போர் | 84 |
| 12. | அபலைக்கு அபயம் | 92 |
| 13. | கிராமத்து இடி முழக்கம் | 98 |
| 14. | அம்மா | 113 |
| 15. | பெண்ணுக்குப் பெண்ணே எதிரியா? | 118 |


## ஒரு பூபாளம்

இந்தத் தலைப்பில் நான் எழுதப் போவதெல்லாம் உதிரிகள்தான். அதாவது ஒவ்வொரு இதழும் ஒவ்வொரு விதம். ஒவ்வொரு ரகம். ஆனால் உதிரிப் பூக்களின் அடிப்படை — வாசனை என்கிற மாதிரி என்னுடைய இந்த உதிரிகளின் அடிப்படை — மனித நேயம். இதை நான் மனித நேயம் என்று தான் சொல்கிறேனே தவிர, ஆண்—பெண் நேயம் என்றெல்லாம் பிரித்துச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லவும் முன் வரவில்லை. பொதுவாக மனிதனை மனிதன் நேசிப்பது என்பது குறைந்து கொண்டே வருகிறதோ என்று எனக்குத் தோன்றுகிறது. தான் — தனது — தன் வீடு—தன் தேசம் என்று ஒரு குறுகிய வட்டத்திற்குள் மட்டும் அடைபட்டு விடாமல் உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் ஒன்றாகச் சேர்ந்து கை குலுக்க முடியும். குலுக்க வைக்க வேண்டும் என்கிற ஆசை வருகிறது. அதை இந்த உதிரிப் பூக்களில் மையமான நாராக வைத்து ஒவ்வொரு பூவாகக் கோர்த்துக் கட்ட முடியுமா என்று பார்க்கிறேன்...

அது தவிர நான் இதை எழுத ஒப்புக் கொண்டதில் ஒரு நோக்கம் உண்டு; கொள்கை உண்டு; இவை போய்ச் சேர வேண்டிய மனங்களைப் பற்றின அக்கறை உண்டு; பிரக்ஞை உண்டு. நான் எந்தப் பாதிப்பில் — எந்தப் பிரக்ஞையில் எழுதுகிறேனோ—அதே பாதிப்பும்—

பிரக்ஞையும் படிக்கிறவர்களிடமும் எழ வேண்டும் என்ற ஆழமான நம்பிக்கையும், எழும் என்கிற ஆணித்தரமான தீர்மானமும் உண்டு.

எழுத்தில் எவையெல்லாம் இருக்க வேண்டும்— அல்லது எப்படி எழுத வேண்டும், எதை எழுதலாம் — அல்லது எழுதக் கூடாது என்பதெல்லாம் மனிதனுக்கு மனிதன் மாறுபடலாம். மனத்திற்கு மனம் மாறுபடும். ஆனால் பொது நோக்கு என்ற ஒன்று மாறுபடாது. மாறுபடவும் முடியாது.

இந்தப் பொது நோக்கு என்ன என்று பார்க்கிற போது என் அறிவிற்கு ஆறு விஷயங்கள் பிடிபட்டன. அவற்றில் முதலாவதாக நான் கருதுவது சமுதாயப் பொறுப்பும், விழுப் புணர்ச்சியும், இரண்டாவது; விஷயங்களைத் தெரியப்படுத்துகிற தன்மை, மூன்றாவது—ரசிக்க வைக்கிற திறமை, நான்காவது—மொழியாளுமை, ஐந்தாவது — உள்ளுணர்தல். அதாவது Mystic Sense ஆறாவது நடையின் எளிமை.

இவை அனைத்தும் சேர்ந்து சொல் செட்டு, சொற்கட்டு இவற்றுடன் சிறிது நகாசு வேலையையும் காட்டி, கடைசியாக ஒரு சொடுக்கு சொடுக்கி இழுக்க வேண்டும். இந்தச் சொடுக்குத் தான் மிக மிக முக்கியம். இது இழுக்கிற இழுப்பு தான் மனதில் சாட்டையாக விழும். கொக்கியாக மாட்டிக் கொண்டு அவஸ்தைப்படுத்தும். அந்த அவஸ்தை தாங்க முடியாமல் வழி தேடச் சொல்லும். அந்த வழிக்கான மார்க்கங்களை ஆராயத் தூண்டும். இந்தத் தூண்டுதலே 'உதிரிப் பூக்கள்' என்கிற இக்கட்டுரைகளின் — அல்லது கதையோடு சேர்ந்த கட்டுரைத் தொடரின் முக்கியமான, முதன்மையான நோக்கம் இத் தூண்டுதலை முதலில் தூண்டி விட்டால் போதும். அப்புறம் அது தொடர்ந்து, சிந்தனையின் வித்தாகி எழுச்சியாக மலரும்

அந்த மலர்ச்சியை என்னுடைய இப்புத்தகம் ஏற்படுத்தும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையின் காரணமாகவே ஒவ்வொரு பூவாகக் கொய்ந்து தரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். ஒவ்வொரு மாதமும் 'ராஜத்'தின் கூந்தலில் செருகிய இம் மலர்களைப் பறித்து மணத்தை முகருவதும் — முகர்ந்த வாசனையை உள்ளுக்குள் தக்க வைத்துக் கொள்வதும் — தக்க வைத்துக் கொண்டதை மற்றவர்களுக்குப் பரப்புவதும் உங்களின் பொறுப்பு மட்டுமின்றி இனிமையான கடமையுமாகும் கூட.

மிகுந்த அன்புடன்
இந்துமதி

17661
3365683

# பூமிக்கு வந்த சூரியன்கள்

## 1. தேவனல்ல மனிதனே

அன்று மகாபாரதத்திற்குக் காரணமாக இருந்ததே திரௌபதி துகிலுரியப்பட்டது தான். நட்ட நடுச்சபையில் மானபங்கப்படுத்தப்பட்டதுதான். உரிய உரியத் துகில் துகிலாக நீண்டு கொண்டே போய் திரௌபதியைக் காப்பாற்ற அப்போது கிருஷ்ணன் இருந்தான். இப்போதோ கிருஷ்ணனுக்குப் பதிலாக வெறும் துச்சாதனர்களே நிறைந்து போய் விட்டார்களோ என்று எனக்குத் தோன்றுகிறது. அப்படித் தோன்றும் படியான சம்பவங்களே நடக்கின்றன. செய்தித்தாள்களைப் பிரித்தால் கண்ணில் படுகின்றன.

அன்றைய துச்சாதனனாவது துகிலை மட்டும் தான் உரித்தான். ஆனால் இன்றைய துச்சாதனர்கள் துகிலுரிவதோடு நிற்காமல் கற்பையும் சேர்த்துப் பறிக்கிறார்கள். அது மட்டும் போதாதென்று கை எலும்புகளை முறித்து, உடலெல்லாம் காயப்படுத்தி, ரத்தக்கறை சுவற்றிலும், தரையிலும் பதியப் பதிய இழுத்துக் கொண்டு போய், புதருக்கருகில் யார் கண்ணிலும் படாத வகையில் போட்டு விட்டுப் போய் விடுகிறார்கள். இவை அனைத்தையும் யார் செய்திருக்கிறார்கள்...?

யாரோ சமூக விரோதிகள் இல்லை. கயவாளிகள் இல்லை. கொள்ளைக் கூட்டத்தினரில்லை. கொலைகாரர்கள் இல்லை. கொடும்பாவிகள் இல்லை. இவர்கள் அனைவரையும் பிடித்து, பொது மக்களைக் காப்பாற்ற வேண்டிய போலீஸ் அதிகாரிகள் செய்திருக்கிறார்கள். காபாற்றுகிற கடமைக்காக அரசினால் நியமிக்கப்

பட்டவர்கள் செய்திருக்கிறார்கள். ஒரு காவல் நிலையத்தின் உயர் அதிகாரி மட்டுமின்றி கான்ஸ்டபிளிலிருந்து குற்றப் பத்திரிகை எழுதுகிற ரைட்டர் வரை நாலைந்து பேர்களாக மாறி...மாறி...

ஒரு பெண்ணை அதுவும் மற்றவனின் மனைவியை ஒரு குழந்தையின் தாயை எழுத்தறிவிக்கிற இறைவியை ஒரு குடம் தண்ணீர் எடுக்கப் போனவளின் கதி, குடம் குடமாகக் கண்ணீரை வரவழைக்கிறது. வெறும் கண்ணீர் மட்டும் தானா வருகிறது...? அவள் பட்ட காயங்களின் ரத்தத் துளிகள் தெறித்து நம் மனமெல்லாம் செந் நீராகவில்லை...? அவளின் அந்தக் காயங்களுக்கு மருந்திட்டு, கட்டுப் போட்டு ஆற்றப் படலாம். ஆறி விடவும் கூடும். ஆனால் மனசில் பட்ட உள் காயம்...அதன் ரணம்...வலி...வேதனை...இவை யெல்லாம் அத்தனை சீக்கிரத்தில் ஆறுமா...? அல்லது ஆற்றத்தான் முடியுமா...?

அன்று கூட துரியோதனனின் சபையில் பாஞ்சாலீ துகிலுரித்து மானபங்கப் படுத்தப்பட்டாளே தவிர இவ்வாறு உயிர் துடிக்கத் துடிக்கக் கற்பழிக்கப்படவில்லை. அந்தத் துகிலுக்கே அப்பூமி குருஷேத்திரமாக்கப்பட்டது. இன்றும் இதற்கும் குருஷேத்திர யுத்தம் நடந்திருக்கிறது...

எதன் மூலம் தெரியுமா...?

பத்திரிகைகளின் மூலம். செய்தித்தாள்களின் மூலம். பேனா வில்லை வைத்து, சொல்லம்புகளைத் தொடுத்ததன் விளைவாகவே - இச் செய்தி வெளியில் தெரிய வந்தது. அந்தப் பாஞ்சாலியின் கதை புரிய வந்தது. துச்சமாகக் காவல் அதிகாரிகள் நடந்து கொண்டது தெரிய வந்தது.

ஆனால் மனித நேயம் எல்லா மனங்களிலிருந்தும் ஓடிப் போய் விடவில்லை - தீமையை எதிர்க்கிற தன்மை இன்னும் இந்த ஞானபூமியில் முற்றிலும் வற்றிப் போய் விடவில்லை என்பதற்கு அத்தாட்சியாக, அப் பெண்ணிற்கு நேர்ந்த கொடுமையைத் தங்கள் வீட்டுப் பெண்ணிற்கு நேர்ந்த



ஒன்றாக நினைத்து, ஒட்டு மொத்தமாகக் கொதித்தெழுந்து திரண்டார்களே, அந்தச் சின்ன கிராமத்து மக்கள்...

அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். 'யார் வீட்டுப் பெண்ணுக்கோ ஏதோ நடந்தால் நமக்கென்ன...? எதற்கு வீண் வம்பு...?' என்கிற நகரத்து நாகரிகமும் - அடுத்தவர் விஷயத்தில் தலையிடாத தன்மை என்ற பெயரில் காட்டப்படுகிற அலட்சியமும், பொறுப்பற்ற தனமும் இல்லாத காரணத்தினாலேயே அவர்கள் கொதித்து எழுந்தார்கள். அக்கொதிப்பின் காரணமாக அந்த நவயுக துச்சாதனர்களுக்குத் தண்டனை கிடைத்திருக்கிறது. வேலையிலிருந்து சஸ்பெண்ட் செய்யப் பட்டிருக் கிறார்கள்...

இதைப் படிக்கிற போது உங்களுக்கு நான் ஏதோ கதை எழுதியிருப்பதாகத் தோன்றுகிறதல்லவா...? ஆனால் இது கதையல்ல. நிஜம். நம் கண்ணெதிரில் நடந்து போன சமகாலச் சம்பவம். இதை சரித்திரச் சம்பவமாகச் சொல்ல முடியாது. வேண்டுமானால் இப்படிச் சொல்லலாம். யாரோ சில பொறுப்பற்ற காவல் அதிகாரிகள் செய்த செயலினால் காவல் துறையின் சரித்திரத்தில் வைக்கப் பட்டுவிட்ட கறுப்புப் புள்ளி, ஏற்பட்டுவிட்ட களங்கம் எனலாம்.

இக் களங்கம் நேர்ந்தது கல்பனா சுமதி என்கிற பெண்ணிற்கு. பெங்களூரின் அருகிலுள்ள தளி என்கிற மிகச் சிறிய கிராமத்துப் பள்ளி ஆசிரியைக்கு...புதர் மறைவில் குற்றுயிராக்கிப் போடப்பட்ட அவளை இறைவனின் கருணை மழைத் துளிகளாகப் பொழிந்து காப்பாற்றியிருக் கிறது. அம்மழைத் துளிகள் முகத்தில் விழுந்து, உதட்டோர வழியாக நாக்கையும் நனைத்த காரணத்தினாலேயே நினைவு முற்றிலும் தப்பாமல் முனகல் சத்தமாக வெளிப் பட்டிருக்கிறது. அது அந்தப் பக்கம் போன யார் காதிலோ கேட்கப்பட்டு, அருகில் போய்ப் பார்த்து, ஓடிப்போய் அவள் கணவரிடம் சொல்லியிருக்கிறார் அம் மனிதர்.

ரத்தக் களறியாகி நினைவு தப்பி - உயிர்த் துடிப்பு மெல்ல மெல்ல அடங்கி - சாவின் விளிம்பைத் தொட்டுக் கொண்டிருந்த அவளைக் காப்பாற்ற அவளது கணவர் அரும்பாடு பட்டிருக்கிறார். அவளைத் தூக்கிக் கொண்டு உள்ளூர் ஆஸ்பத்திரிக்கு ஓடியிருக்கிறார். அங்கு அவள் காப்பாற்றப்பட மாட்டாள் - காப்பாற்ற விடமாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டு பெங்களூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து கூட இருந்து கவனித்திருக்கிறார்.

கல்பனா சுமதியின் நிலையை நேரில் காணச் சென்ற பத்திரிகையாளர்களிடம் அவர் சொன்னது:

''இவள் என் மனைவி. என் உடம்பின் மறுபாதி. இத்தனை நாட்கள் என்னோடு குடும்பம் நடத்தியவள். இவை எல்லாவற்றிற்கு மேலாக என் குழந்தைக்குத் தாய். இவளுக்கு நேர்ந்த இதை ஒரு பயங்கர விபத்து என்றே நான் எடுத்துக் கொள்கிறேன். அதுவும் எனக்கு ஏற்பட்ட விபத்தாகவே கருதுகிறேன். அதனால் இதற்காக அவளை விட்டு என்னால் பிரிய முடியாது. இதில் இவளது தவறு என்பது என்ன...? குடிக்கத் தண்ணீர் பிடிக்கப் போனதா...? அல்லது பெண்ணாகப் பிறந்து விட்டதா...? எது? சொல்லுங்கள்...?''

இதைத் படித்து விட்டு வீட்டிற்கு வந்த நண்பர் ஒருவர் அக் கணவரை மிகவும் சிலாகித்துப் பேசினார். உடலில் சிலிர்ப்பு ஓடிற்று என்றார். இரு கைகளையும் கூப்பி அக் கணவரை நமஸ்காரம் பண்ணத் தோன்றிற்று என்றார். ஒரு தேவன் மண்ணில் இறங்கி வந்துவிட்ட சந்தோஷம் ஏற்பட்டதென்றார்.

அதைப் படித்தபோது நான் சந்தோஷப்பட்டது நிஜம். அவரின் கணவரை நினைத்தும் பெருமைப் பட்டது வாஸ்தவம். ஆனால் என் நண்பர் சிலாகித்து, அவரை மண்ணில் இறங்கி வந்த தேவன் என்றெல்லாம் தூக்கி வைத்துப் பேசி, மனசுக்குள் சாஷ்டாங்கமாக அவரை நிற்க



வைத்து நமஸ்காரம் செய்து விட்டுப் போனதைப் பார்த்ததும்—

நான் யோசிக்கலானேன். அந்த யோசனைகளின் முடிவில் மறுநாள் வந்த அதே நண்பரைக் கூப்பிட்டு உட்கார்த்தி வைத்துச் சொன்னேன்.

''நேற்று நீங்கள் கல்பனா சுமதியின் கணவரை - பத்திரிகைகளுக்கு அவர் தந்த பேட்டியைச் சிலாகித்துப் பேசினீர்கள். எங்கோ இருக்கிற அவருக்குக் கை கூப்பி நமஸ்காரம் செய்யத் தோன்றிற்று என்றீர்கள். சரி... இதெல்லாம் வாஸ்தவம். எனக்கும் அவரது மனிதநேயம் சந்தோஷமாக இருந்தது; பெருமையை ஏற்படுத்திற்று. என்றாலும் மண்ணில் இறங்கி வந்த தேவன் என்றெல்லாம் சொன்னது அதிகபட்ச வார்த்தையாகப் படுகிறது. அப்படி என்ன சார் தேவ காரியம் செய்து விட்டார் அவர்...?''

''என்ன இப்படிச் சொல்றீங்க...?'' என்று பதறிப் போனார் அந்த நண்பர்.

''நாலைந்து பேர்களால் மிகக் கொடூரமான முறையில் கற்பழிக்கப்பட்டு - உடலில் ஒரு சின்னத் துணியைப் போட்டு மூடி, கிழிந்த காகிதமாக, கந்தல் துணியாகக் கசக்கிப் புதர் மூலையில் தூக்கி எறியப் பட்டவளை ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாக எடுத்துக் கொண்டு ஓடி, காப்பாற்றினது பெரிய விஷயமில்லையா?''

''நிச்சயமாகப் பெரிய விஷயம்தான். மனித நேயமுள்ள யாரும் செய்யக்கூடிய செயல்தான்...''

''பின்ன...என்ன சொல்றீங்க?''

நீங்க நினைக்கிற மாதிரி இதுல தேவ காரியம்ன்றது என்னன்னுதான் கேட்கறேன்...?''

''என்னம்மா நீங்க...தன் மனைவி, நாலைந்து பேரால் பலாத்காரப்பாத்தப் பட்டிருக்கிறாள். அது ஊர் முழுதிற்கும் தெரிஞ்சு போயிருக்கு, பேப்பர் பேப்பரா அவளை—அவளிருந்த நிலையைப் படம் பிடிச்சுப் போட்டு

இவர்தான் கல்பனா சுமதின்னு அடையாளம் வேற காட்டியிருக்காங்க ... அதுக்கப்புறமும் — எல்லாருக்கும் தெரிஞ்சதற்குப் பிற்பாடும்—'இவள் என் மனைவி, என் உடம்பின் சரி பாதி'ன்னு சொல்கிறாரென்றால் — அவர் தேவனில்லாம வேற என்ன...? இதே மாதிரி ஒரு நிகழ்ச்சியை அடிப்படையா வச்சு நீங்க 'பைஸா நகரத்துக் கோபுரங்கள்'ன்னு ஒரு கதை எழுதினீங்களே ... அதுல கூட கற்பழிக்கப்பட்ட தன் மனைவியை—அது செய்தியாகிப் பத்திரிகைகளிலெல்லாம் வெளி வந்த அசிங்கத்திற்காக அவளை அவளது கணவன் வீட்டை விட்டு அனுப்பிடறானா இல்லையா...?''

அதைக் கேட்டதும் நான் நிதானமாகப் பதில் சொன்னேன்.

''அந்தக் கதையை அவ்வாறு எழுதினதற்குக் காரணமே அப்படி மனைவியை வீட்டை விட்டு வெளியேற்றியிருக்கக் கூடாது என்பதைச் சொல்வதற்குத் தான். அதுவும் ஒரு உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு—இதே பெங்களூரில் இரண்டாவது காட்சி சினிமா பார்த்து விட்டு—ஆட்டோவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மனைவிக்கு நேர்ந்த கதிதான். மனைவியை ஆட்டோக்காரர் உட்பட நாலைந்து முரடர்கள் தூக்கிப் போவதைப் பார்த்து, பின் உயிருக்குப் பயந்த கணவர் ஒன்றும் செய்ய இயலாமல் விட்டு விட்டிருக்கிறார். அப்போது அவளைக் காப்பாற்றத் துணியாதவர் அதன் பின் அவளை வீட்டை விட்டு விரட்ட மட்டும் துணிச்சலோடு முன் வந்த கோழைத்தனத்தை எடுத்துச் சொல்லத்தான் அதை எழுதினேன்.''

நண்பர் இதைக் கேட்டு, தன் கட்சி வெற்றி பெற்று விட்ட பெருமிதத்தில் முகம் பிரகாசித்தார்.

''இப்ப சொல்லுங்க ... இப்படிப்பட்ட ஆண்கள் இருக்கிற இத்தேசத்தில் இத்தனைக்குப் பின்னரும் 'இவள் என் மனைவி தான்; என் உடலின் மறுபாதி தான்' என்று ஆணித்தரமாகச் சொன்ன இவர் தேவனா இல்லையா?...''



''இல்லை.''—என் பதிலும் ஆணித்தரமாகவே வந்தது.

நண்பர் மீண்டும் அதிர்ந்து என்னைப் பார்த்தார்.

''என்ன சார் பார்க்கறீங்க ...? நிச்சயமாக அவர் தேவனில்லை சார். அதை விட அவர் தான் மனுஷர்னு சொல்லுங்க...ஒத்துக்கறேன். மனித நேயம் மிகுந்தவர்னு சொல்லுங்க சரின்னு தலையாட்டறேன். சான்றாண்மை மிக்கவர்ன்றதுக்கு அழுத்தமா உங்க கட்சியிலயே சேர்த்துக்கறேன்...ஆனா தேவன் என்றெல்லாம் தூக்கி வைக்கிறதை என்னால தாங்கிக்க முடியலை. ஐயம் ஸாரி...ஒரு ஆண் என்கிறவன் இப்படித்தான் இருக்கணும் என்பதற்கு கல்பனா சுமதியின் கணவர் முன்னுதாரணமாக இருந்திருக்கார்; முன் காலத்துல - அதாவது நான் சொல்றது - வரதட்சிணைன்ற பேரால கட்டினவளைக் கெரசின் ஊற்றிக் கொளுத்தற ஆண்கள் வந்துவிட்ட இந்தக் காலத்துக்கு முன்னால - கார் ஸ்கூட்டர், பிரிஜ்ன்ற ஆடம்பரப் பொருட்களின் தேவைக்காக - அதெல்லாம் சம்பாதிச்சு வாங்க வேண்டியவை, உழைச்சு அதன் மூலம் பெற வேண்டியவை என்பதை மறந்து கல்யாணம் என்கிற தரகு வியாபாரத்தின் மூலம் மிகச் சுலபமாக, கொஞ்சம் கூடச் சிரமமின்றி தங்களோட உழைப்புன்றது எதுவுமில்லாமல் மனைவியாகத் தன்னுடன் பகிர்ந்துக்க—சந்தோஷப்படுத்த வர்றவகிட்டேயிருந்து சுரண்டி எடுக்கப்பட வேண்டியவை என்கிற மனோபாவம் ஏற்பட்டு - அதெல்லாம் கிடைக்க வழியில்லாத போது எந்த அக்கினியை சாட்சியா வச்சுக் கை பிடிக்கறாங்களோ - அதே அக்கினிக்கு அவளை உயிரோட காவு கொடுக்கிற கயமை ஆண்கள் மனசுல ஏற்பட்டுக் கொழுந்து விட்டு எரியத் தொடங்கி இருக்கிற இந்த நிலைமைக்கு - வெகு காலத்துக்கு முன்னால் - ஆண்கள் ஆண்களா இருந்த காலம் ஒன்று இருந்தது. அப்போ அக்கினியை சாட்சி வச்சு அவங்க சொல்ற மந்திரம் என்ன என்பதை உணர்ந்து - அதை மதிச்சு நடந்தாங்க.

'இவளை என் சரி பாதியாக இவளுடைய கஷ்ட, துக்கங்களில் பங்கேற்று, எல்லாக் காரியங்களிலும் கை கொடுத்து, கடைசி வரை இவளைக் கைவிடாமல் காப்பாற்றுகிற சான்றாண்மை மிக்கவனாக இருப்பேன்...' என்று ஹோமகுண்டம் எழுப்பி அக்கினி வளர்த்து, அவளுடைய வலது கை பற்றி அந்த அக்கினியை வலம் வந்து சத்தியப் பிரமாணம் எடுத்துக்கறாங்களே ... அது பின்ன எதுக்கு சார்...? அர்த்த நாரீஸ்வரர் என்றொரு பாவம் சிவனுக்குத் தந்ததன் அர்த்தம் என்ன...? பெண் என்பவள் ஆணின் ஒரு பாதி - அதுவும் இதயம் இருக்கிற - இயங்குகிற இடது பாதி என்று முக்கியத்துவம் கொடுக்கத் தான். அதையெல்லாம் மறந்து பெண்ணைப் போகப் பொருளாகவும் - கற்பழிக்கத் துணிந்தவர்களாகவும் - மாற்றான் மனைவி என்பது தெரிந்தும் ராவணன் மாதிரி தூக்கிப் போகிறவர்களாகவும் - ராவணனைப் போலின்றித் தூக்கிப் போனவளை நாலைந்து பேர்களாகக் கற்பழிக்கிற சமாச்சாரங்களும் - கட்டின மனைவியைக் காசு கொண்டு வராத காரணத்திற்காகக் கொளுத்துகிற கயவர்களும் மிகுந்து போன காரணத்தினால்—

''கல்பனா சுமதியின் கணவர் உங்களுக்குக் கடவுள் மாதிரி தெரிந்திருக்கிறார். அவதார புருஷன் போலவும் - தேவன் என்கிற மாதிரியும் தோற்றமளித்திருக்கிறார். ஆனால் என் எண்ணப்படி - அவர் மனிதராக - ஒரு மனிதன் எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறு இருப்பவராக - கணவன் என்று கைப்பிடித்த தன் கடமையை மறந்து விடாதவனாக - அர்த்த நாரீஸ்வர தத்துவமும், பாவமும் இன்னும் நம்மை விட்டு மறந்து விடவில்லை என்பதை நிரூபிக்கிறவராக, மனிதாபிமானமும், மனித நேயமும் கொண்ட கம்பீரமான ஆண் தன்மையோடு நடந்து கொண்டிருக்கிறார் என்று சொல்லுங்கள் - அது ஒப்புக் கொள்ள வேண்டிய விஷயம். ஆணின் இயற்கை சுபாவம் இது தான் என்று அதை மறந்து போனவர்களுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார் என்று கூறுங்கள்; அதற்குத் தலை வணங்கு



கிறேன். இப்படித் தான் இருந்தது - இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற இயற்கையான சுபாவத்தை தேவன் என்றெல்லாம் தூக்கி வைத்து இது மனித சுபாவமில்லை, மனித இயற்கையில்லை என்கிறாற் போல் ஆக்கி விடாதீர்கள். ஏற்கெனவே மனித நேயம் குறைந்து கொண்டே வருகிறதோ என்று தோன்றுகிற எனக்கு இப்படி உயர்த்தி இவருக்குத் தேவ அந்தஸ்துக் கொடுக்கப் போக - மற்றவர்கள் எல்லாம் 'நம்மால் அப்படியெல்லாம தேவனாக முடியாதுப்பா...நான் ஒரு சாதாரண மனிதன்' என்கிற ஓர் சலுகையை எடுத்துக் கொண்டு ஓட்டைப் பிரித்து அதில் ஒளிந்து கொள்கிற அபாயம் இருக்கிறது.

''அதனால் இதுதான் இயற்கையான மனிதத்தனம் - மனித நேயம் - சான்றாண்மை - இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் - இது போல் தான் நடந்து வந்திருக்கிறார்கள் என்பது தான் நிஜம், உண்மையே தவிர—

' ''தேவத்தனம்'-என்று தனியாக ஒன்றில்லை, மனிதத் தனத்தையும் - மனித நேயத்தையும் தான் தாங்கள் அவ்வார்த்தைகளில் கூறுகிறீர்கள் என்று தான் இதைக் கொள்வேன், என்ன சரி தானே...?''

அவர் எழுந்து யோசித்துக் கொண்டே போனார். நீங்களும் யோசித்துப் பாருங்கள். என்னுடன் சேர்ந்து... இது மனிதத்தனம் தான் என்பதை ஒப்புக்கொள்வீர்கள்.

## 2. மாமியார் ஆகும் அம்மா

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி. பெயர் கமலத்தம்மாள் என்று வைத்துக் கொள்ளுங்களேன். வயசு ஐம்பது, ஐம்பத்தைந்து இருக்கும். நடுத்தர வர்க்கத்துக் குடும்பம்தான். கமலத்தம்மாளுக்கு ஒரு பெண்ணும், ஒரு பையனும் உண்டு. பெண்ணைத் தன் வசதிக்கேற்ற மாப்பிள்ளையாகப் பார்த்து, கணவர் வைத்து விட்டுப் போயிருந்த சேமிப்பு நிதியையும், தன்

நகைகளையும் போட்டுக் கல்யாணம் பண்ணிக் கொடுத் திருந்தார். புரசைவாக்கத்திலிருந்த அப்பெண்ணிற்கு வரிசையாக மூன்று பெண் குழந்தைகள்.

அதன் பின்னர் அரசாங்க உத்தியோகத்திலிருந்த தன் ஒரே மகனுக்குப் பெண் தேடத் தொடங்கினார். பார்த்த முதல் பெண்ணே மகனுக்குப் பிடித்துப் போயிற்று. ஆனால் கமலத்தம்மாளின் மனசுக்கு அத்தனைத் திருப்தி இல்லை. இதைவிட வசதியான இடமாகக் கிடைக்கும் என்று நினைத்தார். ஆனால் மகனோ பணத்தில் நாட்டமின்றிப் பெண்ணின் முக அழகில் லயித்துப் போய்விட, வேறு வழியின்றி அந்தப் பெண்ணையே மணமுடித்து வைத்தார்.

வீட்டிற்கு வந்த மருமகளுடன் கமலத்தம்மாளால் ஆறு மாதங்கள் கூடச் சேர்ந்திருக்க முடியவில்லை. நாள் தோறும் அம்மா மனைவியோடு மல்லுக்கு நிற்பதைப் பொறுத்துப் பார்த்த மகனும் ஒரு நாள் தாங்க இயலாத வனாக அந்த அம்மாவைக் கொண்டு வந்து புரசை வாக்கத்தில் இருந்த அக்கா வீட்டில் விட்டுப் போனான்.

அக்காவைத் தனியாக அழைத்துப் போய் அம்மா நடந்து கொள்கிற விதங்களைச் சொன்னான். புதிதாகத் திருமணம் செய்து கொண்ட மனைவியிடம் தன்னைப் பேசக் கூட விடாமல் செய்வதையும், ராத்திரி நேரங்களில் ஏதாவதொரு காரணத்தைச் சொல்லித் தங்கள் படுக்கை அறையின் கதவை இடித்துத் திறக்க வைப்பதையும்.

''கதவைப் போட்டுக்காதடா மணி...எனக்கென்னவோ இங்கத் தனியாப் படுக்கப் பயமா இருக்கு. நான் இப்படி வாசல்படியிலேயே தலைவச்சுப் படுத்துக்கிடறேன். நீ உள்ளாரப் படு...'' என்று அவர்கள் சேர்ந்திருக்க விடாமல் படுத்துகிற அத்தனை அவஸ்தைகளையும் சொல்லிக் குமுறினான்.

''அக்கா...நீ கொஞ்ச நாள் அம்மாவை உன் கூட வச்சிக்க. நான் அவளுக்குன்னு அங்க என்ன



செலவழிப்பனோ அதுக்கு மேலே நூறு ரூபாய் சேர்த்து மாசம் மூன்னூறு ரூபாய் கொடுத்துடறேன். அதுக்குள்ள நீ அம்மா கிட்டப் பேசி அவளை மாற்ற முயற்சி பண்ணு... என்ன...?''

மூன்று பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டிருக்கிற அந்த அக்காவிற்கு மாதம் மூன்னூறு ரூபாய் என்பது பெரிய உதவியாக இருந்தது. அந்தப் பணத்தைச் சேமித்துப் பெண்களுக்கு நகை, பாத்திரம் என வாங்கிக் கல்யாணத்தையே முடித்து விடுகிற கணக்கில் அந்த அக்கா அம்மாவிற்குப் புத்தி சொல்லித் திரும்பத் தம்பி வீட்டிற்கு அனுப்புவதற்குப் பதிலாகத் தம்பி மீதும், தம்பி மனைவியின் மீதும் புகாராகச் சொல்லத் தொடங்கினாள்.

அதைக் கேட்ட கமலத்தம்மாளின் மனசு இன்னமும் புகையத் தொடங்கிற்று. உள்ளுக்குள் காந்திக் காந்திக் கருகிற்று. மகளின் நோக்கம் புரியாமல் மகன் மீதும், மருமகள் மீதும் கசப்பு விஷம் மாதிரி ஏறிக் கொண்டே போயிற்று. கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்கு மேல் மகள் வீட்டில் இருக்கிற அந்த அம்மாள் மகனுக்குக் குழந்தை பிறந்ததற்குப் போகவில்லை. தொட்டிலிட்டுப் பெயர் வைத்ததற்கும் போகவில்லை. அவர்களாகக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து காட்டிய போதும் முகத்தைத் திருப்பிக் கொண்டவளாக அறைக் கதவை இழுத்துச் சாத்திக் கொண்டாள்.

இத்தனையும் தான் செய்து விட்டு வருவோர் போவோரிடமெல்லாம் மகனைப் பற்றியும், மருமகளைப் பற்றியும் குறைகளாகச் சொல்லிப் புலம்புவார். வயிற்றெரிச்சலோடு பேசுவார்.

''ஒரே பையன்னு மார்லயும், மடியிலயும் போட்டு வளர்த்தேங்க...இந்தக் கையால தூக்கி வச்சுக்கிட்டு சோறு ஊட்டினேங்க ... வீட்டுக்காரரு செத்துப் போனப்ப இவனுக்குப் பதினைஞ்சு வயசு ... அவரு அனாதையா விட்டுட்டுப் போனப்பா கூட இவன் இருக்கான்னு மனசைத்

தேத்திக்கிட்டு வாழ்ந்தேன். கட்டினவரு போனப்புறம் பெத்த புள்ளை காப்பாத்துவான்னு நினைச்சுக் கிட்டிருந்தேன். ஆனால் அவன் என்ன செய்தான் பார்த்தீங்களா...? அம்மாவே வேணாம்னில்ல மக வீட்ல கொண்டு வந்து தள்ளிட்டுப் போயிட்டான். பாவி...அவன் நல்லா இருப்பானா...? பெத்தவ வயிறெறிஞ்சா அவன் குடும்பம் உருப்படுமா...? நான் ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணுன்னு ஒரு மகனைப் பெத்த மாதிரி அவனுக்கும் ஒன்னு பொறந்திருக்குதில்ல...அது நல்லா இருக்—''

கேட்பவர்கள் தங்கள் காதுகளைப் பொத்திக் கொள்வார்கள். அவள் சொன்ன வார்த்தைகளின் தீட்சண்யம் தாங்காமல் புத்தி சொல்லத் தொடங்கு வார்கள்.

''அம்மா ... நீங்க இப்படிச் சொல்லக் கூடாது... பெரியவங்க நீங்க. உங்க வாயால இந்த மாதிரி சாபமிடக் கூடாது. சின்னஞ்சிறுசு அது. அதுக்கு என்ன தெரியும்...? அதை ஏன் சபிக்கிறீங்க...? அது மட்டும் யாரு...? உங்க பேரப்புள்ளை இல்ல...? உங்க ரத்தம் அந்த ஒடம்புல ஓடல...?''

சட்டென்று கமலத்தம்மாளின் பேச்சு பாதை மாறும். காற்று வீசுகிற திசையில் நெருப்பு மருமகளின் பக்கம் திரும்பி அனல் கக்கும்.

''...ஆமாங்க...நீங்க சொல்ற மாதிரி அந்தக் குருத்தை ஏன் நோகணும்...? அது என்னா செய்யும்...? எம் புள்ளை தான் என்ன செய்வான்...? எல்லாம் வீட்டுக்கு வந்தாளே... அந்த மகராசி செய்யற வேலை...வெள்ளைத் தோலைப் போட்டு மினுக்கி எம் மகனுக்கு என்ன மந்திரம் பண்ணினாளோ...எந்த சொக்குப் பொடி போட்டாளோ... தெரியலை...எம் புள்ளையும் அவ முந்தாணியைப் பிடிச்சுக் கிட்டுத் தொங்கறான். அம்மான்னு ஓடி வந்து ஒரு பலகாரம் வாங்கித் தரானா...? ஒரு புடவை எடுத்துத் தந்திருக் கானா...? கால் குந்துமணி வாங்கிப் போட்டிருக்கானா...?



என்னையொத்த புள்ளைங்க இருக்கிற எத்தனை அம்மாங்க கழுத்து நிறையச் சங்கிலியும், முழங்கை வரை வளையலுமா போட்டுக்கிட்டு வராங்க...? ஆனா...நான் எப்படிக் கிடக்கேன் பார்த்தீங்களா...? எல்லாம் அந்த நாசமாப் போறவளால வந்த வினைங்க...என் வயிறு எரியற மாதிரி அவ வயிறு எரியாது...? என் ரத்தம் கொதிக்காது...? அவளுக்குப் போற காலம் வராது...?''

காது கொண்டு கேட்க இயலாத அளவிற்கு வார்த்தைகள் காந்தும்...அதுவரை அந்த அம்மாளைச் சுற்றி நின்றவர்கள் மெல்ல விலகுவார்கள். அவளை விட்டு அகன்று 'என்ன பெண்மணி இவள்' என்று தங்களின் வெறுப்பைக் காட்டுவார்களே தவிர, அந்த அம்மாளின் முகத்திற்கு எதிரில் ஒரு வார்த்தை பேச மாட்டார்கள். அவள் சொல்வதை மறுக்க மாட்டார்கள்.

காரணம்...?

பயம்.

என்ன பயம் என்கிறீர்களா...?

அந்த அம்மாவின் நாக்குக் கொடுக்கிலிருந்து கொட்டுகிற விஷ வார்த்தைகளுக்கான பயம். அவளின் சாபம் வியாதியாகத் தங்களையும் தொற்றிக் கொண்டு விடக்கூடிய அபாயத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்கிற முன்னெச்சரிக்கை...

நான் கூட அந்த அம்மாவைப் பொது இடங்களிலோ... அல்லது ஏதாவது கல்யாணம் போன்ற வைபவங்களிலோ பார்க்க நேர்ந்தால்—

''சௌக்கியமாம்மா...?'' என்கிற ஒரே வார்த்தை யோடு நிறுத்திக் கொள்வேன். அதற்கு மேல் எது கேட்டாலும் அந்த அம்மாள் தன் புலம்பலை ஆரம்பித்து விடுவாள் என்பது தெரியும். நல்ல காரியத்திற்கு வந்திருக்கிற நினைவு கூட இன்றி - நாக்கு, கரி நாக்காக மாறிப் போகும்.

ஆனாலும் அந்த அம்மாள் விடமாட்டாள். நான் கேட்ட அந்த ஒரு சௌக்கியமாவைப் பிடித்துக் கொள்வாள். ஒரு நூலிழையைப் பற்றி வலை பின்னுகிற சிலந்திப் பூச்சியின் சாமர்த்தியத்தோடு மகன், மருமகளைப் பற்றின வசவுகளில் வலை பின்னத் தொடங்கி விடுவாள். அதனால் சில சந்தர்ப்பங்களில் அந்த அம்மாவைப் பார்ப்பதைத் தவிர்ப்பதன்றி எனக்கு வேறு வழி இருக்காது...

ஆனாலும் அந்த அம்மாவைப் பற்றி நான் நிறைய யோசித்திருக்கிறேன். அனுதாபத்துடன் மனத்திற்குள்ளாகவே அவளது பிரச்சினை என்ன என்று அணுகிப் பார்த்திருக்கிறேன்...எதனால் இவ்வாறு மாறிப் போனார் என்று என் அறிவிற்கு எட்டியதை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் முன்பாக—

இன்னொரு பெண்மணியைப் பற்றியும் உங்களுக்குச் சொல்லியாக வேண்டும். அவளையும் அறிமுகப்படுத்த வேண்டும். அந்த அறிமுகமும் கிடைத்த பின்புதான் இந்த முகம்—அதாவது கமலத்தம்மாளின் முகம் ஏன் இவ்வாறு கோணிப் போயிற்று என்பதை உணர முடியும். அறிவு பூர்வமாக ஆராய முடியும். அதனால் இங்கிலாந்தில் நான் சந்தித்த அந்தப் பெண்மணியைப் பற்றிச் சொன்ன பின்னால் இந்த முடிச்சு ஏன் விழுந்தது, எதனால் விழுந்தது - அதை எப்படி அவிழ்ப்பது என்கிற விவரம் தெரியவரும்.

## 3. அப்டன் பார்க்கில் ஒரு அம்மா

லண்டனில் அப்டன்பார்க் ரயில் நிலையம் என்று நினைக்கிறேன். டியூப் ரயிலில் போவதற்காகக் காத்துக் கொண்டிருந்தேன். நம் ஊர் ரயில் நிலையங்களில் போடப்பட்டிருக்கிற மாதிரி அங்கும் மரத்தால் ஆன பெஞ்சுகள் போட்டிருந்தார்கள். அந்த பெஞ்சு ஒன்றில் உட்கார்ந்து ரயில் வருவதை எதிர் நோக்கிக் காத்துக் கொண்டிருந்த



போது என் பக்கத்தில் கிட்டத்தட்ட ஐம்பது வயது மதிக்கக் கூடிய ஒரு ஆங்கிலப் பெண்மணி வந்து உட்கார்ந்தார். அவர் கையில் தீப்பெட்டியை விடச் சற்றுப் பெரிதான ஒரு டேப் ரிகார்டர் இருந்தது. அதை அடிக்கடி 'ஆன்' பண்ணி காதுகளில் ஹெட் ஃபோன் செருகி எதையோ கேட்டு வெகுவாக உச்சி குளிர்ந்து கொண்டிருந்தார். அவரது முகம் ஓர் அதித லயிப்பில் கிடந்தது. அதைப் பார்த்த போது இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாத ஒரு பரவசம் என்னையும் பற்றிக் கொண்டது. உலகச் சிந்தனைகள் எதுவுமற்று அந்தச் சின்னஞ்சிறு எலெக்ட்ரானிக் சாதனம் ஏற்படுத்தின ஒலியின் இனிமையில் மூழ்கி அப்பெண்மணி தன்னை மறந்து ஓர் அதித நிலையில் இருப்பதாகவே எனக்குப் பட்டது. நிஷ்டையில் ஆழ்ந்த ரிஷிகளின் பாவனை அதில் புலப்பட்டது. ஜே. கிருஷ்ணமூர்த்தி, சி. எஸ். பிள்ளை, அரவிந்தர், ரமணர், ராமகிருஷ்ண பரமஹம்சர் போன்றவர்கள் தங்களின் புத்தகங்களில் குறிப்பிட்ட 'Bliss' அப்பெண்மணியின் ஆத்மாவில் நிரம்பித் ததும்பி முகத்தின் வழியாக வெளிப்படுவதாகத் தோன்றிற்று.

அதைப் பார்த்த என்னால் என்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. எனக்குள்ளிருந்த எழுத்தாளியை அடக்க முடியவில்லை. பத்திரிகையாளியின் ஆர்வத்தை, குறுகுறுப்பைத் தவிர்த்துக் கொள்ள முடியவில்லை. பார்த்துக் கொண்டிருந்த போதே அப்பெண்மணியின் கண்ணிமைகள் மெல்ல நனைவது புலப்பட்டது. நான் தவித்துப் போனேன். அந்த அளவிற்கு மனதை உருக்குகிற இசை எதையோ கேட்டு புஷ்பாஞ்சலி மாதிரி கண்ணீராஞ்சலி செலுத்துகிறார் போலிருக்கிறது என்கிற முடிவிற்கு வந்து - அதற்கு மேலும் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிற சக்தியற்று மெதுவாக 'எக்ஸ்க்யூஸ் மீ' என்று கூப்பிட்டேன்.

அற்புதமான கனவு கலைந்து போன மாதிரி சடாரென்று கண்களைத் திறந்தவர் 'எஸ்...?' என்று என்னைப் பார்த்தார்.

''நீங்கள் ஏதும் இசை கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா''

என் கேள்வியில் அவரது பார்வை சட்டென்று மாறிற்று. அதில் நான் வருத்தப்பட்டுப் போனேன். ஒரு வேளை அதிகப் பிரசாங்கித்தனமாக அவரது அந்தரங்கத்தில் குறுக்கிட்டுத் தடை ஏற்படுத்தி விட்டேனோ என்பதில் எழுந்த குற்ற உணர்வோடு தயங்கியவாறு சொன்னேன்.

''அனாவஸ்யமாக வருந்துகிறேன். உங்களது உணர்வுகளில் குறுக்கிட்டு எதையோ கேட்டுக் கலைத்து விட்ட தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்...''

''இல்லை ... சொல்லுங்கள்...'' என்று பளீரெனச் சிரித்தார். சற்று முன் கண்ணீர் கரை கட்டின முகமா அது என்கிற பிரமிப்பை எனக்குள் ஏற்படுத்திற்று. வானத்தின் வர்ண ஜாலம் மாதிரித் தோன்றியது. மேகத்தினுள் மறைந்திருந்த சூரியன் வெளிப்பட்ட மாதிரி அந்தப் புன்னகை பிரகாசித்ததைக் கண்டு வியப்படைந்தேன். சட்சட்டென்று இத்தனை பாவங்களை மாறி மாறி ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய மனத்தையும், அதை வெளிப்படுத்துவதற்கென்றே ஏற்பட்ட முகத்தையும் படைத்த சிருஷ்டி கர்த்தாவின் கை வண்ணத்தை நினைத்து நான் உள்ளுக்குள் சிலிர்த்துப் போக—

என் எண்ண ஓட்டம் எதையும் பொருட்படுத்தாத அப்பெண்மணி மிகுந்த உற்சாகத்துடனும், எல்லையற்றுப் பெருக்கெடுத்த சந்தோஷத்துடனும் மெல்லிய குரலில் தொடர்ந்தார்.

''ம், நீங்கள் என்ன கேட்டீர்கள்? நான் கேட்பது சங்கீதமா என்றல்லவா கேட்டீர்கள்? எஸ்! ஒரு விதத்தில் இது எனக்கு சங்கீதம் தான். ராத்திரி - பகல் என்று கால நேரம் பார்க்காமல் கேட்கிற சங்கீதம். போகிற அத்தனை இடங்களுக்கும் கொண்டு போகிற சங்கீதம். என்னைச் சந்தோஷத்தின் உச்சியில் தூக்கிப் போய் நிறுத்துகிற சங்கீதம்...''



நான் யோசித்தேன். சந்தோஷத்தின் உச்சி என்பதன் வெளிப்பாடு கண்ணீர் தானோ?

''நீங்கள் அந்த இசையைக் கேட்க விரும்புகிறீர்களா?''

''உங்கட்குச் சிரமம் இல்லையெனில் உண்மையில் நீங்களும் இதைக் கேட்கிறீர்கள் என்பதே என்னை சந்தோஷப்படுத்தும்...''

அந்தச் சின்ன டேப் ரிகார்டரை அவரே என் காதருகில் கொண்டு வந்து வைத்துப் பொருத்தி இயக்கினார். அதிலிருந்து ஒரு ஆண் குரல் வந்தது.

''ஹலோ மம்...திஸ் ஈஸ் ஹாரி ... ரிப்போர்ட்டிங் டு யு ஃப்ரம் பிளாரிடா...ஹௌ ஆர் யு மம்...ஐ லவ் யு மம்...லவ் யு ஸோ மச்...ஈகர்லி வெய்டிங் டு மீட் யு ஆன் தி மதர்ஸ்டே மம்...''

—டக்கென்று குரல் மாறி பெண் குரல் வந்தது.

''மம்...திஸ் ஈஸ் எலைன் ஸ்பீக்கிங். ஹௌ ஆர் யு...? ஹௌ ஈஸ் தி வெதர் ஓவர் தேர்? லவ் யு மம்...மை கிஸ்ஸஸ் டு யு மம்...''

அந்தச் சின்ன டேப் சுழன்று நிற்கிற வரை மாறி மாறி ஹாரியின் குரலும் எலைனின் குரலும் கேட்டன. டேப் முடிந்ததும் ரிகார்டரை ஆஃப் பண்ணி விட்டு அதே பிரகாசமான முகத்தோடு அவர் சொன்னார்.

''ஹாரி எனது மகன்; என்னுடைய ஒரே பிள்ளை. பிளாரிடாவில் வேலையில் இருக்கிறான். எலைன் அவனது மனைவி. அவளை அங்கே சந்தித்துக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறான். இரண்டு பேருக்கும் கல்யாணமாகி இரண்டு வருஷங்கள் ஆகின்றன. குழந்தை பெறுவதை அடுத்த வருட ஜூன் மாதத்திற்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள்...''

கண்கள் மினுமினுக்க அவர் சொல்லிக் கொண்டே போனார். தன் மனசில் ஏற்பட்ட அத்தனை சந்தோஷத்தையும் என்னுடன் பகிர்ந்து கொண்டு விட வேண்டும்

என்கிற தவிப்பும், தாபமும் புரிய, இடையில் குறுக்கிடாமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தேன் நான்.

''அவர்கள் இரண்டு பேரின் குரலைப் பதிவு செய்து அடிக்கடி இப்படி காஸெட்டுகளாக அனுப்புவார்கள். இவற்றைத்தான் நான் மாற்றி மாற்றிப் போட்டுக் கேட்டுக் கொண்டிருப்பேன். இப்படி வேலைக்குப் போகிற போது - ரயிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிற போது - நான் வேலை செய்கிற பல் பொருள் அங்காடியின் உணவு இடைவேளை நேரத்தில் - வீட்டுக்கு வந்ததும் இதை ஆன் பண்ணி பெரிதாய் வைத்து விட்டு வீட்டில் ஒவ்வொரு காரியமாகக் கவனிப்பேன். இப்படி இடைவிடாமல் கேட்கிற இது எனக்கு சங்கீதம் தான். என் ஆத்மாவைத் திருப்திப் படுத்துகிற சங்கீதம். எனக்கே உயிரூட்டி தெம்பும் உற்சாகமும் தருகிற சங்கீதம். நிஜமாகச் சொல்லுங்கள்... நீங்கள் கேட்டீர்களே...அவர்களின் குரல்கள் இனிமையாக இல்லை...?''

என்னால் பேச முடியவில்லை. உணர்ச்சி வேகத்தில் நெகிழ்ந்து போனவளாக மௌனமாக இருக்க, அவரே தொடர்ந்தார்.

''...அவர்கள் இரண்டு பேரையும் நீங்கள் பார்க்க வேண்டும். எத்தனை ஜோடிப் பொருத்தம் தெரியுமா? எவ்வளவு மனசு ஒற்றுமை! அந்த மாதிரி அவர்கள் குடும்பம் நடத்துவதைக் கேட்க நான் பூரித்துப் போகிறேன். சந்தோஷத்தின் உச்சியில் மிதக்கிறேன். உங்களால் என் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிகிறதோ, என்னவோ''

சடாரென்று என்னையும் மீறி அவரது கைகளைப் பற்றிக் கொண்டு விட்டேன்.

''உங்களது உணர்ச்சிகளை என்னால் அப்படியே பரிபூரணமாகப் புரிந்து கொள்ள முடிகிறது. சந்தோஷத்தை அனுபவிக்க முடிகிறது. ஆமாம்...அவர்கள் உங்களைப் பார்க்க இங்கே வர மாட்டார்களா?''



''ஏன் வர மாட்டார்கள்...?'' அந்த அழுத்தமான த்வனியில் லேசான கோபம் படர்ந்த மாதிரி தோன்ற நான் பேசாமலே இருந்தேன். சின்னக் குழந்தையின் கோபத்தைத் தூண்டி அது பேசுகிற மழலையை ரசிக்கிற மனோபாவம் எனக்குள். மிக மௌனமாய் இருந்தேன். அவர் தன் பேச்சைத் தொடர்ந்து கொண்டே போனார்.

''ஒவ்வொரு வருஷமும் 'மதர்ஸ்டே' அன்று என்னைப் பார்க்க ஓடி வந்து விடுவார்கள். இரண்டு மூன்று நாட்கள் கூடவே தங்குவார்கள். வரும் போது என்னவெல்லாம் கொண்டு வருவார்கள் என்று நினைக்கிறீர்கள். ஒரு கூடைப் பழங்கள். விதம் விதமான கேக்குகள். இவற்றோடு அவர்கள் அலங்கரித்துக் கொண்டு வரும் பூச்செண்டு இருக்கிறதே...அதை நீங்கள் பார்க்க வேண்டும். அப்படியே அசந்து போய் விடுவீர்கள். எத்தனை வகைப் பூக்கள்! என்னென்ன வர்ணங்கள்! எத்தனை வாசம்! ஒரு வாரத்திற்கு அந்த வாசனை வீட்டை நிறைக்கும்...

''...அந்தப் பொக்கேவிற்காக எத்தனை டாலர்கள் செலவழித்திருப்பார்கள் தெரியுமா? அப்புறம் பழங்கள், கேக் வகைகள்...எல்லாம் அவர்கள் உழைத்துச் சப்பாதித்த பணத்திலிருந்து வாங்கப்பட்டவை. என் பொருட்டு, வருடா வருடம் மதர்ஸ்டே அன்று என்னைப் பார்க்க வேண்டுமென்று எத்தனை தூரத்திலிருந்து விமானத்திற்குச் செலவு பண்ணிக் கொண்டு வருகிறார்கள்! இதற்காக இருவரும் தனித் தனியாகச் சேமிக்கிறார்கள். மாதா மாதம் ஒரு தொகையை மதர்ஸ்டே கொண்டாட்டத்திற்காக என்றே ஒதுக்குகிறார்கள். எத்தனை உயர்ந்த மனசு பார்த்தாயா அவர்களுக்கு...

''இப்படி ஓடி வராமல் ஒரு வாழ்த்து அட்டை அனுப்பலாம். அல்லது தபாலில் ஏதாவது பரிசுப் பொருளை அனுப்பலாம். அதையெல்லாம் செய்யாது என் பொருட்டு, என்னைப் பார்ப்பதன் பொருட்டு தங்களின் பணம், நேரம் இரண்டையும் செலவழித்துக் கொண்டு

வருஷம் தவறாமல் ஓடி வருகிற அந்த அன்பு இருக்கிறதே... அது தான் என்னை நெகிழச் செய்கிறது. உருக வைக்கிறது. மனதைத் தொடுகிறது. அவர்களின் அந்த நிஜமான பிரியத்திற்கு நான் தலை வணங்குகிறேன். மானசீகமாக மரியாதை செய்கிறேன்...''

உருகி வெளி வந்த வார்த்தைகளின் உணர்ச்சி வேகம் என்னையும் தாக்க - நான் அசட்டுத்தனமான கேள்வி ஒன்றைக் கேட்டு வைத்தேன்.

''அவர்கள் இவ்வளவு பிரியமாக இருக்கிற போது நீங்களும் பிளாரிடா போக வேண்டியது தானே? இங்கே ஏன் இருக்கிறீர்கள்?''

அந்தக் கேள்விக்குப் பின்னர் அவர் என்னைப் பார்த்த பார்வை இருக்கிறதே...என் வாழ்க்கையின் கடைசி வினாடி வரை மறக்காது. ஒரு வினாடிக்குப் பின்னர் மிக மிக நிதானமாக ஆரம்பித்தார்.

''நான் ஏன் அங்கே போக வேண்டும்? என் வேலை இங்கே இருக்கிற போது; அங்கு எனக்கு என்ன வேலை? அதுவும் அவர்களது வாழ்க்கையில் - தனிமையின் சந்தோஷத்தில் எதற்காக என்னைக் குறுகிடச் சொல்கிறீர்கள்? ஒவ்வொருவரையும் தனித்தனி மனிதர்களாகப் பார்க்காமல் பந்தங்களினால் பின்னப்பட்ட வலையை விரித்துப் பார்ப்பது எனக்குப் பிடிக்காது. அவன் எனக்கு மகனாக இருக்கலாம். அது வெறும் விபத்து. இந்த ஹாரியைத்தான் பெற வேண்டும் என்று நினைத்து நான் ஏங்கித் தவமிருந்து பெறவில்லை. அவனும் நான் தான் அம்மாவாக இருக்க வேண்டுமென்று வரம் பெற்று வரவில்லை. பெற்ற காரணத்திற்காக நானும் - பிறந்த காரணத்திற்காக அவனும் எதற்காக ஒருவருக்கொருவர் சுமையாகிப் போக வேண்டும்? சிலுவையைச் சுமக்கிற மாதிரி சுமக்க வேண்டும்? அவன் இருக்கிற இடத்தில் வாழ்க்கையைச் சந்தோஷமாகக் கழிக்கிறான். நானும் இங்கே நிம்மதியாக இருக்கிறேன்- இந்த நிம்மதியையும்,



சந்தோஷத்தையும் தவிர வாழ்க்கையில் வேறு என்ன இருக்கிறது என்று சொல்லுங்களேன், பார்க்கலாம்?''

ஒரு வினாடி என் உடம்பு, மனசு எல்லாம் சிலிர்த்துப் போயிற்று. எத்தனை சுலபமாய் வாழத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள். வாழ்க்கையின் தத்துவத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். மனசு நிம்மதியைத் தேடி எங்கெங்கோ ஓடுகிற நமக்கு இந்தச் சுலபமான விஷயங்கள் ஏன் பிடிபடுவதில்லை?

அப்டன்பார்க் ரயில் நிலையத்தில் நான் சந்தித்த அந்தப் பெண்மணி புதிதாக எதையும் சொல்லி விடவில்லை. நம் ஞானிகளும், தத்துவ அறிஞர்களும் சொல்லாததைச் சொல்லி விடவில்லை.

'முன்னர் நமதிச்சையினாற் பிறந்தோமில்லை
முதலிறுதி இடை நமது வசத்தில் இல்லை'

என்று பாரதி என்றோ சொல்லி விட்டுப் போய் விட்டான். அதை அந்தப் பெண்மணி படித்திருக்க முடியாது. அதற்கான சாத்தியக்கூறு இல்லை. ஆனால் நாம் படித்திருக்கிறோம். படிக்கவில்லையானாலும் இனி படிக்க முடியும்.

இதில் ஒரு வித்தியாசம் என்னவென்றால் நாம் படிக்க மட்டுமே செய்கிறோம். அவர்கள் அதை நடைமுறை வாழ்க்கையில் கடைப் பிடித்துக் காட்டுகிறார்கள். அவ்வளவு தான்...

எப்போதோ 1986-ம் வருடம் ஜனவரிக் குளிரில் அப்டன்பார்க் ரயில் நிலையத்தில் நான் சந்தித்த - பெயர் கூடத் தெரியாத அந்தப் பெண்மணியை மறக்க முடியாமல் மனதில் அழுத்தமாகப் பதிந்து போனதை இப்போது எதற்காக எழுதினேன் என்றால்—

முன்னர் குறிப்பிட்டிருந்த அந்த கமலத்தம்மாளுக்காக. கமலத்தம்மாள் என்கிற பெயரும் - அக்குணாதிசயங்களும் ஒரு குறிப்பீடுதான். வெறும் அடையாளம் தான். அந்த

மாதிரி ஒரு கமலத்தம்மாள் மட்டும்தான் நம்மிடையே இருக்கிறார் என்று நினைத்து விடாதீர்கள். உங்களுக்குத் தெரிந்தே அது போல் எத்தனையோ கமலத்தம்மாள்கள் இருப்பார்கள். நீங்கள் பார்த்திருப்பீர்கள். கேள்விப் பட்டிருப்பீர்கள். ஏன், உங்களில் யாராவது ஒருவரது குடும்பத்திலேயே கூட இருக்கலாம்.

இப்படிப்பட்ட கமலத்தம்மாள்களின் செய்கைகளுக்கு, பேச்சுக்களுக்கு, வாய் ஓயாது புலம்புகிற புலம்பல்களுக்கு எது காரணம்...யார் காரணம் என்பதை நான் யோசித்துப் பார்த்தேன். மெல்ல அவர்களின் மனதை அனுதாபத்துடன் அணுகிப் பார்த்தேன்.

அப்போதுதான் அவர்களின் அடி மனதில் புதைந்து கிடக்கும் இன்செக்யூரிட்டி எனக்குப் பிடிபட்டது. அதாவது பாதுகாப்பற்ற உணர்ச்சி, தனியாய் விடப்பட்டு விட்ட பயம். அதனால் ஏற்படுகிற பாதிப்புகள். தன் மகன் - தனக்குச் சொந்தமானவன் என்பது மாறி, அவன் இன்னொரு பெண்ணின் கணவன்; இனி அவனுக்குச் சொந்தமானவன் என்கிற யதார்த்தத்தைத் தாங்கிக் கொள்கிற பக்குவமற்ற நிலை...மகன் தன் கையை விட்டு நழுவிப் போய் விடுகிற ஏமாற்ற உணர்ச்சி...இனி தன்னைக் கவனிக்காமல் - தனக்கு எதுவும் செய்யாமல் மூலையில் ஒதுக்கி விடுவானோ என்கிற தாழ்வு மனப்பான்மையில் ஏற்படுகிற கொந்தளிப்பு...தானும் இது போன்று ஒரு தாயின் மகளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்தவர் தான் என்கிற உணர்வு மங்கிப் போகிற அளவில் எழுகிற - எழச் செய்து விடுகிற அடி மனதில் உருவாகி விட்ட பாது காப்பற்ற கைவிடப் பட்டது போன்ற பிரமை...

ஆம்; இவைகள் பிரமைகள்தான். இப்பிரமைகள் உருவாவதின் காரணம் என்ன என்று இப்போது அடி வேருக்குப் போவோமானால்—

அப்போது அங்கே வெளிப்படுகிற காலம் காலமாக ஓர் ஆணைச் சார்ந்தே வாழ்ந்து பழக்கப்பட்டு விட்ட பெண்



களின் நிலை புரிய வரும். முதலில் அப்பா, அல்லது சகோதரர்கள், அடுத்துத் திருமணமானவுடன் கணவனைச் சார்ந்திருத்தல் - அதன் பின்னர் பெற்ற பிள்ளைகளிடம் சார்ந்து அவர்களிடமிருந்து எதிர்பார்த்தல்...

இந்த 'சாருதல்' முற்றிலும் தவறு என்றோ அவ்வாறு எதிர்பார்ப்பது குற்றம் என்றோ நான் சொல்ல வரவில்லை. ஒருவேளை அந்த எதிர்பார்ப்புத் தவறாகிப் போகிற பட்சத்தில் - சாருதல் கிடைக்காமற் போகுமானால்—

அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய பக்குவமும், மனோ தைரியமும், திடமும் வர வேண்டும் என்பது தான் நான் சொல்ல வந்தது.

சரி, இந்தப் பக்குவமும், மனோ தைரியமும், இடமும் எப்படி வரும்? எப்போது வரும்? எதனால் வரும்?

ஒரு பெண் தன் சுய பலத்தில் நிற்கக் கூடிய - தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளக் கூடிய - தன் சுய தேவை என்பதைத் தானே பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய அளவில் என்று பொருளாதார வசதி பெறுகிறாளோ... என்று தன் செலவிற்குத் தான் சம்பாதிக்கிற வழியைத் தேடிக் கொள்கிறாளோ...

அப்போது தான் அந்தத் திடம், தன்னம்பிக்கை, தைரியம் எல்லாம் வரும். பந்தங்களை இணைத்து முடிச்சுகள் போட்டு சிரமப்படாமல் - மற்றவர்களையும் சிரமப்படுத்தாமல் அப்டன் பார்க்கில் நான் சந்தித்த பெண் மணியைப் போல் மனிதர்களைத் தனித்தனியாகப் பார்க்கக் கூடிய தெளிவு வரும். ஞானம் ஏற்படும்.

'என் மகன் எனக்குச் செய்யவில்லையே...என்னை இப்படி ஒதுக்கித் தள்ளி விட்டானே...' என்கிற சுய பரிதாபக் கூக்குரல் நின்று—

'எதற்காக என் மகன் எனக்குச் செய்ய வேண்டும்? என் தேவைக்கு நான் சம்பாதிக்கிறபோது அவனிடமிருந்து ஏன் எதிர்பார்க்க வேண்டும்?'

—என்கிற ஒரு நிலையை நாம் எட்ட வேண்டும் என்று நினைக்கிறேன். ஆசைப் படுகிறேன். கனவு காண்கிறேன். என் கனவு நனவாக வேண்டுமானால்—

நாம் யோசிக்க வேண்டும். யோசனையின் முடிவைச் செயலில் காட்ட வேண்டும். அப்பளம் செய்வதிலிருந்து ஐ.ஏ.எஸ்தேர்வு வரை பெண்களின் சுய சம்பாத்தியத்திற்கு-தார்மீக வழிக்கு எத்தனையோ மார்க்கங்கள் இருக்கின்றன. வெறும் மார்க்கங்கள் மட்டும் இருந்து பலனில்லை. மனசு வேண்டும். உழைக்க அரு துணிய வேண்டும். உட்கார்ந்து சாப்பிட வெட்கப்பட வேண்டும். பிறரிடமிருந்து எதிர்பார்க்கிற கேவலத்தைக் கை விட வேண்டும்.

நாம் உருவாக நினைப்பது அப்டன் பார்க்கில் சந்தித்த பெண்மணியைப் போன்றே தவிர - கமலத்தம்மாக்களாக இல்லை அல்லவா?

## 4. உடல் வலிவும் மன வலிவும்

பெண்கள்-பூக்கள். வானத்து வெண்ணிலவு, அன்னம், கிளி, மான், மயில் என அழகான, சாதுவான, மிருதுவான ஆபத்தில் கூடப் போராடுகிற வலிமையற்ற பட்சிகள், அவர்களின் முகங்கள் நிலவைப் பிடித்துச் சில கறைகள் துடைத்து குறு முறுவல் பதித்த கண்ணாடி முகங்கள். கண்கள் கமலப் பூக்கள், நாசி செண்பகப்பூ. கன்னங்கள் ரோஜாக்கள். உதடுகள் கோவைக்கனி. நிறம் தாழம்பூ.

இவ்வாறெல்லாம் பெண்களை மிக மிக மென்மையானவர்களாக, நளினமானவர்களாக, உடற் பலம் குறைந்தவர்களாக வர்ணிப்பதும் - ஒப்பு நோக்குவதும் கவிஞர்களுக்கும் கதாசிரியர்களுக்கும் கை வந்த கலையாக இருந்திருக்கிறது. இன்றைய கவிஞர்களும், கதாசிரியர்களும் மட்டுமில்லை, காளிதாசனிலிருந்து, கம்பன் வரை இதையே செய்திருக்கிறார்கள்; சொல்லியிருக்கிறார்கள்.



வனம் சென்ற ராமனும், சீதையும் ஓரிடத்தில் உலாவுகிற போது சற்று தூரத்தில் நடக்கிற சீதையைப் பார்த்து ராமன் நினைத்துக் கொள்கிறாராம்.

'இவளது நடை அன்னத்தின் நடையைப் போன்று எத்தனை அழகாய், மென்மையாய் இருக்கிறது.'

அதே சமயம் சிறிது தூரத்தில் போகிற யானையைப் பார்க்கிற சீதை. 'ராமனின் நடை இந்த மத்த கஜத்தின் நடையைப் போன்று எத்தனை கம்பீரமான ஆண்மை மிக்க நடையாக இருக்கிறது' என்று எண்ணிக் கொள்வதாக கம்பன் எழுதியிருக்கிறார்.

ரசனைக்கு இது ஒரு எடுத்துக் காட்டு எனலாம். இன்றைய கவிஞர்கள் (மரபுக் கவிஞர்களாகட்டும், புதுக் கவிஞர்களாகட்டும்) இதே போல் பூக்களையும் - பெண்களையும், மானையும் - பெண்களையும், தண்ணிலவையும்-பெண்களையுமே உவமையாக்குவதில் குறைந்தவர்களில்லை. கதாசிரியர்களும் அப்படித்தான்.

கவிநயம், இலக்கிய நயம் என்று பார்க்கிற போது இது அதி அழகாகத் தெரிகிறது. ரசனையின் வெளிப்பாடாகிறது. சிரிய, செம்மையான ஒப்பிடுதல் எனச் சொல்லத் தோன்றுகிறது. பெண்களுக்கு இயற்கையாக உள்ள உடல் மென்மையையும், உள்ளத்தின் மென்மையையும், கனிவையும், இரக்க சுபாவத்தையும், தாய்மை உணர்வையும் குறிப்பிடுகிற ஒரு குறியீடு என்கிற முறையில் இவற்றை நானும் ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால் நடைமுறை என்று வருகிற போது - அதுவும் இன்றைய கால கட்டத்தில் பெண் என்பவள் ஆணுக்கு நிகராக, சரிசமானமாக எல்லாவற்றிலும் பங்கு எடுத்துக் காரியமாற்ற வேண்டிய தற்போதைய சூழலில் பூவாகவும், மானாகவும், மயிலாகவும் இருக்கக் கூடுமா - இருக்கலாமா என்ற கேள்வி எனக்குள் எழுந்த போது—

இப்படிப்பட்ட கவிதைகளும், கதைகளின் வர்ணனைகளும், ஒப்புவமைகளும் பொருந்தாத ஒன்றாகவே நான்

கருதுகிறேன். ஒரு பெண் என்பவள் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்கிற வரையறைகளும், இலக்கிய வரம்புகளும், எதிர்பார்ப்புகளும், பெண்மை என்பதன் இலக்கணங்களும் மாறுபட வேண்டிய ஒரு சூழ்நிலை நிர்பந்தத்தில் நிற்பதாகக் கருதுகிறேன். அல்லது அப்படிப் பட்ட நிர்பந்தங்களில் அவள் விரட்டப்பட்டு விட்டதாக உணர்கிறேன். தற்காத்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் உருவாகி விட்டதை மனதில் கொள்ள வேண்டுகிறேன்.

அதனால் பூக்களையும், நிலவையும், மானையும், மயிலையும், அன்னத்தையும் விட்டு விட்டு 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகள், நிமிர்ந்த ஞானச்செருக்கு இவற்றோடு- ஒரு பெண் அவளுக்குள் ஆண்மையையும் சற்றே கலந்து கம்பீரமானவளாக நின்றாக வேண்டிய தருணம் இது என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எப்படிச் சேரன் செங்குட்டுவனின் வாளையும், வில்லையும் எடுத்துக் கொண்டு இன்றைய விஞ்ஞான யுகத்தில் போருக்குப் புறப்பட முடியாதோ - அதே போல் பெண் என்பவள் மானாக, மயிலாக, பூவாக, புன்னகை மாறாத தண் நிலவு முகத்தினளாக இருக்க முடியாது - இருக்கவும் கூடாது என்பதைத் திடமாய், தீர்க்கமாய், அழுத்தமாய், ஆழமாய் நெஞ்சில் பதிய வைக்க வேண்டும் என்பதற்காக ஓர் உண்மைச் சம்பவத்தை உங்களுக்கு எடுத்துச் சொல்கிறேன்:

புது டெல்லி. இந்திரப் பிரஸ்தா கல்லூரியில் எம். ஏ. இறுதியாண்டு படிக்கிற மோனிஷா வர்மா என்கிற கல்லூரி மாணவி. இவர் மேற் சொன்ன கவிஞர்களின் வர்ணனை களைப் போல் பூப்போன்ற மிருதுவான தொட்டால் உதிரக் கூடிய, அல்லது கசங்கி விடுகிற மலர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவரல்ல. மனித சந்தடிக்கும், காலடிச் சத்தத்



திற்கும் பயந்து ஓடி விடுகிற மானின் வர்க்கமோ, மயிலின் வர்க்கமோ அல்ல.

மோனிஷா வர்மா டெல்லி மாநில ஆக்கி வீராங்கனை. அவரது கல்லூரி டென்னிஸ் மற்றும் கிரிக்கெட் விளை யாட்டின் காப்டன். அதாவது தலைவி; இவை தவிர கைப்பந்து, கூடைப்பந்து போன்றவற்றிலும் தேர்ச்சி பெற்றவர். இவரது தந்தை கடற்படை விளையாட்டு வீரர். தாயும் மிகச் சிறந்த விளையாட்டு வீராங்கனை; பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகிறவர்.

இவ்வாறு ஒரு விளையாட்டு வீரக் குடும்பத்தில் பிறந்த மோனிஷா நல்ல உடல் வலிமையும், மனோதிடமும், உயர மான உருவமும் கொண்டவர்.

அவரது கல்லூரியில் சுதந்திர தினவிழா கொண்டாட் டத்திற்காக முன்னாள் கிரிக்கெட் காப்டன், சுழல் பந்து வீச்சாளர் பிஷன் சிங் பேடியை சிறப்பு விருந்தினராக அழைப்பதற்காகக் கல்லூரி முதல்வரின் சிபாரிசுக் கடிதத்தை வாங்கிக் கொண்டு பட்டப் பகலில் - சூரியன் பளிச்சென்று பிரகாசிக்கிற பதினொரு மணியளவில் மோனிஷா, பேடியை சந்திக்க இஸ்பத்பவனுக்குச் சென்றார்.

பிஷன் சிங் பேடி அங்கு இல்லை. இந்திய விளையாட்டுக் கழகக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்று விட்டார். எனவே அழைப்பிதழை அங்கு கொடுத்து விட்டு மீண்டும் கல்லூரி போவதற்காகப் புறப்பட்டுப் பஸ்ஸிற்காகக் காத்து நின்றார் மோனிஷா.

அப்போது அங்கு ஒரு பஸ் வர மோனிஷா முன் பகுதியில் இருந்த டிரைவரிடமும், கண்டக்டரிடமும் 'இந்திரப் பிரஸ்தா கல்லூரி' வழியாக அப் பஸ் போகுமா எனக் கேட்டிருக்கிறார்.

''ஓ.எஸ். போகும். ஏறிக் கொள்ளுங்கள்'' என்று கண்டக்டர் கூற,

மோனிஷா பின்பக்கக் கதவு வழியாக பஸ்ஸில் ஏறிக் கொண்டார். பஸ்ஸிலிருந்து இறங்குகிற கதவுக்கு அருகில் இருந்த ஸீட்டில் உட்கார்ந்து கொண்டார். உட்கார்ந்த பின் பஸ் கிளம்பிற்று. கிளம்பிய பின்னரே பஸ்ஸில் தன்னைத் தவிர கண்டக்டரையும், டிரைவரையும் சேர்த்து, ஆறே ஆண்கள் மட்டும் இருப்பதைக் கவனித்தார். பெண் பயணிகள் யாருமே இல்லாததை உணர்ந்தார்.

இதற்குள் டிரைவரின் அருகில் நின்று கொண்டிருந்த கண்டக்டர் மோனிஷாவின் அருகில் வர, மோனிஷா கைப்பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்துத் தான் போக வேண்டிய இடத்திற்கு டிக்கெட் கேட்டார். அசட்டுச் சிரிப்புச் சிரித்த கண்டக்டர் பணத்தை வாங்குவதற்குப் பதிலாக மோனிஷாவின் கையைச் சடாரென்று பற்றிக் கொண்டார்.

"நீ எதுக்கு டிக்கெட் வாங்கணும்...? டிக்கெட் வாங்க வேண்டிய அவசியமே இல்லை..." என்று சொல்லி மோனிஷாவைப் பற்றி தன் பக்கம் இழுத்தார்.

அதிர்ந்து போனார் மோனிஷா. ஒரு வினாடி என்ன செய்வதென்று தெரியாத நிலையில் பஸ்ஸின் பின் பகுதியில் உட்கார்ந்திருந்த அந்த நான்கு ஆண்களில் யாராவது தன் துணைக்கு - அல்லது உதவிக்கு வரக்கூடும் என எதிர்பார்த்துப் பார்வையில் அவர்களைக் கெஞ்சினார். ஆனால் அந்த நால்வரும் திரைப் படங்களில் வில்லன் கதாநாயகியைக் கட்டி இழுத்துப் பலவந்தப்படுத்துகிற காட்சியை ரசிக்கிற பாவனையில் கண்டக்டர் மோனிஷாவின் கையைப் பற்றி இழுப்பதைப் பார்த்து ரசிப்பதை உணர்ந்த மோனிஷா இன்னமும் பதைத்துப் போனார். அந்த நால்வரும் பயணிகள் இல்லை, டெல்லி போக்குவரத்துக் கழக ஊழியர்கள் - அந்த பஸ்ஸின் கண்டக்டர், டிரைவர்களின் நண்பர்கள் - காக்கிச் சீருடை அணிந்திருப்பவர்கள் என்பதைப் புரிந்துக் கொண்டார். எப்படிப்பட்ட இக்கட்டான நெருக்கடி நிலைமையில் தான்



தனியாக மாட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவு கிரகித்துக் கொண்டிருந்த போதே—

அந்த நால்வரும் எழுந்து அவளை நெருங்கி வந்தனர். அவளது தோளில் தொங்கின பையைப் பிடித்து அவளைத் தங்கள் பக்கம் இழுக்க முயன்றனர். ஐந்து பேர்களுக்கிடையில் சிக்கிக் கொண்ட மோனிஷா அந்த அதிர்ச்சியில் செயலிழந்து தன்னை விட்டு விடுமாறு கெஞ்சினார். கண்களிலிருந்து கண்ணீர் பெருக அவர்களிடமிருந்து விடுபட எண்ணிக் கை கூப்பி வேண்டினார்.

ஆனால் அவர்களோ அதற்கெல்லாம் இளகுபவர்களாக இல்லை. வில்லன் சிரிப்புச் சிரித்துக் கொண்டே...

"ஓ...ஸ்வீட்டி ... கமான்...வாட் எ ஃபினிக் யு ஹேவ்... லெட் அஸ் ஹேவ் ஸம் ஃபன்..." என இன்னமும் வலிமையாய், இறுக்கமாய்ப் பற்றி அவரை அணைக்க முயல—

ஐந்தடி ஆறங்குல உயரமும், விளையாட்டினாலும், உடற்பயிற்சி காரணமாக நல்ல திடமான உடலும், அதற்கு மேலான மனோ வலிமையும் கொண்ட மோனிஷா சட்டென்று கெஞ்சுவதையும், கண்ணீர் வடிப்பதையும் விட்டு செயல்பட ஆரம்பித்தார்.

அந்த ஐந்து பேரையும் தன் வலிமையான கைகளால் ஒரே தள்ளாகத் தள்ளி விட்டு ஓடி பஸ்ஸின் முன் பக்கக் கதவைத் திறந்து ஓடும் பஸ்ஸிலிருந்து கீழே குதித்து விட முடிவு செய்தார். ஆனால் கண்டக்டரும், மற்றவர்களும் அவரை அவ்வளவு சுலபமாகத் தப்பிக்க விடவில்லை. ஓடி வந்து அவரைப் பிடித்து இழுத்து உள்ளே தள்ளினார்கள்.

மோனிஷா தான் உட்கார்ந்திருந்த ஸீட்டின் பின்பக்க ஜன்னல் அருகே மாட்டிக் கொண்டார். அவரைத் தப்ப விடாத கையில் சிக்க வைத்து விட்ட சந்தோஷத்துடனும், வெறித்தனத்துடனும் அந்த ஐவரும் சுற்றி வளைத்து நெருங்கி அவரருகே தங்கள் முகங்களைக் கொண்டு போக—

மோனீஷா இன்னமும் வலிமை பெற்ற மனம் கொண்டவராக - தான் அடிக்கும் கிரிக்கெட் பந்து, டென்னிஸ் பந்து, கூடைப் பந்துகளாக அவர்களை நினைத்துக் கொண்டு தன் கால்களாலும், கைகளாலும் அத்தனை பலத்தையும் பிரயோகித்து அவர்களை ஓங்கி உதைத்துத் தள்ளினார்.

அதைச் சிறிதும் எதிர்பார்க்காத அவர்கள் ஸீட்டுகளில் மோதி விழுந்தனர். முகத்திலும், தலையிலும் பட்ட காயத்தின் வலியில் அவர்கள் முனகின சமயத்தில் சடாரென்று எழுந்த மோனிஷா முன் பக்கக் கதவைத் திறந்து மீண்டும் வெளியில் குதிக்க முயன்றார்.

அதற்குள் இவரில் ஒருவன்-லேசாகக் காயம்பட்டவன்- மோனிஷாவைக் கீழே குதிக்க விடாமல் அவரது வலது காலையும், கையையும் பற்றிக் கொண்டான். மோனிஷாவின் உடலின் இடப்பகுதி பஸ்ஸின் வெளியில் தொங்கிற்று. வலது காலையும் கையையும் உள்ளே இருந்தவன் காயப்படுத்தத் தொடங்க—

மோனிஷா விடாமல் போராடினார். தன் பலம் முழுதையும் திரட்டி அவனையும் சேர்த்து வெளியில் இழுத்தார். இருவரும் ரோடில் விழுந்து உருண்டனர். கீழே விழுந்தவன் எழுவதற்கு முன் சடாரென்று எழுந்து கொண்ட மோனிஷா அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோ ரிக்ஷாவை நோக்கி ஓடினார். அந்த ஆட்டோ ரிக்ஷாக் காரர் - மனிதாபிமானம் மிகுந்த நிஜமான ஆண் மகன் - நிலைமையை வினாடியில் புரிந்து கொண்டு மோனிஷா ஆட்டோவில் ஏற உதவி செய்ததுடன் அதி வேகமாக ஆட்டோவைச் செலுத்தி அவரைக் காப்பாற்ற உதவி செய்தார்.

இந்த நிகழ்ச்சியினால் மோனிஷா அதிர்ச்சியடைந்து செயலிழந்து போயிருந்தார். கல்லூரிக்குச் சென்ற உடனே அவர் மயங்கி விழுந்து விட்டிருக்கிறார். உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டு சிகிச்சை அளிக்கப்



பட்மருக்கிறார். எக்ஸ்ரே எடுக்கப்பட்டிருக்கிறது. எலும்பு முறிவு எதுவுமின்றி வலது முழங்காலில் சுளுக்கும், லேசான காயங்களுடனும் பட்டப் பகலில் ஓடும் பஸ்ஸில் ஐந்து மனித மிருகங்களுடன் போராடித் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு மோனிஷாவால் ஓடி வர முடிந்ததென்றால்—

அதற்குக் காரணம் உடல் வலிமை. இங்கு நான் மனோவலிமை என்று கூட வலியுறுத்திச் சொல்ல விருப்பப் படவில்லை. ஏனெனில் இது போன்ற சந்தர்ப்பங்களில் எந்தப் பெண்ணுக்கும் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்கிற மனோவலிமை ஏற்படும். எப்படியாவது தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றும். இதே உதிரிப் பூக்களில் முதல் பூவாக எடுத்து நான் மாலை தொடுக்க ஆரம்பித்த கல்பனா சுமதிக்குக் கூடத் தன்னைக் காத்துக் கொள்கிற உத்வேகமும் ஆவேசமும் வெறியும் ஏற்பட்டிருக்கும். அந்த மனோவலிமையும், திடமும் இருந்திருக்கும். ஆனால் மனத்தில் இருந்த திடமும் வலிமையும் உடலில் இல்லாத காரணத்தால் - உடற் பயிற்சி, விளையாட்டு என எதிலும் அக்கறை காட்டாமல் வெறும் படிப்பு, வீட்டு வேலை, பாடம் சொல்லித் தருதல் என்பதோடு நின்று விட்ட காரணத்தால் கல்பனா சுமதி யினால் அவரைத் தாக்கின மனித மிருகங்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. ஆரம்பத்தில் நான் சொன்ன மாதிரி பூவாக, மானாக, மயிலாக இருந்ததனால்தான் அவர் அம்மிருகங்களின் கால் களில் நசுங்கி, வாயினால் கவ்விக் கொண்டு போகப்பட்டு குற்றுயிராக்கப்பட்டு வீசி எறியப்பட்டு விட்டார்.

ஆனால் மோனிஷா என்ற இந்தக் கல்லூரி மாணவி பெண்மையின் மென்மையை மனதில் தேக்கி - உடலை வலிமையானதாகவும், உறுதியானதாகவும் ஆக்குகிற வகையில் உடற்பயிற்சி, விளையாட்டு என உருவேற்றிக் கொண்டதனாலேயே இவரால் தன்னைத் தானே காத்துக் கொள்ள முடிந்திருக்கிறது.

டெல்லியில் பட்டப் பகலில் - ஓடுகிற பஸ்ஸில் நடந்த இந்தச் சம்பவம் - மோனிஷா வர்மா என்கிற கல்லூரி மாணவியின் வீரம் நிறைந்த போராட்டம் ஏதோ இந்தி, தமிழ்த் திரைப்படக் காட்சி மாதிரி தோன்றினாலும், இது நிஜம். உண்மையில் நடைபெற்ற சம்பவம். பாராளு மன்றத்தின் இரு சபைகளிலும் கண்டனம் எழுப்பப்பட்ட விஷயம். பாரளுமன்றத்தில் கேள்வி நேரம் முடிந்ததும் மோனிஷா வர்மாவிற்கு நிகழ்ந்ததைப் பற்றின பிரச்சினையை எழுப்பியவர் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மீரா குமார். டெல்லிப் போக்குவரத்து ஊழியர்கள் அம் மாணவியிடம் நடந்துகொண்ட முறைக்குக் கடும் தண்டனை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் பலராம் ஜாக்கரும் ''இந்தப் பிரச்சினையைக் கடுமையான பிரச்சினையாகக் கருத வேண்டும்'' என்று குறிப்பிட்டார். மோனிஷா வர்மாவின் வீரச் செயலைசபையின் உறுப்பினர் அனைவரும் பாராட்டினர்.

இந்தக் கண்டனங்கள், பாராட்டுதல்கள் எல்லாம் சரி தான். மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் இப் பிரச்சினையை எழுப்பிய மீரா குமாருக்கும், அதே பொறுப்புணர்ச்சியுடன் பதிலளித்த சபாநாயகருக்கும் நாம் நன்றி சொல்ல வேண்டியவர்கள் தான்.

ஆனால் இதோடு இப்பிரச்சினை நின்று விடுமா என்பது தான் என் கேள்வி. டெல்லி போக்குவரத்துக் கழக ஊழியர் களில் இருந்த ஐந்து மனித மிருகங்களோடு இம்மாதிரி மிருகங்களே இல்லாமல் ஆகி விடுமா...?

ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்களைப் பிரிக்கிற போது இதுபோல் எத்தனை மிருகங்கள் வெளிப்படுகின்றன. பூவாய், மானாய், மயிலாய் அம் மிருகங்களின் கால்களில் நசுங்கி இரையாகிற பெண்கள் எத்தனை பேர்...



எனவே ஒரு மோனிஷா வர்மா போதுமா? இந்நாட்டுப் பெண்கள் அத்தனை பேரும் மோனிஷா வர்மாக்களாக வேண்டாமா? தன்னைத் தான் காத்துக் கொள்ளத் தெரிய வேண்டாமா? எங்கு போனாலும் ஓர் ஆணைத் துணைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்திலிருந்து விடுபட வேண்டாமா? அதற்கான மனோபக்குவம் வேண்டாமா?

இவை அனைத்திற்கும் மேலான உடல் வலிமை, உறுதி இரண்டையும் தேடிக் கொள்ள வேண்டாமா? தேடித் தர பெற்றோரும், பள்ளி ஆசிரியர்களும், பள்ளி நிறுவனங் களும், அரசாங்கமும் இதற்கான முயற்சியைச் செய்ய முன் வர வேண்டாமா? வெறும் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டு விட்டால் போதுமா? அந்த ஒரு நிகழ்ச்சிக்குக் குற்றவாளிகள் தண்டனையளிக்கப்பட்டு விட்டால் இது போன்ற குற்றங்கள் மேலும் நடக்க வழியற்றதாகி விடுமா?

எனவே - பள்ளி ஆசிரியைகளிடமும், தலைமை யாசிரியைகளிடமும், பள்ளி நிறுவன அதிகாரிகளிடமும், அரசாங்கத்திடமும் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றுதான்.—

ஐந்தாம் வகுப்பிலிருந்து உடற்பயிற்சி, தற்காப்புக் கலை (கராத்தே, குங்ஃபூ) போன்றவற்றைக் கட்டாயப் பாடமாக்குங்கள். அதுவும் பெண் குழந்தைகள் அவசியம் கற்றே ஆக வேண்டும் என வற்புறுத்துங்கள். இதற்கான மதிப்பு எண்களை மற்ற மதிப்பு எண்களோடு சேருங்கள். இதன் அத்யாவசியப் பலனை அந்த ஐந்து வயதில் அவர்கள் உணராமல் போகலாம். ''பிஸிகல் எக்ஸர்ஸைஸா, கராத்தே வகுப்பா, கேம்ஸ் க்ளாஸா...'' என்று அலட்சியமாக ச்சூள் கொட்டி ஒதுக்கலாம்.

இப்போதைய - ஏன் என் காலத்திலேயே கூடப் பெரும்பாலான மாணவ, மாணவிகளிடம் இந்த அலட்சியம் இருந்திருக்கிறது. படிப்பு ஒன்றுதான் தேவை. இது போன்ற உடல் வலிமைக்கான வகுப்புகளோ படிப்

பிணையோ தேவையில்லை என்று நினைக்கிற மாணவிகளே—

உங்களுக்கு இந்த மோனிஷா வர்மா என்கிற வீராங்கனையின் பாடமாவது ஓர் படிப்பினையாக இருக்கட்டும். இதிலிருந்தாவது மனவலிமை மட்டும் இருந்தால் போதாது, உடல் வலிமையும் அத்யாவசியம் என்பதை உணருங்கள். எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தனித்து இயங்கவும், உங்களை நீங்களே காத்துக் கொள்ளவும் தயாராகுங்கள். உங்கள் பெற்றோர்களுக்கும், பள்ளித் தலைமை ஆசிரியைக்கும், பள்ளிக் கல்வி இயக்கக அதிகாரிகளுக்கும், ஏன் அரசுக்குமே எடுத்துச் சொல்லி - வற்புறுத்திச் சொல்லி உங்கள் மனோவலிமையோடு உடல் வலிமையையும், சமயோஜித உணர்வையும், புத்தி கூர்மையையும் பெறப் பாடுபடுங்களேன். தயவு செய்து போராடியாவது பெற முயலுங்களேன்.

நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வையோடு - தெளிந்த ஞானச் செருக்கு கொண்டவர்களாக உயருங்களேன்...

## 5. மிதவைகள்தானா பெண்கள்?

சில மாதங்களுக்கு முன்னர் என்னையும், என் போன்ற பெண் எழுத்தாளி (!?) களையும், கல்வித் துறையைச் சார்ந்த சில பெண்களையும் நூலக விழாவில் பேச அழைத்திருந்தனர். பேசுவதற்காக எங்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்த தலைப்பு - பெண்கள் படைப்பில் சமுதாய நோக்கு.

அந்த தலைப்பை வைத்துக் கொண்டு நான் நிறைய யோசித்தேன். முதலில் என் யோசனையைத் தொட்ட விஷயம் 'பெண்கள் படைப்பு' எனப் பிரித்துச் சொல்லப் பட்டிருந்த வாசகம் தான். இறைவனின் படைப்பில் ஆண் - பெண் என இரு பிரிவுகள் இருக்கின்றன. காக்கை குருவி



யிலிருந்து சகல ஜீவராசிகளிலும் இப்பிரிவினையை வைத்து அவர்களின், அல்லது அவைகளின் சந்ததிப் பெருக்கத்திற்கு வகை செய்திருக்கிறான். ஆனால் 'படைப்பு - இலக்கியம் என்பதில் இந்த வித்தியாசமெல்லாம் எங்கிருந்து வந்தது என்ற கேள்வி எழுந்து என்னை நெருடிற்று. பொதுவாகப் படைப்பாளிகள் எல்லாம் - எழுத்தாளர்கள் எனலாமே தவிர ஆண் எழுத்தாளர்கள், பெண் எழுத்தாளிகள் என்கிற வித்தியாசமெல்லாம் எழுத்திற்கு இல்லை. இருக்கவும் கூடாது என்பது என் ஆணித்தரமான கருத்து. என்ன எழுதியிருக்கிறார்கள் - எப்படி எழுதப்பட்டிருக்கிறது என்பது தான் விஷயமும் - விவாதமுமே தவிர எழுதியது ஆணா அல்லது பெண்ணா என்பதல்ல கேள்வி.

இந்த அடிப்படையில் பார்த்த போது கொடுக்கப் பட்டிருந்த தலைப்பு என் எண்ணத்திற்கும், அபிப்பிராயத்திற்கும், கருத்திற்கும் மாறுபட்டிருந்த காரணத்தினாலேயே அந்தத் தலைப்பை வைத்துக் கொண்டு யோசித்தேன். 'இன்றைய படைப்பில் சமுதாய நோக்கு' என்றோ அல்லது 'சமீபகால இலக்கியங்களில் சமுதாய நோக்கு' என்றோ தலைப்புத் தராமல் ஏன் 'பெண்கள் படைப்பில் சமுதாய நோக்கு' என்று தனியாய்க் குறிப்பிட்டு அழுத்திச் சொல்லியிருக்கிறார்கள் என்பதே என் யோசனையாக இருந்தது. இப்படிக் குறிப்பிட்டதன் நோக்கம் பொதுவாகப் பெண்களுக்குச் சமுதாய நோக்கமும், விழிப்புணர்ச்சியும் குறைவு என்ற அபிப்பிராயத்தில் அடிப்படையில் ஏற்பட்டதாக இருக்குமோ என்பதான கேள்வியும் எழுந்தது.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசி முடித்து விட்டு வந்து எத்தனையோ நாட்களாகி விட்டன. ஆனால் எனக்குள் எழுந்த அந்தக் கேள்வியின் உறுத்தல் மட்டும் நிற்கவே இல்லை.

சில நாட்களில் என்னைத் தேடி இலக்கியம் பற்றி விவாதிக்க சில குறிப்பிட்ட நண்பர்கள் வருவதுண்டு. ஒரு

கப் டீ குடித்து விட்டு வீட்டின் முன் ஹாலில் உட்கார்ந்து நாங்கள் மணிக்கணக்கில் பேசுவோம். எங்கள் பேச்சில் கதைகள், கவிதைகள், படித்த தமிழ், ஆங்கிலப் புத்தகங்கள், பார்த்த அல்லது பார்க்க வேண்டிய நல்ல படங்கள், நாட்டின் அல்லது உலகத்தின் சில முக்கியப் பிரச்சினைகள் என்று அறிவு பூர்வமான விவாதங்களில் பேச்சு தொட்டுத் தொட்டுச் செல்லும். நமக்கே தெரியாமல் மூளையிலும், இதயத்திலும் மூடிக் கிடந்த சில ஜன்னல்கள் திறந்து கொள்ளும். இப்படியெல்லாம் யோசிக்கலாமே என்கிற அறிவுக்காற்று ஜிலுஜிலுவென்று வீசத் தொடங்கும். அதன் குளிர்ச்சியில் மனசு அமைதியாய் நிரம்பித் ததும்பும்.

கலா ரசனையும், அனுபவ பூர்வமும், ஆன்மீக ஞானமும், அறிவார்த்தமுமாக நேரம் போவது தெரியாமல்- எழுதக் காத்துக் கொண்டிருக்கிற பத்திரிகையின் அடுத்த இதழுக்கான தொடர் வேலை மறந்து போக அது போன்ற பேச்சுக்களில் அமிழ்வது என்பது எனக்குப் பிடித்த விஷயங்களில் ஒன்று. அதற்குக் காரணம் வெறும் பொழுதைப் போக்கப் பேசுகிறவர்களில்லை நாங்கள். விஷய ஞானத்திற்காக விவாதிப்பவர்கள்.

நிச்சயமாய்ப் பத்து நாட்களுக்கு ஒரு முறையோ, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையோ இந்தக் கூட்டம் கூடி விடும். சில சமயம் கூட்டமாக இல்லாமல் தனித் தனியாகவும் உட்கார்ந்து பேசுகிற சந்தர்ப்பம் நேரும்.

அன்று கூட்டமாகவே கூடிற்று. அதாவது கூட்டம் என்றால் வழக்கமாக வருகிற பதிப்பக நண்பர். சக எழுத்தாளர், ஒரு கவிஞர், நான்; அவ்வளவுதான். அன்று அந்த மூன்று பேரும் வந்திருக்க பேச ஆரம்பித்து, டீ குடித்த பின்னர் நான் எனக்குள் உறுத்திக் கொண்டிருந்த கேள்வியை அவர்கள் முன் வைத்தேன்.

''பெண்களுக்குப் பொதுவாக சமுதாய நோக்கு - விழிப் புணர்ச்சி என்பது குறைவாகத்தான் இருக்கிறதா...?''



எதற்கும் சற்று யோசித்து நிதானமாகப் பதில் சொல்கிற பதிப்பக நண்பர் அன்று அந்தக் கேள்விக்கு மட்டும் எந்த யோசனையுமின்றி டக்கென்று பதில் சொன்னார்.

''நிச்சயமா குறைச்சல்தான்!''

எதற்கும் அழுத்தமாய், சற்று ஆவேசம் கலந்த குரலில் வலியுறுத்தி அழுத்திப் பேசும் எழுத்தாள நண்பரின் குரல் எப்போதும் போல உயர்ந்து வந்தது.

''குறைச்சல்னு ஏன் சார் மெதுவா சொல்றீங்க? இல்லவே இல்லைன்னு அடிச்சுச் சொல்லுங்க. அதுதான் நிஜம். உண்மையான விஷயம்.''

மூன்றாவதாகக் கவிஞர் வர்க்கத்தைச் சார்ந்த நண்பர் அவருக்கே உரித்தான மெல்லிய குரலில் மிகுந்த நிதானத்தோடு ஆரம்பித்தார்.

''எனக்கென்னவோ இந்தக் கேள்விக்கு இத்தனைக் கோபமாகவும் ஆக்ரோஷமாகவும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லேன்னு தோணறது...''

அதைக் கேட்ட எழுத்தாள நண்பர் பிடித்துக் கொண்டார்.

''ஏன் கோபப்படக் கூடாதுன்றீங்க...? கேள்வி கேட்ட இவங்க மனசு புண்படுமேன்னா...? இருக்கிறதைத்தானே சார் சொல்றேன்...நான் சொன்னது நிஜமில்லை, பெண்கள் சமுதாயப் பொறுப்பை அதிகம் உணர்றாங்கன்னு அபிப்பிராயப் படறீங்களா...?''

அதற்கும் நிதானத்தைக் கைவிடாதவறாக அமைதியாகவே நீண்ட பதிலளித்தார் அந்தக் கவிஞர்.

''இல்ல...அப்படியில்ல என் அபிப்ராயம். இவங்க கேட்ட கேள்வி எனக்குள்ள நிறைய தரம் எழுந்திருக்கு. ஏன் இப்படி நுனிப்புல் மேயற விதமாகவே இருக்காங்கன்ற வருத்தம் பெண்கள் மேல எனக்கும் ஏற்பட்டிருக்கு. தாங்கள் - தங்கள் குடும்பம் - குழந்தைகள் - வருமானத் திற்குள் செலவைச் சரிக்கட்ட வேண்டிய பிரச்சினைகள்

என்பதில் மட்டும் அடங்கிப் போயிடறாங்களேன்ற ஏக்கம் கூட உண்டு. அதோடு மட்டும் இருந்தாக் கூடப் பரவாயில்லை. ஆனால் அதையெல்லாம் மீறின - அவர்களுக்கே உரிய புடவை, நகை விஷயங்கள்ல காட்ற ஆர்வம் இருக்கே • அது நிறைய சந்தர்ப்பங்கள்ல என்னை எரிச்சல் படுத்தியிருக்கு...இந்தியா ஏழைகளின் தேசமென்ற ஒரு அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கே அதை மனசுக்குள்ள மறுக்கும்படியான ஓர் எரிச்சால மாறிப் போயிருக்கு. எப்போ பாருங்க - மாம்பலம் பக்கம் போனால் நல்லி புடவைக் கடையிலேயும்- தங்கமாளிகை நகைக்கடையிலயும் தேர்விழா மாதிரிக் கூட்டம். அது மட்டில்லாமப் புடவைக் கடைக்காரங்க வருஷத்துக்கு ஒரு தரம் ரிடெக்ஷன் ஸேல்னு போடறாங்களே - அப்போ அலை மோதற கூட்டம் சொல்ல முடியாது...''

''சரி...இதுதான் போகட்டும்னு பார்த்தால் அவர்களோட அடுத்த வட்டம் வாரப் பத்திரிகைகளின் தொடர் கதைகள் - சினிமா செய்திகள் இவற்றோடும் - டி.வி.யின் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுடனும் மட்டுமே நின்று போய் விடுகிறது. செய்தித் தாள்களைக் கூட அவர்கள் மேம் போக்காகத்தான் ஆய்கிறார்கள். ஆழமான அறிவு பெறவோ - விஷய ஞானத்திற்கோ படிப்பதில்லை. ரஷ்ய-அமெரிக்க சமாதான ஒப்பந்தத்தின் முழுச் சாரத்தையோ, இல்லாவிட்டால் ராஜீவ் காந்தியின் சீன விஜயத்தினால் ஏற்படக் கூடிய ஆக்க பூர்வமான உறவு முறைகளிலேயோ அவர்களுக்கு ஆர்வமில்லை. தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற அக்கறை இல்லை. சரி. அரசியல் அறிவு வேண்டாம். பொது அறிவாவது வேண்டும் என்று தேடுகிறார்களா எனப் பார்த்தால் அதுவும் இல்லை. இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தமிழ் செய்தித்தாள்கள் தருகிற சப்ளிமெண்ட்ரி இதழ்களில் வருகிற சில முக்கியமான விஷயங்கள் - தொழில், பொருளாதார - விஞ்ஞானக் கட்டுரைகள் அவை சம்பந்தப்பட்ட படிக்காத எந்தப் பெண்ணையும் கவருவதில்லை. சிலர் கிரிக்கெட், டென்னிஸ் பற்றின கட்டுரைகளைக் கூட வெறும் ஸ்கோர் விவரம் பார்ப்பதோடு நிறுத்திக் கொண்டு விடுகிறார்கள்.



''சில பெண்கள் இந்து நாளிதழ் வெள்ளிக்கிழமைகளில் தருகிற சினிமா சம்பந்தப்பட்டவர்களின் கட்டுரைகளைப் படிப்பதை மட்டும் கவனித்திருக்கிறேன். நான் சொல்கிற இந்த விஷயங்கள் உங்களைக் கஷ்டப்படுத்தினாலும் இந்துமதி...பெண்களுக்குப் பொதுவாக நாட்டு நடப்புகளில் அக்கறையில்லை. வெளிநாட்டுச் செய்திகளில் ஆர்வமில்லை. அரசியல் நுணுக்கங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்ற விவேகமில்லை. சமூகப் பொறுப்புணர்ச்சி என்ற ஒன்று உண்டு என்கிற தார்மீகச் சிந்தனை கூடக் கிடையாது...நாங்கள் சொல்கிற போது இந்த விஷயங்கள் உங்களுக்கு மிகைப்படுத்திப் பேசுவதாகத் தெரியும். மனசுக்குக் கஷ்டமாக இருக்கும். ஆனாலும் இதுதான் நிஜம். வருத்தம் தருகிற நிஜம். நான் சொன்ன இத்தனையும் உண்மையா இல்லையா என்பதை நீங்களே மனதிற்குள் அசை போட்டுப் பாருங்கள், தெரியும். அல்லது இன்றிலிருந்து கூர்ந்து கவனியுங்கள்...புரியும். தயவு செய்து எனக்காகக் காரில் போவதை விட்டு விட்டு ஒரு வாரம் எங்கு போவதானாலும் பஸ்ஸில் போய்ப் பாருங்கள். காதைத் தொடுகிற பேச்சுக்களைக் கவனியுங்கள்...கவனித்து விட்டு - யோசித்துப் பார்த்து - அடுத்த தரம் கூடுகிறபோது சொல்லுங்கள். நாங்கள் பேசினதெல்லாம் சரியா இல்லை தப்பா என்று...என்ன?''

அன்று அவர்கள் சொல்விட்டுப் போன பின்னர் நான் கவனிக்க ஆரம்பித்தேன். முதலில் என் ஆராய்ச்சி எனக்குத் தெரிந்த - என்னைச் சார்ந்த பெண்களிடம் ஆரம்பித்தது. யார், என்ன என்பதைக் குறிப்பிடாமல் விவரங்களை மட்டும் தருகிறேன்.

'இந்து' பத்திரிகையைப் புரட்டின அந்த சிநேகிதியின் பார்வை முதலில் தங்கத்தின் விலை கிராமுக்கு எவ்வளவு உயர்ந்திருக்கு என்பதில் போயிற்று.

''அம்மா...நேத்து முன்னூத்திப் பதினைந்து ரூபாய் இருந்தது. இன்னிக்கு முன்னூத்தி இருபது ரூபாயா ஆயிடுச்சு...''

''ஐயய்யோ...'' என்று பதறினாள் அந்த அம்மாள்.

''நேத்திக்கே கடைக்குப் போய் நீ கேட்ட அந்த ஜிமிக்கியை வாங்காமப் போயிட்டமேடி...இன்னிக்காவது போயிடலாம். நாளைக்கு இன்னும் கூடிடப் போறது...''

இன்னொரு நாள் பத்திரிகை அலுவலகம் ஒன்றிற்கு டெலிபோன் பண்ணினேன். நடுவில் கராஸ் டாக் இரண்டு பெண் குரல்கள் கேட்டன. என் எழுத்தாள ஆர்வம் என்ன பேசுகிறார்கள் என்று கேட்கத் தூண்டிற்று.

''இன்றைய பேப்பர் பார்த்தியா ராஜேஸ்வரி...?''

''இல்லையே...என்ன விஷயம்? முக்கியமான ஏதும்?''

''ம்...தாஜ்ல முத்து, பவழம், இமிடேஷன் ஜூவல்ஸ் எல்லாம் எக்ஸிபிஷன் கம் ஸேல்னு பெரிசா போட்டிருக்கே... நீ பார்க்கலை...?''

''இல்லம்மா...காலைல எழுந்து பேப்பர் பார்க்க எங்க நேரமிருக்கு?''

''சரி, நீ பார்க்காட்டி போற...நான்தான் பார்த்துட்டுச் சொல்றனே...எல்லாம் ட்வெண்ட்டி பர்ஸெண்ட் டிஸ்கௌண்ட்டாம். வரியா போகலாம்...''

''வரேன். இவர் ஆபீஸ் போய் இறங்கிண்டதும் காரை அனுப்பச் சொல்றேன். சரியா பதினோரு மணிக்கு உன்னை வந்து பிக் அப் பண்ணிக்கறேன். தாஜ்ல எக்ஸிபிஷன் பார்த்துட்டு அப்படியே சி.பி. ஆர்ட் சென்ட்டர் போகலாமா...?''

''அங்க என்ன...?''

''கல்கத்தா ஸாரீஸ் எக்ஸிபிஷன் ஒரு வாரமா நடக்கிறது. இன்னியோட கடைசி நாள்.''



''கடைசி நாள்ல என்ன இருக்கப் போறது? எல்லாரும் வாங்கிட்டுப் போன மீதிதான் இருக்கும்...''

''எதுக்கும் பார்க்கலாமே...''

''ஓ...கே...தென்...''

நண்பர் கொடுத்த யோசனையின் பேரில் மூன்று நான்கு நாட்கள் காரைத் தவிர்த்து பஸ்ஸில் ஏறி மவுண்ட் ரோடில் இறங்கி திரும்ப அங்கிருந்து பஸ் பிடித்து வீடு வந்து சேர்ந்தேன். அதே மாதிரி மாம்பலம், லஸ், மைலாப்பூர் என பஸ்ஸில் போனதில் காதை எட்டினவை—

''கார்த்திக் அந்தப் பொண்ணு ராகினியைக் காதல் கல்யாணம் செய்துக்கிட்டாராம் பார்த்தியா...?''

''பாவம் ஸ்ரீப்ரியா...?''

''அவங்க எப்பிடி இவர் கல்யாணம் செய்துப்பார்னு எதிர் பார்க்கலாம்?''

இது ஒரு நாள்.

''நேத்து ஃபாத்திமா செய்தி வாசிச்சப்ப பார்த்தியா? அழகான மஞ்சள் புடவை கட்டிண்டு...''

இது மற்றொரு நாள்.

மூன்றாவது நாள் அரசியல் பேச்சு. அது எப்படி என்றால் - வெண்ணிற ஆடை நிர்மலா, ராதிகா, ராஜீவ் காந்தியோட பர்ஸனாலிடி என்று தனிப்பட்ட மனிதர்களின் தோற்றத்தைச் சார்ந்த அரசியல்...

அன்றே காதில் விழுந்த சினிமா-இலக்கியச் செய்திகள்.

ஸில்வெஸ்ட்டர் ஸ்டாலோன் பற்றின வீடியோ படம்.

சக்நோரிஸின் பழைய படம் பற்றின விமரிசனம்.

ஜெஃப்ரி ஆர்ச்சர், ஷிட்னி ஷெல்டன் எனத் தற்கால ஆங்கில எழுத்தாளர்களின் பெயர்கள்...

இவை அனைத்தையும் பேசினவர்கள் பெண்கள் தான். விவாதித்தவர்கள் பெண்கள் தான். கிட்டத்தட்டப் பத்து நாட்கள் நான் தேடின தேடலில்...

(1) ஒரே ஒரு தீர்க்கமான அரசியல் கண்ணோட்டப் பேச்சு...

(2) தமிழ் இலக்கியத்தில் நிஜமான இலக்கியம் படைப்பவர்களின் பெயர்கள்...

(3) சரி. ஆங்கிலத்திலாவது ஜேம்ஸ் நாய்ஸ், காஃப்லே, காமூ...என்று யாராவது...

(4) அயர்ன்ராண்ட், எரிகா ஜோங் - இவர்களின் எழுத்துக்களாவது...

(5) டி. எஸ். எலியட், ராபர்ட் ப்ராஸ்ட் கவிஞர்களின் கவிதையாவது...

(6) கடைசியாய் நான் கேட்ட கேள்விக்கான சமூகப் பிரச்சினை, சமுதாயப் பொறுப்பு பற்றின எந்த விஷயமாவது...

இல்லை, இல்லை, இல்லவே இல்லை...சத்தியமாய் என் காதுகளுக்கு எட்டவில்லை. கிட்டத்தட்டப் பத்துப் பதினைந்து நாட்கள் அலைந்து விட்டிற்கு வந்து உட்கார்ந்து யோசித்ததில் அந்த இலக்கிய நண்பர்கள் சொன்ன மாதிரிப் பெண்களுக்குச் சமுதாயப் பிரக்ஞையே இல்லை என்று என்னால் ஒரேடியாக - ஒட்டு மொத்தமாக ஒதுக்கித் தள்ளி விட முடியவில்லை. மேலே எழுதின மாதிரிப் பெண்கள் இருக்கிறார்கள் என்றாலும் முன்னுதாரணப் பெண்கள் இல்லாமற் போகவில்லை. சமூகப் பிரக்ஞை, விழிப்புணர்ச்சி, ஓடி வந்து உதவ நீளுகிற நேசக்கரங்கள் - பத்திரிகைச் செய்திகளைப் படித்து எந்த பாதிப்புமற்று மடித்துப் போட்டு விட்டுப் போகிற ஆண்களுக்கிடையில் படித்த செய்தி மனதைத் தாக்க அதற்குண்டான ஆக்க பூர்வமான வழி முறைகளை எடுத்து நம் அரசாங்கத்திடம் மட்டுமின்றி பாகிஸ்தானிய அதிபர் ஜியாவிற்குக் கடிதம் எழுதி மீட்டுத் தந்த அந்தப் பெண்மணியின் சமூகப் பொறுப்புணர்ச்சி, செயல் திறன்...



இவற்றை மறைந்து போகச் செய்யக் கூடாது. மறந்து விடக் கூடாது. எடுத்துச் சொல்லி - இப்படிப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள்-இப்படித்தான் இருக்க வேண்டும் என எனக்குத் தோன்றுவதை அடுத்தடுத்து ஒவ்வொன்றாய் என் இலக்கிய நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டதைப் போல் உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அவை அனைத்தையும் படித்த பின்னர் பெண்களுக்குச் சமுதாயப் பிரக்ஞை இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கு நீங்களே விடை தர முடியும்.

அதன் பின்னர் அவர்களைப் போன்ற சிலர் மட்டும் போதுமா என்ற கேள்வி எழுந்தால்—

அந்தச் சிலர் பலராகி - பலர் இன்னும் பலராகச் சேர்ந்து எல்லாப் பெண்களிடமும் அவர்களுக்கு இருக்கிற பிரக்ஞை, பொறுப்புணர்ச்சி எல்லாம் வந்து விடுமாயின்... வந்து விடுமாயின் என்ன...வரும். வர வேண்டும்.

## 6. சுதந்திரப் போராட்டத் தியாகி திருமதி கமலாதேவி சட்டோ பாத்யாயா

அன்று அந்தப் பள்ளிச் சிறுவர்கள் இருவருக்கும் படிக்கப் பிடிக்கவில்லை. பாடத்தில் மனசு பதியவில்லை. விளையாட்டில் கவனம் போகவில்லை. மற்ற நண்பர்களுடன் பேசுவதில் நாட்டமில்லை. அவர்களின் அரட்டையில் கலந்து கொள்ளவில்லை.

லேசாய் வெய்யில் எட்டிப் பார்த்து அபூர்வமான அழகை - அள்ளித் தந்து கொண்டிருந்த அந்தக் காஷ்மீரத்துக் காலை நேரத்தில் அவர்களது தெருவைச் சார்ந்த மற்ற சிறுவர்கள் கூட்டமாய் நின்று கலகலத்துக் கொண்டிருந்தனர். அமிதாப்பச்சனின் 'ஷேஹென்ஷா' காரசாரமாய் விவாதிக்கப்பட்டது. மீனாட்சி சேஷாத்ரிதான் அழகு என்றும் - ஸ்ரீதேவியின் அழகிற்கு முன்னால் மீனாட்சி

17661 3365683

சேஷாத்திரி ஒன்றுமே இல்லை எனவும் இரு கட்சிகளாகப் பிளவு பட்டனர்.

ஆனால் அவை எதுவும் புபீந்தர் சிங்கின் காதுகளையோ, அருண்குமாரின் அறிவையோ எட்டவில்லை. அவர்கள் இருவரின் கவனமும் வேறு ஒரு தீவிரமான சிந்தனையில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. நீண்ட நாட்களாக அவர்களுக்குள் ஆர்வமாய், ஆசையாய், அறியக் காத்திருந்த அந்தக் கேள்வி அன்று மீண்டும் விஸ்வரூபம் எடுத்தது.

'இந்திய - பாகிஸ்தான் எல்லை என்கிறார்களே ... அது எப்படி இருக்கும்? எல்லை என்பதை எவ்வாறு நிர்ணயித்திருப்பார்கள்? எப்படிப் பிரித்திருப்பார்கள்? வேலி போட்டுத் தடுத்திருப்பார்களா? இல்லாவிட்டால் பெரியதாய் சுவர் எழுப்பி இருப்பார்களா? அதுவுமில்லை என்றால் வரிசையாக ஜவான்கள் நின்று கொண்டிருப்பார்களா? பீரங்கிகள், பாட்டன் டாங்கிகள், துப்பாக்கிகள் எல்லாம் இருக்குமா? அவற்றைப் பார்க்க முடியுமா? முதலில் இந்திய - பாகிஸ்தான் எல்லையைப் பார்க்க வேண்டுமே...'

''புபீந்தர் இன்றைக்குப் போய்ப் பார்த்து விடலாமா?''

''எப்படி அருண்...எதில் போவது?''

''நடந்தே போகலாம்...''

''நடந்தா?''—புபீந்தர் சிங் ஒரு வினாடி தயங்கினான். அருண்குமார் தன் பேச்சால் தைரியப்படுத்த இருவரும் யாரிடமும் சொல்லாமல் கிளம்பினார்கள்.

''டேய் அருண்...புபீந்தர் எங்கே போறீங்க?''—நண்பர்களின் கேள்விக்கு,

''இருங்கடா வந்து சொல்கிறோம்'' என்று உற்சாகமாய்ப் பதில் கூறி, எவரெஸ்டில் ஏறின டென்சிங்கின் வீரத்தோடு ஏதோ ஓர் ஆர்வம் உந்தித் தள்ள நடக்க ஆரம்பித்தனர்.



தங்களின் எல்லை காணும் படலத்தைப் புனித யாத்திரையாகவே மேற்கொண்டனர்.

நடந்து, நடந்து களாசக் பகுதியை எட்டினர். ஆனால் இந்திய - பாகிஸ்தான் பார்டரோ கண்ணில் தென்படுவதாக இல்லை. சற்றுக் களைத்துப் போன புபீந்தர் கேட்டான்.

''இன்னும் எத்தனை தூரம் நடக்கணும்டா அருண்குமார்?''

''இரு...எதிர்ல யாராவது வருவாங்க...கேட்கலாம்.''

அவர்கள் எதிர்பார்த்த மாதிரி மரங்களை வெட்டிச் சுமந்துகொண்டுவந்த மரம் வெட்டி ஒருவர் எதிர்ப்பட்டார். அவரிடம் அவர்கள் ஆர்வமாய்க் கேட்டனர்.

''பாகிஸ்தான் பார்டர் இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கு?''

நம் ஊர் ரிக்ஷாக்காரர்கள் பதில் சொல்கிற மாதிரி அந்த மரம் வெட்டி பதில் சொன்னார்.

''அது இன்னும் எம்மாந்தொலைவு இருக்கு...இங்கேயே பாகிஸ்தான் பார்டரைக் கேக்கறீங்களே? நடங்க ... நேரா நடந்துக்கினே போங்க...''

அவர்கள் சலிக்காமல், சளைத்துப் போகாமல் மீண்டும் நடக்க ஆரம்பித்தனர். கால்கள் கெஞ்சினாலும் கண்களில் ஆர்வம் குறையவில்லை. முகத்தின் மலர்ச்சி வற்றவில்லை. எதிர்பார்ப்பு ஏமாறத் துவங்கவில்லை.

நீண்ட தூரம் நடந்த பின் ஒரு செக் போஸ்ட் கண்ணில் பட்டது. அங்கு போய் விசாரித்தால் என்ன என்ற எண்ணத்தில் அருகில் போய் அதன் ரேஞ்சரிடம் கேட்டனர்.

''பாகிஸ்தான் பார்டர் இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?''

அந்த நேரத்தில் அவர்களை ஏற இறங்கப் பார்த்தார். பார்வையில் சந்தேகம் ஊடுருவிற்று. குரல் அழுத்தமாய் அதிகாரத் தொனியில் வெளிப்பட்டது.

''பாகிஸ்தான் எல்லையைக் கடந்து தான் உள்ளே வந்திருக்கீங்க...வாங்க என் கூட...''

செக் போஸ்ட்டினுள் அழைத்துப் போய் விசாரித்தார்.

''உன் பேரென்ன?''

''அருண்குமார்.''

''வயசு?''

''பதினேழு...''

பின் பார்வை அடுத்தவனின் முகத்தில் அம்பு மாதிரிப் பதிந்தது.

''உன் பேர்?''

''புபீந்தர் சிங்...''

''உன் வயசு என்ன?''

''பதினைந்து.''

''ம்...ரெண்டு பேரும் அப்படியே உட்காருங்க...யு ஆர் அண்டர் அரெஸ்ட்...''

சிறுவர்கள் ஒன்றும் புரியாதவர்களாக மலங்க மலங்க விழித்து அழ ஆரம்பித்தனர். ஆனால் ரேஞ்சரின் மனதை அந்த அழுகை கரைக்கவில்லை. இளக வைக்க வில்லை. அவர்கள் சொன்னதைக் 'கட்டுக்கதை'யாக நினைத்து அவர் தன் கடமையைச் செய்தார்.

இது நடந்தது ஜனவரி 26-ம் தேதி. இந்தியக் குடியரசு தினத்தன்று. சென்ற வருடம் - அதாவது 1988-ல்.

நேரமாக ஆக புபீந்தர் வீட்டிலும், அருண்குமார் வீட்டிலும் அவர்களைக் காணாமல் தேட ஆரம்பித்தனர். அக்கம் பக்கத்து வீடுகளில் கேட்ட போது இருவரும் 'இதோ வரோம்' என்று போகுமிடத்தைத் தெரிவிக்காமல் நடந்து சென்றது தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் தேடல் தொடர, மரம் வெட்டி மூலம் விஷயம் போலீசாரால் வெளிப்பட, அவர்களின் பெற்றோர்கள் பதறிப் போனார்கள். அழுகையில் கரைந்தார்கள். தங்கள்



பிள்ளைகளைப் பாகிஸ்தானிலிருந்து மீட்கவே முடியாது என்கிற முடிவில் ஆனாலும் முயற்சியைக் கை விடாதவாறு எல்லாரிடமும் புலம்பினார்கள்.

'எங்கள் குழந்தைகளை மீட்டுத் தாருங்கள். அவர்கள் ஒன்றும் அறியாமல் அப்பாவித்தனமாகச் செய்த அறியாச் செயலினால் பாகிஸ்தானில் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்...' என்கிற முழுவிவரத்தையும் எழுதி காஷ்மீர் தாசில்தார் அலுவலகத்திலிருந்து டில்லி தர்பார் வரை கடிதங்களாகவும், தந்திகளாகவும் அனுப்பினர்.

எல்லாமே கிணற்றில் போட்ட கல்லாயிற்று. அந்தத் தருணத்தில் இந்திய - பாகிஸ்தான் உறவு முறை அத்தனை சுமுகமாக இல்லாத காரணத்தால் அவ்விரு பெற்றோர்களும் சாப்பாட்டை மறந்து, தூக்கத்தை இழந்து தடுமாறினர். அப்போது தான் அருண்குமாரின் தந்தை 'காஷ்மீர் டைம்ஸ்' என்ற பத்திரிகையின் உதவியை நாடியிருக்கிறார். அந்த ஆங்கில நாளிதழும் அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்தது.

அந்த அப்பாவிச் சிறுவர்கள் பற்றிக் கட்டுரை வெளியிட்டது. அந்தக் கட்டுரைக்கு எந்தப் பலனும் இல்லாமற் போகவே - மீண்டும் அந்த பெற்றோர்களின் புலம்பலையும், பரிதாப நிலையையும் தொடர் கட்டுரையாக்கி வெளியிடத் துவங்கினர்.

அக்கட்டுரையைப் படித்தவர்கள் 'பாவம்' என்றனர். ச்சூன் கொட்டி விட்டு என்ன செய்வது என்ற அங்கலாய்ப்புடன் பத்திரிகையை மடித்துப் போட்டு விட்டுத் தங்கள் தங்கள் கர்மாக்களைக் கவனிக்கப் போய் விட்டனர்.

கிட்டத்தட்ட எத்தனையோ ஆயிரக் கணக்கான பிரதிகள் விற்கப்படுகிற அந்தச் செய்தித்தாளில் குறிப்பிட்ட அந்த அப்பாவிச் சிறுவர்கள் பற்றின செய்தி எவரிடமும் எந்தவித சமூகப் பிரக்ஞையையும் தூண்ட வில்லை.

சமுதாயக் கண்ணோட்டப் பார்வையை ஏற்படுத்தவில்லை. இதோ எங்கள் கரங்கள் என யாரும் உதவ முன் வரவில்லை.

அப்படிப்பட்ட நிலைமையில் - அக்கட்டுரையை எதேச்சையாகப் படிக்க நேர்ந்த ஒரு பெண்மணி பதறிப் போனார். தவித்துப் போனார்.

சிறுவர்களின் அப்பாவித்தனத்தையும், அதனால் நேரிட்ட விபரீதத்தையும், பெற்றோர்களின் போராட்டத்தையும் மிகத் துல்லியமாகப் புரிந்து கொண்ட அப் பெண்ணின் மனமும் - கரங்களும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற சமூகப் பொறுப்புணர்வில் - சமுதாயப் பிரக்ஞையில் நீண்டன. உடனடியாக அச்சிறுவர்களை மீட்டுத் தருவதைத் தன் கடமையாக உணர்ந்தார் அப் பெண்மணி. அது தன் பொறுப்பு என்றே கருதினார்.

அப்படிப்பட்ட பெண்மணி வேறு யாருமல்ல. டில்லியில் வசிக்கும் சுதந்திரப் போராட்டத் தியாகி திருமதி கமலா தேவி சட்டோபாத்யாயா தான்.

உடனே அவர் அந்தப் பத்திரிகையின் செய்தியோடு பாகிஸ்தான் அதிபர் ஜியாவுக்குத் தனிப்பட்ட முறையில் கடிதம் ஒன்று எழுதி அதை இந்தியாவில் இருக்கும் பாகிஸ் தானியத் தூதுவரைச் சந்தித்துக் கொடுத்து நிலைமையை விளக்கினார். 'ஒன்றுமறியாத அந்த அப்பாவிப் பள்ளிச் சிறுவர்களை விடுவிக்க வேண்டும்' எனவும் வேண்டுதல் விடுத்தார்.

அவருக்குப் பாகிஸ்தான் அதிபர் ஜியாவிடமிருந்து உடனே தனிப்பட்ட கடிதம் பதிலாக வந்தது.

'விரைவில் அவர்களை விடுதலை செய்ய ஏற்பாடு செய்கிறேன். கவலைப்பட வேண்டாம் - ஜியா - வுல் - ஹக்'.

அந்தப் பதிலில் கமலாதேவி திருப்தியடையவில்லை. அந்தக் குழந்தைகளை மீட்டுப் பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் வரை நிம்மதியடைய மறுத்த அவர் மீண்டும் ஜியாவுக்கு இன்னொரு கடிதம் எழுதினார்.



'தயவு செய்து அக்குழந்தைகளை விடுதலை செய்யும் நாளைக் குறிப்பிட்டு எனக்குப் பதில் எழுதுங்கள்...'

அதற்கும் ஜியாவிடமிருந்து மீண்டும் பதில் வந்தது.

'ஆகஸ்ட் 21-ம் தேதி வஹாஹ் பார்டரில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.'

அச் செய்தியை கமலாதேவி 'காஷ்மீர் டைம்ஸ்' ஆசிரியருக்குத் தெரிவித்தார். செய்தி பெற்றோருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஜனவரியிலிருந்து - ஆகஸ்ட் வரை - அதாவது குடியரசு தினத்திலிருந்து, சுதந்திர தினம் வரை தங்களின் குழந்தைகளின் சுதந்திரத்திற்ககன வழி தேடி, அல்லாடி, அலை பாய்ந்து கிட்டத்தட்ட எட்டு மாதங்களாக ராப்பகலாக ஏங்கி இளைத்துப் போன அப்பெற்றோர்களின் வரண்டு போன நெஞ்சில் அந்த விடுதலைச் செய்தி மழைத் துளிகளாக விழுந்தன.

ஆகஸ்ட் 21.

புபீந்தரும், அருண்குமாரும் வரப் போகிறார்கள்! இந்திய மண்ணை மிதிக்கப் போகிறார்கள்! அம்மா...அப்பா என்று ஓடி வந்து தழுவிக் கொள்ளப் போகிறார்கள்.

இவை அனைத்தும் அந்த ஒரு பெண்மணியால்.

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என வாடுகின்ற அந்த அன்பு நெஞ்சத்தால். பொறுப்பு உணர்ந்த கடமை எண்ணத்தால். சமூகப் பிரக்ஞை என்பது ரத்தத்தோடு கலந்து போன காரணத்தால்...

ஆகஸ்ட் 21-ஐ எதிர் பார்த்துக் காத்திருந்த போது ஆகஸ்ட் 17-ல் அதிர்ச்சி தரும் ஜியாவின் மரணச் செய்தி வந்தது. உலகத்தையே ஒரு குலுக்குக் குலுக்கிற்று. உலகம் வேறு வித பாதிப்பில் இருந்ததென்றால்—

புபீந்தர் சிங், அருண் குமாரின் பெற்றோர்களோ தங்களின் பிள்ளைகளின் விடுதலை என்ன ஆகுமோ என்ற

கவலையால் பாதிக்கப்பட்டனர். மீண்டும் பரிதவிக்கத் தொடங்கினர்.

ஆனால் பாகிஸ்தான் நிர்வாகம் மறைந்த தங்கள் அதிபர் ஜியாவின் வாக்குறுதி தவறாமல் நடப்பாதச் சொல்லிற்று. ஆகஸ்ட் 21-ம் தேதி ஜியா தன் கடிதத்தில் குறிப்பிட்ட மாதிரி - வஹாஹ்பார்டரில் - இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையனர் பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகளோடு தொடர்பு கொண்ட போது பதில் எதுவும் வரவில்லை. வெறும் காத்திருத்தல் தொடந்தது.

கிட்டத்தட்ட பகல் பன்னிரெண்டு மணியளவில் இந்தியத் தூதரகத்தின் உதவிச் செயலாளர் குமார், சிறுவர்கள் மாலை நான்கு மணிக்கு விடுதலை செய்யப்பட்டு வஹாஹ் பார்டரை அடைவார்கள் என்ற செய்தியோடு வந்து சேர்ந்தார்.

அதே மாதிரி சரியாக மாலை நான்கு மணிக்கு புபீந்தர் சிங்கும், அருண் குமாரும் இந்திய மண்ணில் மீண்டும் காலடி எடுத்து வைத்து பெற்றோர் நெஞ்சில் சந்தோஷ மழையாய் பொழிந்தார்கள். கட்டித் தழுவி சிறைச்சாலை அனுபவத்தைக் கதை கதையாகச் சொன்னார்கள்.

வஹாஹ் பார்டரிலிருந்து அவர்கள் தங்கள் பெற்றோருடன் நேராக டில்லி புறப்பட்டு திருமதி கமலா தேவியிடம் ஆசி வாங்கச் சென்ற போது - அங்கிருந்த கூட்டம் சொல்லிற்றாம்.

''நாம எல்லோரும் தான் காஷ்மீர் டைம்ஸில் செய்தியைப் படித்தோம். ஆனால் அதற்கான ஆக்க பூர்வமான முயற்சி எடுக்க வேண்டும் என்கிற பிரக்ஞை, ஒரு பெண்ணான திருமதி கமலாதேவிக்குத்தானே ஏற்பட்டது!''

இப்போது சொல்லுங்கள். பெண்களுக்குச் சமுதாயப் பிரக்ஞை இல்லையா? சமூகப் பொறுப்புணர்ச்சி கிடையாதா என்று.



இந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் வைத்து ஒப்புக்கொள்ள முடியாது என்று மறுக்கிற - வாதிடுகிறவர்களுக்கு—

அடுத்த பெண்மணியை அடுத்த அத்தியாயத்தில் அறிமுகப்படுத்துகிறேன்...

## 7. ஷபானா ஆஸ்மி என்றொரு சமூகப் பொறுப்புள்ள நடிகை

இந்தப் பெயரைக் கேட்டதும் அவர் நடிகை என்பது உங்களது நினைவிற்கு வரும். அவரது முகம் நினைவிற்கு வரும். தோற்றம் நினைவிற்கு வரும். அவர் நடித்த படங்கள் வரிசையாக நினைவிற்கு வரும். அவரது அசாதாரணத் திறமை நினைவிற்கு வரும்.

ஆனால் எனக்கு...?

இவற்றோடு ஷபானா என்கிற சுய சிந்தனையுள்ள சமூகப் பிரக்ஞையும் பொறுப்புணர்ச்சியும் நிறைந்த ஒரு பெண்மணி நினைவிற்கு வருகிறார். அநீதியைக் கண்டு பொங்கி எழுகிற அவரது தார்மீகக் கோபம் நினைவிற்கு வருகிறது. வெறும் உள்ளெழுந்த கோபத்தோடு நின்றுவிடாமல் அதை வெளிப்படுத்தவும் தயங்காத அவரது மன உறுதி நினைவிற்கு வருகிறது.

ஷபானா ஆஸ்மி வெறும் நடிகை. கலைப்படங்களின் திறமை வாய்ந்த முன்னணிக் கதாநாயகி என்பதோடு மட்டுமின்றி சமுதாயப் பிரக்ஞை உள்ள பெண்ணாக - குடிசை வாழ் மக்களின் உரிமைக்குப் போராடி உண்ணாவிரதம் மேற்கொண்டவராக - நாடகக் கலைஞர் சப்தர் ஹார்ஷ்மி கொலை செய்யப் பட்டதற்காக - எழுத்தாளர் ரஷ்டியின் உயிருக்காக முதல் முதலாகத் திரை உலகத்தின் சார்பில் ஒலித்த குரல் அவருடையதே.

அவருடையதே என்ன...?

அவருடையது மட்டுமே!

அதுவும் எங்கே...?

ஒரு மாபெரும் திரைப் பட விழாவில், வெளி நாட்டின் தலை சிறந்த கலைஞர்களும், இந்தியத் திரைவானின் புகழ் மிக்க நட்சத்திரங்களும், இந்தியத் திரைவானின் புகழ்மிக்க நட்சத்திரங்களும் அமர்ந்திருந்த ஓர் அரங்கத்தின் மேடையில்...

ஷபானா ஆஸ்மியின் பெயர் பார்வையாளர்களுக்கு அவரை அறிமுகப் படுத்துவதற்காக அழைக்கப் பட்டதும் எல்லோரும் எதிர் பார்த்தது மற்ற நடிக - நடிகைகளைப் போல் இவரும் அலங்காரப் பதுமையாக வந்து நின்று, ஆகர்ஷணச் சிரிப்பைஅள்ளி வீசி, அழகுப் பொம்மையாகக் கை குவித்து விட்டு இறங்கிப் போய் விடுவார் என்பதுதான்.

ஆனால் அவ்வாறில்லாமல் மேடை ஏறின ஷபானா நாடகக் கலைஞர் சப்தர் ஹார்ஷ்மி கொல்லப் பட்டதற் கான தன் கண்டனத்தை வெளிப்படுத்தத் தொடங்கினார். தன் தார்மீகக் கோபத்தை அழுத்தமான சொற்களால் வலி யுறுத்த ஆரம்பித்தார். நியாயமும், நீதியும் வழங்கப்பட வேண்டும் என்றார். பின்னர் பட விழாவிலிருந்தும் வெளி நடப்புச் செய்தார். அவருடன் வெளிநாட்டுக் கலைஞர்கள் சிலரும், நம் நாட்டுக் கலைஞர்களில் சிலரும் கூட வெளியேறினார்கள்.

ஷபானாவின் இந்தச் செய்கை நிஜமானதாய், நடிப் பில்லாததாய், வெறும் பரபரப்பான பத்திரிகை விளம் பரத்திற்கான தேடலற்றதாய் எனக்குப் பட்டது. அடி மனதின் ஆழத்திலிருந்து வெளிப்பட்ட ஒரு மகா சக்தியின் உந்துதலாய்த் தோன்றிற்று. மகத்தான மனிதாபி மானத்தின் காரணமாய்ப் பெருக்கெடுத்த பிரவாகம் என உணர முடிந்தது. அவரது தார்மீகச் சிந்தனையும், சமுதாயப் பிரக்ஞையும் சமூகப் பொறுப்புணர்ச்சியும் அவர் பால் ஒரு ஆழமான மதிப்பை ஏற்படுத்தியது. அவர் ஏற்றுக்



கொண்டு மிக அனாயசமாக நடித்து விட்டுப் போகிற கதா பாத்திரங்கள் போன்று அவரும் ஒரு வித்தியாசமான பெண் மணியாக இருப்பதில் சந்தோஷம் வந்தது.

இதில் முக்கியமான ஒரு விஷயம் என்னவென்றால் கொல்லப்பட்ட அந்த நாடகக் கலைஞர் ஒரு ஆண். அந்த ஆண் கலைஞருக்காகத் திரை உலக சம்பந்தப்பட்ட எந்த ஆணின் குரலும் எழவில்லை. லட்சக் கணக்கில் ஊதியம் பெற்று புகழின் உச்சியில் நிற்கிற கதாநாயக நடிகர்கள் எவர் குரலும் கேட்கவில்லை. அப்படி ஒரு கலைஞர் கொல்லப்பட்ட சம்பவம் தங்களை எந்த விதத்திலும், பாதிக்காத மாதிரி - 'நமக்கேன் வம்பு' என்று வழக்கம் போல் ஆண் வர்க்கம் மௌனித்திருக்க,

ஒரு பெண் - சமூகப் பிரக்ஞையுள்ள பெண் - தன் சுய இழப்புக்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் - கொள்கைப் பிடிப்பினின்று நழுவாமல் - மிகுந்த மனிதாபிமானத்தின் வெளிப்பாடாகத் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார் என்கிற போது—

ஷபானா ஆஸ்மி என்கிற அந்தப் பெண் வெறும் ஓர் நடிகை மட்டும் தானா என்பதை யோசித்துப் பாருங்கள்.

சரி. யோசிக்கச் சொல்லுகிறீர்களே...அவரது வெளி நடப்பிற்குக் காரணமான அந்தக் கலைஞர் யார்...? அவர் கொலையுண்ட விதம் என்ன என்கிற கேள்விகள் உங் களுக்குள் எழுவது இயற்கை என்பதால் அதற்கான விளக்கத்தையும் தருகிறேன்.

கொலை செய்யப் பட்ட அந்தக் கலைஞரின் பெயர் சப்தர் ஹார்ஷ்மி. ஆங்கில இலக்கியத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர். கவிதைகள் எழுதுவதில் வல்லவர். ஓவியர். தொலைக்காட்சிப் படங்களை இயக்கித் தரும் டைரக்டர். இத்தனைத் திறமைகள் கொண்ட அறிவு ஜீவி. படிக்கும் காலத்திலேயே கம்யூனிஸக் கொள்கைகளால் கவரப்பட்டு அக்கட்சியின் உறுப்பினராகவும் ஆனவர்.

அவர் உருவாக்கிய 'வீதி நாடகக்' குழுவின் பெயர்தான் 'ஜன நாட்டிய மஞ்ச'. இந்த ஜன நாட்டிய மஞ்ஜ அமைப்பில் சப்தர் ஹார்ஷ்மியால் எழுதித் தயாரிக்கப்பட்ட வீதி நாடகங்கள் யதார்த்தமானவை. காட்சி ஜோடனைகளும், அரங்க அமைப்புக்களும் அற்றவை. நடிக, நடிகையருக்கான ஒப்பனை கூட இல்லாதவை. மிக நிதரிசனமானவை. சமூகத்தின் பிரச்சினைகளும், அவற்றின் மூலமும், அவை ஏற்பட்டதன் பின்னணிகளையுமே கருவாகக் கொண்டவை.

அந்தப் பின்னணியில் சற்றே காதல் கலந்து தரப்பட்ட நாடகம் 'சக்காஜம்'. இதில் ஏழை எளிய மக்களின் வறுமை, தொழிலாளர்களின் அவலநிலை, அதிகாரிகளின் அலட்சியப் போக்கு ஆகியவற்றை எடுத்துக் காட்டினார் சப்தர் ஹார்ஷ்மி. இந்த 'சக்காஜம்' நாடகம் வீதிக்கு வீதி நடித்துக் காட்டப் பட்டது.

அதே மாதிரி அடுத்துத் தயாரிக்கப் பட்ட நாடகத்தின் பெயர் 'ஹல்லா போல்'. இதுவும் வீதிக்கு வீதி நடிக்கப் பட்டது. இதில் ஆட்சேபிக்கக் கூடிய கட்டங்கள் இருப்ப தாகக் கூறி அந் நாடகத்தைத் தயாரித்த போதே தயாரிப்பைக் கை விடுமாறு சப்தர் ஹார்ஷமிக்கு விண்ணப்பம் செய்திருந்தனர்.

அதை லட்சியம் செய்யாத சப்தர் ஹார்ஷமி காசியாபாத் என்ற இடத்தில் இந்த நாடகத்தை நடத்திக் கொண்டிருந்த போது சில குண்டர்கள் நாடகக் குழுவினரைத் தாக்கினார்கள். இந்தத் தாக்குதலில் சப்தர் ஹார்ஷ்மியும் ராம் பகதூர் நேபாளி என்பவரும் கொல்லப் பட்டனர்.

கொலை செய்யப் பட்ட சப்தர் ஹார்ஷ்மியின் இறுதி ஊர்வலத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இவர்கள் பதினைந்து கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று தங்களின் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.



எந்த நாடகம் நிறுத்தப்பட வேண்டுமென்று சப்தர் ஹார்ஷ்மி குண்டர்களால் கொலை செய்யப் பட்டாரோ - அதே நாடகத்தை - அவர் கொலையுண்ட மூன்றாம் நாள் - அதே காசியாபாத்தில் சப்தர் ஹார்ஷ்மியின் மனைவி மோலாலயா ஸ்ரீராய் தானே முன் நின்று மீண்டும் போட்டுக் காட்டியிருக்கிறார்.

என்னுடன் வாதிட்ட எழுத்தாள, பதிப்பாள, கவிஞ, நண்பர்களே - இப்போது சொல்லுங்கள். பெண்களுக்கு சமூகப் பிரக்ஞையும், சமுதாயப் பொறுப்புணர்ச்சியும் இல்லையா? தார்மீகச் சிந்தனை கிடையாதா? வெறும் நுனிப்புல் மேய்கிற மேம் போக்குத் தனம் தானா?

அப்படித்தான் என்று இன்னமும் சாதிப்பீர்களானால் - முன்னர் குறிப்பிட்ட கமலா தேவி சட்டோபாத்யாயா யார்......? இதோ, கொலையுண்ட ஒரு கலைஞனுக்காகக் கண்டனக் குரல் எழுப்பியது யார்? அவரைக் கொலை செய்த குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையை முன் வைத்தது யார்...? அதுதான் போகட்டும். கணவன் தாக்குதலுக்கு ஆளாகிக் கொலை யுண்ட மூன்றாம் நாளே - கொல்லப்பட்ட அந்த இடத்திலேயே மீண்டும் அதே நாடகத்தை நடத்திக் காட்டிய நெஞ்சுரமும், மனோதிடமும் யாருக்கு வந்தது...?

உங்களின் வர்க்கமான ஆண்களுக்கா...? பெண்களுக்கு சமூகச் சிந்தனை இல்லவே இல்லை என்று ஆணித்தரமாக அறை கூவல் விடுத்த உங்கள் இனத்திற்கா...?

இல்லையே! ஷபானா ஆஸ்மி, மோலாயா ஸ்ரீ ராய் என்ற இரு பெண் மணிகளுக்குத்தானே அந்தப் பொறுப் புணர்ச்சியும், தார்மீகச் சிந்தனையும் ஏற்பட்டன. இவர் களுக்குள் தானே சமுதாயப் பிரக்ஞை விழிப்புற்றது.

அதனால் என் நண்பர்களே - ஒட்டு மொத்தமாகப் பெண்களுக்கு சமுதாயப் பிரக்ஞையும், பொறுப்புணர்ச்சியும் கிடையவே கிடையாது என்று அடித்துப் பேசி, ஆக்ரோஷ

மாக ஒதுக்கித் தள்ளிவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

My friend! Instead of ''blaming''
Us and ''Darkness''
Why not light a candle to dispel
This ''Darkness''?

என்று நான் படித்த ஆங்கிலக் கவிதையின் வரிகளைப் போன்று ஆங்காங்கே சில மெழுகுவர்த்திகள் எரிகின்றன. இருளைப் போக்குகின்றன. இருட்டு முற்றிலும் அகல இன்னமும் நிறைய மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட வேண்டும். அம் மெழுகு வர்த்திகளின் வெளிச்சம் சூரியனைப் போலப் பிரகாசிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட பிரகாசம் ஏற்படவேண்டும் என்பதற்காகத்தான் நான் மெழுகு வர்த்தி வெளிச்சங்களைக் காட்டுகிறேன். Why not light a candle to dispel the darkness...?

இது போன்ற மெழுகு வர்த்திகள் படித்த, உயர்மட்டப் பெண் மணிகளிடம்தான் - அப்பெண்களால்தான் ஒளிவிடும் என்பதல்ல. படிப்பறிவற்ற, ஒரு ஏழைச் சித்தாள் பெண் மணியால் கூட அப்படிப் பட்ட ஒளியேற்றி வெளிச்சம் காட்ட முடியும், இயலும் என்பதை அடுத்து விவரிக்கிறேன்...

## 8. திருடனைப் பிடித்த தீரப் பெண் பிரபா

ஏழைச் சித்தாள் பெண்மையைப் பற்றி எழுதுவதற்கு முன்—

ராஜம் பத்திரிகையின் சார்பில் திருச்சி வாசகர்களை நான் சந்தித்த போது ஒரு வாசகி கேட்ட கேள்வியின் பதிலாக நான் இதை எழுத நேரிடுகிறது. சித்தாள் பெண் மணிக்கு முன்பாக பிரபா என்கிற பம்பாயில் வசிக்கும்



மத்தியதர வர்க்கத்துப் பெண்மணியைப் பற்றி எழுதக் காரணம்...?

திருச்சி வாசகர் விழாவில் மத்தியதர வர்க்த்துப் பெண் மணி ஒருவர் கேட்ட இந்தக் கேள்வியே...

''ஏன் மேடம்...உதிரிப் பூக்களில் நீங்கள் எழுதிக் கொண்டு வருகிற சமுதாயப் பிரக்ஞை உள்ள பெண்கள் எல்லாம் உயர்மட்டத்துப் பெண்களாகவே இருக்கிறார்களே...அப்படியானால் என்னைப் போன்ற மத்தியதர வர்க்கத்துப் பெண்களிடம் சமுதாயப் பிரக்ஞை, பொறுப் புணர்ச்சி இவை கிடையாதா...?''

உண்டு என்பதை நிரூபிக்கவே இந்த நிஜமான சம்பவத்தைச் சித்தரிக்கிறேன். பிரபா என்கிற ஒரு மத்தியதர வர்க்கத்துப் பெண்ணின் விடா முயற்சியையும். வீரத்தையும் தெரியப்படுத்த விரும்புகிறேன். தன்னைப் போல் அலுவலகத்திற்குத் தினமும் ரயிலில் தனியாகப் பெண்கள் பெட்டியில் பயணிக்கிற பெண்களுக்குப் பாதுகாப்புத் தேவை என்பதன் காரணமாகப் போலீசுடன் ஒத்துழைத்த அப்பெண்மணியின் பொறுப்புணர்வையும், பெண்களுக்குப் பாதுகாப்புத் தேடித்தர முன் வந்த சமூகப் பிரக்ஞையையும் பாராட்டுவதன் மூலம் எடுத்து எழுதுவதன் மூலம் திருச்சி சகோதரிக்கு ஒரு நல்ல பதிலோடு இது போன்ற பொது நல உணர்வுகளை ஊக்குவிக்க முடியும் என்பதால் அச் சகோதரியின் கேள்விக்குப் பதிலளிக்கிற முயற்சியில் இதை எழுத எடுத்துக் கொண்டேன்.

இனி—

அந்தப் பிரபா யார், அவர் செய்த தீரச்செயல் என்ன என்பதைப் பார்ப்போம்.

பிரபா வெங்கடாசலம் ஐயர் இருபத்தைந்து வயதான மகாராஷ்டிரப் பெண். வெங்கடாசலம் ஐயர் என்கிற தமிழரைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டவர். பூஜா என்கிற நான்கு மாதப் பெண் குழந்தை உண்டு.

அந்தேரியில் ஓர் அலுவலகத்தில் பணிபுரிபவர். அந்தேரி போக தினமும் தன் வீட்டிலிருந்து கிராண்ட் ரோட் ஸ்டேஷன் வந்து ரயில் பிடிப்பவர்.

சம்பவம் நிகழ்ந்த அன்று காலை அலுவலகத்திற்குக் கிளம்பின பிரபா வழக்கத்தை விட சற்று நல்ல புடவையும், கழுத்திலும், காதுகளிலும், கைகளிலும் தங்க நகைகளும் அணிந்து கொண்டு புறப்பட்டார். கிளம்பின போது வெங்கடாசலம் கேட்டார்.

''என்ன பிரபா இன்னிக்கு இத்தனை நகையெல்லாம் போட்டுண்டு போறே...?''

''சாயந்திரம் என் ஆபீஸ் தோழி ஒருத்தியோட கல்யாண ரிஸப்ஷன். அப்படியே போயிட்டு வரலாம்னு தான்...?''

''ஜாக்கிரதை பிரபா...புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்துண்டாவது போ...''

''சரி...''

பிரபாவும், அவரோடு வேலை பார்க்கிற கிரண் என்பவரின் மனைவி ஆஷாவும் கிராண்ட் ரோட் ஸ்டேஷனில் சந்தித்துப் பேசியவாறே பெண்கள் கம்ப்பார்ட்மெண்ட் ஒன்றில் ஏறினர். வேறு பயணிகள் அற்ற அப் பெட்டியின் ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்து விட்ட இடத்திலிருந்து பேச்சைத் தொடர்ந்தனர்.

பம்பாய் சென்ட்ரல் ரயில் நிலையத்தை விட்டுக் கிளம்பிய ரயில் அடுத்த ஸ்டேஷனில் நின்று புறப்படும் சமயத்தில் இவர்களின் பெட்டிக்குள் ஏறினான் ஒரு இளைஞன். ஒல்லியாய், உயரமாய், கையில் ஒரு ரெக்ஸின் பை வைத்திருந்த அந்த இளைஞன் சில வினாடிகள் கதவருகிலேயே தயங்கி நின்றான்.

அதைக் கவனித்த பிரபாவும், ஆஷாவும் அவன் தவறிப் போய் பெண்கள் பெட்டியில் ஏறிவிட்டதாக நினைத்தனர். ரயில் கிளம்பி வேகம் பிடித்து விட்டதால் இறங்கி வேறு



பெட்டிக்கு மாற வழியற்றுக் கதவடியிலேயே தயங்கி நிற்பதாகக் கருதினர்.

ஆனால் அடுத்த வினாடியே அவர்களின் ஊகம் தவறு என்பதை நிரூபிக்கிற மாதிரி தன் கையிலிருந்த ரெக்ஸின் பையிலிருந்து ஒரு கத்தியையும் ஒரு துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு அவர்களை நெருங்கினான் அவ்விளைஞன்.

அதைப் பார்த்த ஆஷா பயந்து போய்க் கத்தத்தொடங்கினாள். அதற்குள் அவர்களை நெருங்கிவிட்ட அவன் கத்தியின் கைப்பிடியால் அவள் தலையில் ஓங்கி அடித்தான். ஆஷா மயங்கி ரயில் பெட்டியின் தரையில் சரிய - என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிய பிரபா எழுந்து அபாயச் சங்கிலியை இழுக்கப் போக அந்த இளைஞன் பாய்ந்து அதே மாதிரி கத்தியின் கைப்பிடியால் அவள் தலையிலும் ஒன்று போட்டான்.

பிரபா பிறவியிலேயே சற்று தைரியசாலி. தீமையைக் கண்டு பொங்குபவள். ஆனாலும் அந்த நிலையில் அவனை எதிர்த்துப் போராடுகிற சக்தியற்று ஸீட்டில் சரிந்தாள். அதற்குள் கீழே மயங்கி விழுந்திருந்த ஆஷாவின் கை வளையல்களையும், ரிஸ்ட் வாட்ச்சையும் கழற்றிக் கொண்ட அவன்—

தன் கைப்பையை பிரபாவின் முகத்திற்கு எதிராக நீட்டினான்.

''ம்...சீக்கிரம். உன்னுடைய காதுத் தோடு, கை வளையல்கள், கழுத்து நெக்லெஸ் எல்லாவற்றையும் கழட்டி இந்தப் பையில் போடு...'' என்று உறுமினான்.

பிரபா தயங்கினாள். அவன் கத்தியை அவள் முகத்தில் வைத்து அழுத்திப் பயமுறுத்தினான்.

''ஒரு நகை பாக்கியில்லாமல் பைக்குள் வரணும். இல்லைன்னால் கொன்னுடுவேன்...''

பிரபா எல்லா நகைகளையும் கழற்றி அவன் பைக்குள் போட்டாள்.

''அதோ...விரலில் இருக்கிற மோதிரம்...''

''அது என் கல்யாண மோதிரம்...''

''அதையும் கழட்டு...''

''ம்ஹூம்...மாட்டேன். அதைத் தர மாட்டேன்...''

இளைஞனின் கத்தி லேசாய் கன்னத்தைக் கீற குபுகுபு வென்று ரத்தம் வெளிவந்தது. வலியிலும், எரிச்சலிலும் தவித்துப் போன பிரபா அந்தக் கல்யாண மோதிரத்தையும் கழற்றிப் பைக்குள் எறிந்தாள். அதையும் பெற்றுக் கொண் டவன் மடமடவென்று ரயிலின் ஜன்னல்களை மூடினான். பின்னர் ரயில் அடுத்த ஸ்டேஷனில் நின்றதும் கீழே குதித்து ஓடுகிற வசதிக்காகக் கதவடியில் போய் நின்று கொண்டான்.

அந்த வினாடிகளில் அவன் உருவத்தை மிக நன்றாக மனதில் பதிய வைத்துக் கொண்டாள் பிரபா. கன்னை வெட்டும், அதிலிருந்து பெருகிய ரத்தமும், நகைகளை அவன் பறித்துக் கொண்ட விதமும் அவளுக்குள் கவலை மூட்டின. என்ன ஆனாலும் சரி, இவனை விட்டு விடக் கூடாது. போலீஸிடம் இவனைப் போட்டோ பிடிக்கிற மாதிரிப் பிடித்து இவன் உருவத்தை அப்படியே சொல்லி இவனைக் கைது செய்ய வைக்க வேண்டும். இவனைத் தப்பிக்க விட்டு மீண்டும் தன்னைப் போல் பெண்கள் பெட்டியில் தனியாகப் பயணிக்கிற பெண்களுக்கு இதே கதி நேரும்படி விட்டு விடக் கூடாது...

பிரபா முடிவு செய்து கொண்டாள். ரயில் பாந்த்ரா ஸ்டேஷனுக்கு அருகில் ஸிக்னலுக்காக நின்ற போது அவன் கடாரென்று வெளியில் பாய்ந்து மறைய பிரபா திருடன் திருடன், பிடிங்க என்று இந்தியில் குரல் கொடுத்தாள்.

பாந்த்ராவில் ரயில் நின்றதும் போலீஸ் இரு பெண் களையும் முதலில் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய் முதலுதவி செய்து வீட்டிற்கு அனுப்பி வைத்தது.



அன்று பிற்பகல் பிரபாவும், ஆஷாவும் வெங்கடாசலத் தையும், ரெணையும், அழைத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தனர். இன்ஸ்பெக்டர் தைர்யஸிங் போன்ஸ்லே இருவரையும் கேள்விகள் கேட்டார். ஆஷா மயங்கி விழுந்ததால் போலீசுக்கு அதிக உதவி செய்ய இயல வில்லை. ஆனால் பிரபா அந்தத் திருடனைப் பிடிக்க வேண்டும் என்பதில் தீர்மானம் மட்டுமின்றி திடமாகவும் இருந்தாள்.

''இன்ஸ்பெக்டர்...அவனைப் பிடிச்சே தீரணும். அதுக்கு நான் எந்த உதவியும் செய்யத் தயாரா இருக்கேன்...''

இது போன்று போலீசுடன் ஒத்துழைக்க முன்வரும் பெண்ணை அதுவரை இன்ஸ்பெக்டர் சந்தித்திராத காரணத்தால் பிரபாவின் பிடிவாதத்தையும், தைரியத் தையும் அவர் பாராட்டி விட்டுச் சொன்னார்:

''பிடிச்சுடலாம்மா...உங்களோட பரிபூரண ஒத்துழைப்பு இருக்கும்னா நிச்சயம் அவனைப் பிடிச்சு நகைகளை மீட்டுடலாம்...''

சடாரென்று நிமிர்ந்தாள் பிரபா.

''என் நகைகளுக்காக மட்டும் அவனைப் பிடிக்கணும்னு சொல்லலை...இனி பெண்கள் பயமில்லாமல் செல்ல இந்த மாதிரி பொருளையும் பறி கொடுத்து உடம்புக் காயமும் படாமல் இருக்கத்தான் முக்கியமா நான் அவனைப் பிடிக்கணும்னு சொல்றேன்...''

அவளின் அந்தப் பொறுப்புணர்ச்சி இன்ஸ்பெக்டரை வேகமாக வேலை செய்ய வைத்தது. தங்களின் ரிக்கார்டில் இருந்த குற்றவாளிகளின் புகைப் படங்களையெல்லாம் கொண்டு வந்து அடையாளம் காட்டச் சொன்னார். கிட்டத்தட்ட 500 புகைப் படங்களைப் பார்த்தும் அவன் அதில் இல்லை. அன்றிரவு அவர்கள் வீடு திரும்ப வெகு நேரமாகி விடவே வெங்கடாசலத்தின் பெற்றோர் பயந்து

போய் வாசலிலேயே நின்றிருந்தார்கள். பிரபாவும், வெங்கடாசலமும் வந்ததும் நிம்மதிப் பெருமூச்சோடு சொன்னார்கள்.

''விடு பிரபா. நகை போனால் போகட்டும். உழைச்சு சம்பாதிச்சு வேற செய்து போட்டுக்கலாம். அவனைப் பிடிக்கறேன்னு போலீசுக்கு உதவி செய்யப் போய் உயிருக்கு ஏதாவது ஆபத்து வந்துடப்போறது...''

''அதெல்லாம் ஒன்னும் வராதும்மா. இப்படிப் பயந்து எல்லாரும் விட்டுடறதால்தான் இந்த மாதிரித் திருடங்க அதிகமாறாங்க. நான் அவனை விடப் போறதில்லை. அவனைப் பிடிச்சுத் தர்ற வரைக்கும் தூக்கம் வராது எனக்கு...''

அது போலவே பிரபா தூங்கவில்லை. மறுநாள் செய்தித்தாள்களின் முதல் பக்கச் செய்தியாக அது வெளிவர பம்பாய் நகரம் அலறிற்று. இன்ஸ்பெக்டர் போன்ஸ்லேயை மேலிடம் விரட்டிற்று. போன்ஸ்லை பிரபாவின் உதவியை நாடினார்.

பிரபா மீண்டும் தன் கணவருடன் போலீஸ் நிலையம் போனாள். மீண்டும் புகைப் படங்களைப் பார்த்தாள். இரண்டு மணி நேரத் தேடலுக்குப் பின்னர் ஒரு புகைப் படத்தைக் காட்டி—

''இதோ...இவன்தான்...'' என்றாள்.

அதை வாங்கிப் பார்த்த இன்ஸ்பெக்டர் ஏமாற்ற மடைந்தார். ஏனெனில் பிரபா காட்டிய புகைப் படத்தில் இருந்தவன் சாராயக் கடைகளில் கொள்ளையடிப்பவனே தவிர இது போன்ற திருட்டுக்களில் ஈடுபடுபவனில்லை. திருடர்களுக்குத் தொழில் தர்மம் உண்டு. ஒருவர் செய்கின்ற திருட்டில் அல்லது அது போன்ற வகைகளில் மற்றவர் குறுக்கிடுவதில்லை! அதனால் பிரபா காட்டிய புகைப்படத் திருடனல்ல அவளிடம் நகை பறித்தவன் என்பதை விளக்கினார் போன்ஸ்லே.



''ஆனால் அந்தத் திருடனும் இவனைப் போன்று குறுந்தாடியுடனும், நீண்டு அடர்ந்த தலை முடியுடனும், பெரிய பெரிய கண்களைக் கொண்டவனாகவும் தான் இருந்தான்'' என்றாள் பிரபா.

அந்தப் புகைப் படத்தை மற்ற போலீஸ் ஸ்டேஷன் களுக்கும் அனுப்பி வைத்தார் போன்ஸ்லே. அடுத்த சில நாட்கள் பிரபாவையும் அவள் கணவனையும் பம்பாய் சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து பாந்த்ரா ஸ்டேஷன் வரை தேடச் செய்தார். அந்தக் கூட்டத்தில் ஒவ்வொரு ஆணின் முகமாக ஏறிட்டதில் சிலர் அவளை ஒரு மாதிரிப் பார்ப்பதை உணர்ந்த பிரபா தன் கஷ்டத்தை இன்ஸ்பெக்டர் போன்ஸ்லேயிடம் தெரிவித்தாள்.

அன்றிரவு முழுதும் யோசித்த இன்ஸ்பெக்டர் மறுநாள் பிரபா வந்ததும் ஒரு யோசனை சொன்னார்; அதன்படி மறு நாளிலிருந்து அவரே பிரபாவிற்கு முஸ்லிம் பெண்கள் அணிகிற பர்தாவும், வெங்கடாசலத்திற்கு தலைக்குல்லாவும் தன் கைப் பணத்திலிருந்து வாங்கித் தந்தார்.

பிரபா பர்தா உடையில் வீட்டை விட்டுக் கிளம்பிய போது வெங்கடாசலத்தின் பெற்றோரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியது. அவளை அவ்வாறு போக அவர்கள் அனுமதிக்கவில்லை. அவர்களிடம் பிரபா கெஞ்சிக் கேட்டு அனுமதி வாங்கிக் கொண்டாள்.

''ரெண்டே நாள்தாம்மா...இந்த ரெண்டு நாளுக்குள்ள என்னால அந்தத் திருடனைக் கண்டுபிடிக்க முடிலைன்னா விட்டுடறேன்...''

பர்தா உடையில் பம்பாய் சென்ட்ரலில் தேட ஆரம்பித்து பாந்த்ரா வரை மாலை ஆறரை மணி வரை தேடி ஓய்ந்து போய் விட்டனர். காலை எட்டு மணியி லிருந்து மாலை ஆறரை வரை பர்தா உடைக்குள் ஒரு பெண்ணை அடைத்து வைக்கிற சிரமத்திற்காக சங்கடப் பட்டார் இன்ஸ்பெக்டர் போன்ஸ்லே. ஆனால் பிரபா அதை சிரமமாகக் கருதவே இல்லை.

மறுநாள் காலை மீண்டும் பிரபா பர்தாவிலும், வெங்கடாசலம் குல்லாயுடனும், இன்ஸ்பெக்டர் போன்ஸ்லே மற்ற போலீஸ்காரர்களுடன் மஃப்டி உடையில் கிளம்பினர்.

இன்று அதிர்ஷ்டக் காற்று பம்பாய் சென்ட்ரல் ஸ்டேஷனிலேயே அவர்கள் பக்கம் வீசிற்று. பிளாட்பாரம் ஒன்றில் ரெக்ஸின் பையும், அடர்ந்த முடியுமாக உட்கார்ந்திருந்த அவனைச் சட்டென்று கண்டுபிடித்து விட்டாள் பிரபா. மெல்ல வெங்கடாசலத்தின் கையைப் பற்றி பர்தாவை லேசாக விலக்கி அவனை அடையாளம் காட்டி, சொன்னாள்.

வெங்கடாசலத்தின் பார்வை அவன் மீது பதிந்தது. பின்னர் நகர்ந்து மஃப்டியில் இருந்த போன்ஸ்லேயிடம் சொல்லிற்று. போன்ஸ்லே மற்ற போலீஸ்காரர்களுக்கு உத்தரவு கொடுத்தார்.

இன்ஸ்பெக்டர் போன்ஸ்லேயும் மற்ற போலீஸ்காரர்களும் அவனைச் சுற்றி வியூகம் அமைத்து அவன் மீது பாய்ந்து அழுத்திப் பிடித்தனர். அவனது ரெக்ஸின் கைப் பையிலிருந்து ஒரு கத்தியும், நாட்டுக் கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டன. அவனை ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் விசாரித்ததில் பிரபா, ஆஷாவின் நகைகள் தவிர மற்ற இடங்களில் அவன் திருடிய நகைகளும், கைக்கடிகாரங்களும் கண்டு பிடித்துத் திரும்பப் பெறப்பட்டன.

இன்ஸ்பெக்டர் போன்ஸ்லே பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் சொன்னது.

''திருமதி பிரபா வெங்கடாசலம் ஐயர் என்கிற பெண் இவ்வளவு தீரத்துடன் முயற்சி செய்யாமல் இருந்திருந்தால் இந்தக் குற்றவாளியை எங்களால் பிடித்திருக்க முடியாது. அப் பெண்மணியின் வீரமும், பொறுப்புணர்ச்சியும், சமூகப் பிரக்ஞையும் பாராட்டத் தகுந்தவை என்பதோடு மட்டுமின்றி மற்ற பெண்களால் பின்பற்றப்பட வேண்டியவை என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்...''



இன்ஸ்பெக்டர் போன்ஸ்லே சொன்ன அதையே அந்தத் திருச்சி வாசகப் பெண்மணிக்கும் சொல்லிக் கொண்டு—

அடுத்து அந்தச் சித்தாள் பெண்ணை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்.

என்ன...?

## 9. காரியம் யாவினும் கை கொடுக்கும்

திருச்சி ராஜம் வாசகர் விழாவில் என்னுடன் நேருக்கு நேர் உரையாடிய ஒரு வாசக இளைஞர் விழா முடிந்த பின் மீண்டும் என்னைத் தனியாகச் சந்தித்து ஒரு கேள்வி கேட்டார்.

வாசகர் : மேடம். நான் கேட்கறேன்னு நீங்க தப்பா நினைச்சுக்கக் கூடாது. உங்க கிட்டே ஒரு முக்கியமான கேள்வி கேக்கணும்.

நான் : கேளுங்க. உங்க கேள்விகளுக்குப் பதில் அளிக்கத்தான் நான் இங்கே வந்திருக்கேன்.

வாசகர் : மேடம், இந்தக் காலப் பெண்களுக்கு நீங்க சொன்ன மாதிரி சமுதாயப் பிரக்ஞை இருக்கலாம். ஆனால் தேசப் பிரக்ஞை, தேசிய நோக்கு, நாட்டுக்காக ஆற்றுகிற வீரச் செயல் நாட்டுப் பற்று இதெல்லாம் இல்லைன்றது என் அபிப்பிராயம். ஜான்ஸி ராணி மாதிரி, ராணி மங்கம்மா மாதிரி தேசப்பற்று மிகுந்த பெண்களை நாம் எங்கே காண முடியும்?

நான் : ஏன் இந்திரா காந்தியை மறந்துட்டீங்களா? அவங்களுக்கு இருந்த நாட்டுப் பற்றும், கூர்மையான அறிவும், சமயோஜித புத்தியும், இவை எல்லாவற்றிற்கும் மேலான ராஜதந்திரமும் ராணி மங்கம்மாவிற்கும், ஜான்ஸி ராணிக்கும் குறைந்ததா...என்ன...?

வாசகர் : அவங்களை விட்டுடுங்க அவங்க ஒரு யுனிக் பர்ஸனாலிட்டி. நான் சாதாரண நிலைமைல கேட்கறேன். நடுத்தர குடும்ப வர்க்கத்துப் பெண்களைப் பற்றி பேசறேன்.

அன்று அப்போது அந்த வாசகர் கேள்விக்கான பதிலை யோசித்தேன். இது கொஞ்சம் யோசித்துச் சொல்ல வேண்டிய பதில், அதனால் உங்கள் கேள்விக்கான பதிலின் என் பக்க வாதத்தை அப்புறம் உங்களுக்கு எழுதுகிறேன் என்றேன். இதோ இப்போது எழுதுகிறேன். என்னிடம் இக்கேள்வியை முன் வைத்த வாசக அன்பரே—

இதைப் படியுங்கள். படித்து விட்டு யோசியுங்கள். ஜான்ஸி ராணி மாதிரி குதிரை ஏறிப் போர் புரிந்தால் மட்டுமே தேச பக்தியா...அல்லது ராணி மங்கம்மாவாகக் கையில் வாள் ஏந்துவது தான் நாட்டுக்கான தியாகமா...?

அது ஒரு வகை வீரம், தியாகம், பக்தி என்றால் - வீட்டில் இருந்து கொண்டே - தேசத்தொண்டில் ஈடு பட்டிருக்கிற கணவருக்கு - அவரது தொண்டில் எந்தவித இடர்ப்பாடும் வந்து விடக்கூடாது என வீட்டுக் கஷ்டங்கள், சங்கடங்கள், தொந்தரவுகள் - ஏன் சாவைக் கூட மறைத்து வைத்து கணவர் போயிருக்கிற வேலையின் முக்கியத்துவத் தையும், பொறுப்பையும் உணர்ந்து அவரை ஊக்குவித்திருக் கிறாளே ஒரு பெண்மணி - சாதாரணக் குடும்பத் தலைவி - அதை உங்களுக்கு எழுதுகிறேன். படித்துப் பார்த்து விட்டுச் சொல்லுங்கள். இந்தப் பெண்மணியின் தேச பக்தியும், தியாகமும், விவேகமும், வாள் ஏந்திப் போரிட்ட பெண் களின் வீரத்திற்கும் பக்திக்கும், சேவை மனப்பான்மைக்கும் எந்த அளவு குறைந்ததென்று...

இனி அந்த நிஜ சம்பவம் :

சமீப காலத்தில் இந்தியாவின் புகழை உலக அரங்கில் மிக அதிகமாக உயர்த்திய பெருமைக்கு உரிய விஷயம் 'அக்னி'. இந்த ஏவுகணையைச் செலுத்தினதில் அமெரிக்காவே நம்மைப் பார்த்துப் பொறாமை கொள்கிற அளவிற்கு நம்மைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்திருக்கிறது 'அக்னி'. இதில் பாரதமும், பாரதப் பிரதமரும், நாமும் எவ்வளவு சந்தோஷப்படுகிறாமோ எவ்வளவு பெருமைப் படுகிறாமோ அந்த அத்தனை பெருமையும் சந்தோஷமும்



போய்ச் சேர வேண்டியது 'அக்னி'யை இத்தனைத் திறம் படச் செலுத்த உறுதுணையாக நின்ற விஞ்ஞானி களைத்தான் உலக விஞ்ஞான முன்னேற்றத்திற்கு இந்திய விஞ்ஞான நுட்பம் எந்த அளவும் குறைந்ததில்லை என்று நிரூபித்துக் காட்டியவர்கள் அவர்கள். இரவைப் பகலாக்கிப் பாடுபட்டவர்கள், சாப்பாட்டையும், தூக்கத்தையும் மறந்து உழைத்தவர்கள்.

அந்த விஞ்ஞானிகள் அப்படி ஒன்றிப் பணி புரிய உறுதுணையாக இருந்தவர்கள் யார்...? அவர்களின் வீட்டு இல்லத்தரசிகள் தங்கள் கணவர் ஆற்றும் பணியின் முக்கியத் துவத்தைப் புரிந்து கொண்டு, அதனால் தேசம் அடையப் போகிற பெருமையையும், புகழையும், முன்னேற்றத் தையும் உணர்ந்து, வீட்டுப் பொறுப்பு முழுதையும் தாங்களே ஏற்றுக் கொண்டு போர் வீரர்களின் மனைவியரை போல் வெற்றி வாகை சூடிவர வாழ்த்தியவர்கள். அக்னியின் வெற்றியில் இந்த இல்லத்தரசிகளின் பங்கை யாராலும் மறந்துவிட முடியாது.

**Charity pegins at home** என்கிற மாதிரி தேசபக்தியும் கூட வீட்டிலிருந்து தான் ஆரம்பிக்கிறது. வீடு இடம் கொடுக்காது போனால் ராப்பகலாக வீட்டை மறந்து அந்த விஞ்ஞானிகளால் தங்கள் சேவையில் ஈடுபட்டிருக்க முடியாது. கணவர் அலுவலகத்திலிருந்து சற்று தாமதமாக வந்தாலே முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்கிற பெண்கள் இருக்கிறார்கள். ''உங்களைக் கல்யாணம் பண்ணின்டு என்ன சுகத்தைக் கண்டேன். ஒரு சினிமா உண்டா, பீச் உண்டா?'' என்கிற முணுமுணுப்புக்களைக் கேள்விப் பட்டிருக்கிறேன். ''இவருக்கு வீட்டு நினைப்பு ஏது...? பேசாம ராத்தூக்கத்தைக் கூட இவர் ஆபீஸ்லயே வச்சுக் கலாம்...'' என்று அங்கலாய்க்கிற பெண்களைப் பார்த்திருக் கிறேன். ''ஆபீஸ் தானே அவருக்கு முதல் பெண்டாட்டி...'' எனக் குறைபடுகிற வர்க்கத்தைக் கண்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட பெண்களுக்கு மத்தியில் அக்னி launch siteல் குழுமிய விஞ்ஞானிகளின் மனைவிகள் போற்றதலுக்கு உரியவர்கள். தங்களின் கணவர்மார்கள் எத்தகைய பொறுப்பு மிக்க பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து மற்ற எல்லா வீட்டுப் பொறுப்புக் களையும் தாங்கள் ஏற்றுக் கொண்டவர்கள். அப்படிப் பட்ட விஞ்ஞானிகளில் ஒருவரான வி. ஆர். நாகராஜனின் மனைவியின் மகத்தான சேவையைப் பற்றியே நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 'இந்து' நாளிதழில் அப் பெண்மணியைப் பற்றின சிறிய கட்டமிட்ட செய்தியைப் படித்து எனக்குள் ஏற்பட்ட நெகிழ்ச்சியை அடக்கிக் கொள்ள இயலாமல் ஒரு கடிதம் கூட எழுதி C/o Hindu விற்கு அனுப்பினேன்.

வி. ஆர். நாகராஜன்—அக்னி ஏவுகணைக்குக் காரணமான முக்கிய விஞ்ஞானிகளில் ஒருவர். ஹைதரா பாத்தில் DRDLல் அதாவது Defence Research and Development Laboratoryல் பணிபுரிந்தவர். இவர் தான் அக்னியின் மின்சார சம்பந்தப்பட்ட 40 சப்ஸிஸ்டத்திற்கும் (Sub system) முக்கிய பொறுப்பாளர். சாந்திபூரிலிருந்து ஹைதராபாத்தில் இருக்கும் தன் குடும்பத்தைத் தினமும் தொலை பேசியில் அழைத்துப் பேசுவார் நாகராஜன். அவர் மனைவி ''வீட்டில் எல்லோரும் சௌக்கியம். கவலைப் படாதீர்கள். உங்கள் வேலையை வெற்றிகரமாக முடியுங்கள்...'' என்றே பதில் சொல்வார்.

வழக்கப்படி ஏப்ரல் 19-ம் தேதியும் நாகராஜன் ஹைதராபாத்திற்குப் போன் செய்திருக்கிறார். அன்று அவருடைய சின்னப் பெண் உடல் நிலை சரியில்லாமல் இருந்திருக்கிறாள். ஆனாலும் அவர் மனைவி தன் வழக்கமான சிரிப்பில் பேசியிருக்கிறார்.

''வீட்ல எல்லாரும் சௌக்கியம். நீங்க உங்க வேலைல கவனமா இருங்க. பேப்பர்ல அக்னி நாளைக்கு லாஞ்ச் செய்யப் போறதாப் படிச்சேன். ரொம்ப ரொம்ப



சந்தோஷமா இருக்கு. இந்த மகத்தான தேச சேவைல நீங்க ஈடுபட்டிருக்கிறது பெருமையா இருக்கு. வீட்டுக் கவலை, குழந்தைங்க கவலை, மற்ற எல்லாக் கவலையையும் விட்டுட்டு அக்னியைப் பத்தி மட்டும் கவலைப்படுங்கோ... ஐ விஷ் யூ ஆல் சக்ஸஸ்...''

''ஓ...தாங்க்யு...தாங்க்யு ஸோமச்...'' - கண்களை மூடிக்கொண்டார் நாகராஜன். மனைவியின் உற்சாகமும், ஊக்குவித்தலும் அவரை நெகிழச் செய்தன.

''அப்புறம்...'' என்று தயங்கினார் அவர் மனைவி.

''என்ன...சொல்லு...?''

''ஒன்னுமில்ல...அக்னி லாஞ்ச் ஆனதுக்கு அப்புறம் ஒரு நாளோ ரெண்டு நாளோ வீட்டுக்கு வர முடியுமா...?''

நாகராஜன் தயங்கினார்.

''ஏன்...என்ன விஷயம்...? ஏதாவது முக்கியமான விஷயமா...?''

''நோ...நோ...முக்கியமா ஒண்ணுமில்ல...வர முடிஞ்சா வாங்களேன்...''

''பார்க்கறேம்மா...முடியாதுன்னுதான் நினைக்கறேன், ஏன்னா அக்னி லாஞ்ச் ஆனப்புறம் போஸ்ட் லாஞ்ச் செக் அப் எல்லாம் இருக்கு. அது ரொம்ப முக்கியம். அதனால அதைப் பார்த்துக்கணும். அதுக்கு நாலைஞ்சு நாள் ஆகும்...''

''அப்ப சரி...அப்படின்னா எப்ப முடியறதோ அப்ப வாங்க...''

''ஓகேம்மா...குழந்தைங்ககிட்ட சொல்லு. அப்பா கிட்ட சொல்லு...என்ன? வச்சுடட்டுமா...? குட்நைட்...''

ஏப்ரல் 20-ம் தேதி மீண்டும் நாகராஜன் சாந்திப் பூரிலிருந்து தன் வீட்டிற்குப் போன் செய்தார். அப்போதும் அவர் மனைவி, ''வீட்டில் எல்லோரும் சௌக்கியம். 'அக்னி!' லாஞ்ச் ஆகி எல்லாம் நல்லபடி முடிந்த பின் நீங்கள் வந்தால் போதும்...'' என்று சொல்லி போனை வைத்திருக் கிறார்.

ஆனால் மறுநாள் நாகராஜன் வீட்டுக்குப் போன் செய்ய நாகராஜனின் 82 வயதான அப்பா போனை எடுத்திருக்கிறார். நாகராஜனின் குரலைக் கேட்டதும் தாங்க முடியாதவராக விசும்பி இருக்கிறார். ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு பேச முயன்றிருக்கிறார்.

அவரது குரல் தடுமாறுவதையும், லேசான விசும்பல் சத்தத்தையும் கேட்ட நாகராஜன் சந்தேகத்தோடு என்ன விஷயம் என்று அப்பாவைக் கேட்டிருக்கிறார்.

அதற்கு மேல் தாங்க இயலாத கிழவர் குமுறிக் குமுறி அழுது விஷயத்தைச் சொல்லி விட்டார்.

''நாகராஜா...உன்னோட மச்சினன் வெங்கட்ராமன் பதினெட்டாம் தேதி நடந்த கர்நாடகா எக்ஸ்பிரஸ் ரயில் ஆக்ஸிடெண்ட்டுல செத்துப் போயிட்டாண்டா...''

அந்தச் செய்தியின் அதிர்ச்சி நாகராஜனால் தாங்க முடியாததாயிற்று. அவருடைய மைத்துனரும் ஓர் விஞ்ஞானிதான். ஸோஷியல் சைன்டிஸ்ட். பெங்களூரில் வசிப்பவர். இவருக்குப் பிரியமானவர். இருவரும் பேச உட்கார்ந்தால் மணிக்கணக்காகும். அதையெல்லாம் நினைத்து, தாங்க இயலாதவராகக் குமுறிப் போய்க் கேட்டார் நாகராஜன்.

''நேத்து போன் பண்ணினப்போ ஏம்ப்பா இந்த ந்யூஸை எனக்குச் சொல்லலை...!''

''உன் பொண்டாட்டிதான் சொல்லக் கூடாதுன்னு தடுத்து நிறுத்திட்டா...அது மட்டுமில்ல உன் பொண்ணுக்கு உடம்பு ரொம்ப அதிகாமானதையு'ம் தெரிவிக்கக் கூடாதுன்னிட்டா...அக்னி லாஞ்ச் ஆகிற வரைக்கும் எந்த விஷயமானாலும் உன் காதுல போடக் கூடாதுன்னிட்டா. அவர் போயிருக்கிறது ரொம்பப் பெரிய விஷயம். இந்த தேசத்தைப் பெருமைப்படுத்தப் போற விஷயம். அதுல ஈடுபட்டிருக்கிறப்போ வீட்டுக் கஷ்டம், சங்கடத்தையெல்லாம் சொல்லி அவரைக் கஷ்டப் படுத்தக் கூடாது.



நாட்டு விஷயத்துக்கு முன்னால வீட்டுக் கஷ்டம் ரொம்பச் சின்னதுன்னு சொன்னா...அவ சொன்னது ரொம்ப வாஸ்தவம்னு தோனினதால் நானும் பேசாமல் இருந்துட்டேன். இப்போ நானே போனை எடுத்ததால் மனசு தாங்கலை. சொல்லிட்டேன்...''

நாகராஜனுக்கு மைத்துனர் இறந்த செய்தி பெரிய அதிர்ச்சியைத் தந்தாலும் மனைவியின் பொறுப்புணர்ச்சியும் விவேகமும், தேச பக்தியும் அவரைச் சிலிர்ப்படையச் செய்தன.

இப்போது சொல்லுங்கள் திருச்சி வாசகரே...! காரியம் யாவினும் கைகொடுத்து...! என்று பாரதி சொன்ன பெண்ணா இல்லையா நாகராஜனின் மனைவி...? தானே அக்னி ஏவுகணையில் பங்கு கொண்டிருக்கிற உன்னத உணர்வுடன் செயல்பட்டிருக்கிறாரே - இது தேச பக்தி இல்லாமல் வேறு என்ன...?

இன்று 'அக்னி' ஏவுகணையைப் பார்த்து உலகம் வியப்படைகிறதென்றால் பாராட்டுகிறதென்றால், அமெரிக்கா பொறாமைப்படுகிறதென்றால், நாமெல்லாம் சந்தோஷப்படுகிறோமென்றால் - பெருமையுடன் தலை நிமிர்ந்து நடக்கிறோமென்றால் - நாகராஜனின் மனைவியைப் போன்று எத்தனைப் பெண்களின் தேசப் பற்றும், தியாகமும் அதில் அடங்கியிருக்கக் கூடும் என்பதை என்னால் எண்ணிப் பார்க்க முடிகிறது; உங்களாலும் முடிகிறதல்லவா?

## 10. புஷ்பா என்றொரு பூ மனம் கொண்டவள்

இரண்டு மூன்று தரம் ஒரு சித்தாள் பெண்மணியைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு எழுதாமலே விட்டிருக்கிறேன். ஒரு வேளை நான் அந்தப் பெண்ணை மறந்து போய் விட்டேனோ என்று கூட நீங்கள் நினைத்திருக்கலாம். ஆனால் நான் மறக்கவில்லை. அவ்வளவு சுலபமாக அவளை

என்னால் மறக்க முடியாது. ஏன், மறக்கவே முடியாது என்று கூடச் சொல்லலாம். அந்த அளவிற்கு என் மனதில் பாதிப்பை ஏற்படுத்திய பெண்மணி அவள். நீங்காத அளவில் நெஞ்சில் இடம் பெற்ற பெண். 'Thy need is greater than mine' என்ற மார்க்கஸ் அரிலியஸின் வார்த்தைகளை நினைவு படுத்துகிற பெண். மார்க்கஸ் அரிலியஸ் ஆங்கிலத்தில் சொன்னதை தன் எளிய தமிழில் சொல்லி என்னை அடித்து நிறுத்தின பெண்.

இந்தப் பெண்ணை - பெயர் நினைவில்லை. அவள் நினைவில் இருக்கிற அளவில் அவளது பெயர் நினைவில் நிற்கவில்லை. பெயரில் என்ன இருக்கிறது. பெயர் என்பது வெறும் அடையாளம் தானே...? அதனால் அவளுக்கு நானாகப் புஷ்பா என்ற பெயரைச் சூட்டி விடுகிறேன்.

இந்த புஷ்பாவை நான் எதேர்ச்சையாகத்தான் சந்தித்தேன். நான் சிறு பெண்ணாக இருந்த போது ஓடி விளையாடிய தெருவில், எனக்கு மிக மிக நெருங்கின புரொஃபஸர் ராமசாமி அய்யரின் வீட்டில் சந்தித்தேன். கிட்டத்தட்ட என்னைப் பெற்ற தாயைப் போன்ற ராமசாமி அய்யரின் மனைவி தங்கம் மாமிதான் புஷ்பாவை எனக்கு அறிமுகப்படுத்தினார். அந்த மாமியை நாங்கள் அழைப்பது புரொஃஸர் மாமி என்பது தான். யாருக்கு எந்த உதவி வேண்டுமானாலும் டக்கென்று நினைவுக்கு வருவது புரொஃபஸர் மாமி தான். நடுராத்திரியோ, பட்டப் பகல் சித்திரை வெய்யலோ ... அந்த மாமி தயங்கினதேயில்லை. முகம் சுழித்து நான் பார்த்தேயில்லை. மறுத்து ஒரு வார்த்தை சொல்லிக் கேட்டதில்லை. அந்த மாமி வீட்டிற்கு நான் போக ஆரம்பித்த போது எனக்கு எட்டு வயது இருக்கலாம். அன்றிலிருந்து இன்று வரை இதை எழுதுகிற வரை - இத்தனை வருடங்களாகியும் மாமி அதே மாமியாக-தேவை என்று வருபவர்களுக்கு உதவுபவராகத்தான் இருக்கிறார். அந்த மாமியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் நான் தனியாக எழுதியாக வேண்டும். அதை



அப்புறம் எழுதுகிறேன். இப்போது சித்தாள் பெண்மணி புஷ்பாவிடம் வருவோம்.

ஒரு நாள் காலை பதினோரு மணி அளவில் எனக்கு சௌந்தர்யா நர்ஸரி போய் நித்யமல்லி, முல்லைச் செடிகள் வாங்க வேண்டுமென்று தோன்றியது. கூட புரொபஸர் மாமியை அழைத்துப் போகலாமென்று தான் நான் அவர் வீட்டிற்குப் போனேன். அங்கு தான் மாமி புஷ்பாவை அறிமுகப்படுத்தினார்.

''வா இந்து ... இப்பத்தான் உன்னைப் பத்தி பேசிண்டிருந்தேன். நீயே வந்துட்டே...''

''யார்கிட்ட மாமி...மாமாகிட்டயா...?''

இல்ல...உன்னோட பரம ரசிகை ஒருத்தி எங்க வீட்டுக்கு வந்திருக்கா ... உன்னோட கதை ஒன்னு விடாமப் படிச்சிருக்கா. உன்னை எனக்குத் தெரியும். நீ இங்கே வருவேன்னு சொன்னதும் பிடிச்சுண்டுட்டா ... இப்பவே உன்னைப் பார்க்கனும்னா...வேலையெல்லாம் முடியட்டும். நானே உன்னை இந்து வீட்டுக்குக் கூட்டிண்டு போறேன்னு சொல்லிண்டிருந்தேன். நீயே வந்துட்ட...வா அவளைப் பார்க்கலாம்...''

வீட்டை விட்டு வெளியில் அழைத்துப் போய் வீட்டின் பக்கவாட்டில் ஒரு படுக்கை அறையும் அதை ஒட்டின குளியலறையும் கட்டிக் கொண்டிருந்த இடத்திற்கு அழைத்துப் போய் புஷ்பாவை அறிமுகப்படுத்தினார்.

என் பெயரைக் கேட்டதும் தலையில் சுமந்து கொண்டிருந்த கலவை பாண்டைக் கீழே போட்டு விட்டு ஓடி வந்தாள் அவள். என் கைகளைப் பற்றிக் கொண்டு தரையில் இறங்கும் விமானங்களிலிருந்து உதிரிப்பூக்கள் வரை விமரிசனம் செய்தாள். அவளது புரிந்து கொள்ளும் திறனும் விஷய ஞானமும் என்னைத் திகைக்க வைத்தன.

''என்ன படிச்சிருக்க புஷ்பா...?''

''என்னம்மா படிச்சிருக்கேன் ... எட்டாவது பாதி படிச்சிருக்கேன். அதுக்குள்ள பெரியவளாயிட்டேன்னு

படிப்பை நிறுத்திக் கல்யாணமும் கட்டி வச்சிட்டாங்க. இப்ப நாலு குழந்தைகளாயிடுச்சு...''

''வீட்டுக்காரர் என்ன வேலை செய்யறாரு...?''

''இதே வேலை தான். இன்னிக்கு உடம்புக்கு முடியலைன்னு வரலை. வீட்ல படுத்துட்டிருக்காரு ... அம்மா உங்க புஸ்தகம் ஒன்னு கையெழுத்துப் போட்டு எனக்கு வேணும்மா...''

''அடுத்த தரம் வரும் பொழுது கொண்டு வந்து தரேன்...''

''எப்ப வருவீங்க...?''

''இன்னும் நாலைஞ்சு நாள்ல வரேன். அதுக்குள்ள நீ வேலை முடிஞ்சு போயிடமாட்ட இல்ல...?''

''இல்லம்மா...இங்க எங்களுக்கு இன்னும் பதினைஞ்சு நாள் வேலையாவது இருக்கும்...''

இதுதான் முதல் சந்திப்பு.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்னர் அவளுக்காக சில புத்தகங்களில் கையெழுத்திட்டு எடுத்துக் கொண்டு போன போது புஷ்பாவைக் காணவில்லை. மாமி சொன்னார்.

''நாலு குழந்தைகளை வச்சுண்டு இவளே கஷ்டப் படறா...போறாக்குறைக்கு நோயாளி வீட்டுக்காரன் வேற...இந்த நிலைமைல ரோட்ல யாரோ ஒருத்தனுக்கு ஆக்ஸிடெண்ட் ஆயிடுத்தாம். எல்லாரும் போலீசுக்குப் பயந்துண்டு வேடிக்கை பார்த்துண்டு நிக்கறப்போ டீ குடிக்கப் போன இவ ஆக்ஸிடெண்ட் ஆனவனைத் தூக்கி ஆட்டோவுல போட்டுண்டு ஆஸ்பத்தியில் சேர்த்து வைத்தியம் பார்க்கறா...அவனோட வைத்தியச் செலவுக்குப் பணம் வேணும்னு தன் மூக்குத்தியை வித்திருக்கா...இந்தக் காலத்துல இப்படிக் கூட இருப்பளா...?''

மாமி சொல்லிச் சொல்லி மாய்ந்து போக எனக்கு உடனே புஷ்பாவைப் பார்க்க வேண்டுமென்று தோன்றியது. மறு நாள் அவள் வேலைக்கு வருவாள் என்று சொல்ல மறுநாள் போய் அவளைப் பார்த்துக் கேட்டேன்.



''என்ன புஷ்பா...என்ன ஆச்சு...?''

அவள் சொல்லி நான் தெரிந்து கொண்ட விஷயம் இது தான்.

அன்று காலை வேலைக்கு வந்தவள் பதினோரு மணி அளவில் டீ குடிக்க டீ கடைக்குப் போயிருக்கிறாள். இவள் டீ குடித்துக் கொண்டிருந்த போதுதான் அந்த நிகழ்ச்சி நடந்தது. கிட்டத்தட்ட அறுபது வயதுப் பெரியவர் ஒருவர் ரோடைக் கடைந்த போது ஆட்டோ ரிக்ஷாவினால் மோதி கீழே விழுந்து உடல் முழுதும் அடிபட்டு ரத்தக் காயங் களுடன் சுயநினைவு இழந்து கிடக்க - ஆட்டோ டிரைவர் வண்டியைக் கூட நிறுத்தாமல் வேகமாக ஓட்டிக் கொண்டு போய் விட்டிருக்கிறார். நினைவிழந்த பெரியவரைச் சுற்றிக் கூட்டம் கூடிற்றே தவிர ஒருவரும் உதவ முன்வரவில்லை.

இந்த நிலைமையில் டீ குடித்து விட்டுத் திரும்பி வந்த புஷ்பா கூட்டத்தை விலக்கிக் கொண்டு எட்டிப் பார்த்தவள் பதறிப் போனாள்.

''ஐய்யோ...இப்படி மூச்சு பேச்சில்லாம கெடக்கறாரு... எல்லாரும் வேடிக்கை பார்த்துக்கிட்டுப் பேசாம இருக்கீங் களே...'' என்றதும் கூட்டம் மெல்லக் கரைந்து நழுவ வினாடி நேரத்தில் புஷ்பா முடிவு செய்தாள். எதிர்ப் பக்கத்திலிருந்து காலியாக வந்த ஆட்டோவை நிறுத்தி ஆட்டோ டிரைவர் உதவியுடன் பெரியவரை ஆட்டோவில் ஏற்றி தானும் கூடப் போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தாள். ஆஸ்பத்திரி சில்லரை செலவுகள், ஹார்லிக்ஸ், க்ளுக் கோஸ் என்று எல்லாம் வாங்க அவள் கையில் பணமில்லை. உடனே மூக்கில் போட்டுக் கொண்டிருந்த ஒரே நகையான பேசரியைக் கழற்றி பக்கத்திலிருந்த மார்வாடிக் கடையில் விற்றுக் கிடைத்த இருநூறு ரூபாய்ப் பணத்தைப் பெரியவருக்காகச் செலவு செய்தாள்.

''இன்னியோட மூணாவது நாளாகுதும்மா. இப்பத் தான் அந்தப் பெரியவரு கண்ணைத் தொறந்து பார்க்கறாரு. இன்னும் நினைவு திரும்ப எத்தினி நாளாகுமோ தெரியலை.

நினைவு திரும்பினாத்தான் அவுரு யாருன்றதும் வீட்டு விலாசமும் தெரியும். அது வரைக்கும் அவரை அப்படியே ஆஸ்பத்திரியில் சேர்த்தோம், வந்தோம்னு வர மனசு இடம் கொடுக்கலைம்மா...பாவம். வயசானவரு. ஒரு உசிரைக் காப்பத்தறதை விட நகையா பெரிசு...? சொல்லுங்க, ஆபத்துக்கு உதவாத மனுசங்க மனுசங்களாம்மா...?''

எனக்கு சட்டென்று 'Thy need is greater than mine' நினைவிற்கு வந்தது. அடிபட்ட அந்தப் பெரியவரைச் சுற்றி வேடிக்கை பார்க்கக் கூடின கூட்டத்தினரிடையே ஒரு சித்தாள் பெண்ணிற்குத்தான் அவன் சொன்ன மனுஷத்தனம் இருந்தது. தன் மூக்குத்தியை விற்றாவது ஒரு உயிரைக் காப்பாற்றத் தோன்றியது. மற்றவர்களுக்கு உதவுகிற உத்வேகமும், உந்துதலும் வெறும் நினைவளவில் நின்று விடாமல் செயலளவிற்கும் கொண்டு போயிற்று. தன் பொருளை இழந்தாவது நேசக் கரம் நீள முன் வந்தது.

இவை அனைத்தும் தான் அந்த சித்தாள் பெண்ணான புஷ்பாவை என் நினைவில் நிறுத்திற்று. நீங்காத இடம் பெறச் செய்ததோடு ஒரு உயர்ந்த பீடத்திற்குக் கொண்டு போயிற்று. இதைப் படித்த பின்பு உங்கள் மனசிலிருந்தும் புஷ்பா புஷ்பமாய்ப் பூத்து மணம் வீசுவாளே தவிர மறந்து போகிறவளாக இருக்க மாட்டாள் என்று நினைக்கிறேன். என் நினைவு சரிதானா என்பதைத் தெரியப்படுத்துங்களேன்.

## 11. ஆதிவாசிப் பெண்ணின் அறப்போர்

தர்ணா என்ற வார்த்தையை கேள்விப்பட்டிருப்பீர்கள், இந்த வகைப் போராட்டத்தை யார் செய்வர்கள் என்றும் அறிந்திருப்பீர்கள். தொழிற்சாலைத் தொழிலாளர்களும், அரசியல்வாதிகளும், அரசு ஊழியர்களும், அரசு அல்லாத பிற ஊழியர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் தங்கள் கொள்கைகளை வலியுறுத்திப் போராடிப் பெற வேண்டிய சில விஷயங்களுக்காகக் கூட்டம் கூட்டிப் போராடுவார்கள்.



கொடியேந்துவார்கள். கோஷம் போடுவார்கள். தர்ணாவில் இறங்குவார்கள்.

இதே போராட்டம் ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா என்ற வளர்ச்சியுற்ற நாடுகளில் அமைதியாக நடைபெறும். தாங்கள் ஸ்ட்ரைக் செய்வதை உணர்த்த, கையில் ஓர் கறுப்புப் பாட்ஜ் கட்டிக் கொண்டு மௌனப் போராட்டமாய் நடத்துவார்கள். இங்கு போல் வேலைகள் பாதிக்கப்படுவதில்லை.

இதெல்லாம் ஒரு நிர்வாகமாகவே நடைபெறும். கூட்டம்கூட்டி நடத்தப்படும். ஒரு தலைவன் முன் நின்று மற்ற தோழர்களை வழி நடத்திச் செல்வான்.

ஆனால் இவ்விதக் கூட்டம் எதுவுமின்றி, ஆர்ப்பாட்டமின்றி, அடுத்த ஒரு மனிதர் உதவியின்றி தன்னந்தனியாய் கையில் கைக் குழந்தையோடு ஒரு வீட்டு வாசலில் உட்கார்ந்து அமைதியாய் 'தர்ணா' செய்த பெண்ணைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

கிட்டத்தட்ட பதிமூன்று மாதங்களும் அந்த வீட்டு வாசலிலேயே நியாயமும் நீதியும் வேண்டி மௌனப் போராட்டம் செய்த அந்தப் பெண்ணை அறிந்திருப்பீர்களா?

இந்தப் பதின்மூன்று மாதங்களும் சும்மா இராமல், யாரிடமும் கையேந்தாமல் தனக்கும், தன் கைக்குழந்தைக்கும் வயிறு இருப்பதை மறந்து விடாமல் அந்தத் தேவைக்காகப் பீடி சுற்றிச் சம்பாதித்த அந்தப் பெண்மணியின் திடசித்தம் தெரியுமா?

தனக்கு நியாயம் வழங்கப்படுகிற வரை அந்த வீட்டு வராந்தாவை விட்டு அசைய மாட்டேன் என்றிருந்த, அப்பெண்ணின் தைரியத்தையும், வீரத்தையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா......?

இத்தனையும் படிக்கிற போதே யார் அந்தப் பெண்? என்ற கேள்வி உங்களுக்குள் எழுகிறதல்லவா?

அப்படி அவள் கேட்ட நியாயம், நீதி தான் என்ன என்பதை அறிகிற ஆர்வம் ஏற்படுகிறதல்லவா?

பணம் கேட்டுப் போராடினாளா அவள்......

அல்லது பொருள் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாளா?

இல்லா விட்டால் வீடு, வாசல், சொத்து சுகம் என எவற்றிற்காவது எதிர்த்து நின்றாளா...?

இல்லை.

இந்த மூன்றில் எதுவுமே அவள் தேவையில்லை. இவை எதனையும் அவள் வேண்டவில்லை!

இது போன்ற எதற்காகவும் ஆசைப்பட்டு எதிர்த்து நிற்கவில்லை.

பின் —

எதற்கு அந்தப் போராட்டம்?

ஏன் மௌனத் தர்ணா...?

எதை எதிர்பார்த்து ஒன்றல்ல, இரண்டல்ல, பதின்மூன்று மாதங்கள் காத்திருந்தாள்......?

அந்தப் பெண்ணின் பெயர் சபீதா. ஒரிஸா மாநிலத்தைச் சார்ந்த பழங்குடி இனத்துப் பெண். அழகானவள். அமைதியானவள். அடக்கமானவள். அதிகப் படிப்பு இல்லாது போனாலும் விவேகமானவள். வீரமானவள்.

அப்படிப்பட்ட பெண்ணை சோமனாத் என்ற வாலிபர் சந்தித்தார். சந்திக்க நேர்ந்தது. சபீதாவின் அழகிலும், குணங்களாலும் கவரப்பட்ட சோமனாத் அவரைக் காதலிக்க ஆரம்பித்தார். 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' பாணியில் ஆரம்பித்தது. பின்னர் தீவிரமாகி இரு மனங்கள் சங்கமித்த பின்னர், உள்ளங்கள் ஒன்றுபட்ட பின்னர், உடல்களும் ஒன்று பட—

சபீதா கர்ப்பவதியானாள்.



சோமனாத்திடம் தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டினாள். சபீதா கர்ப்பமுற்ற விஷயமும், அவள் தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டதும், சோமனாத் எதிர்பார்க்காதவை. அவளோடு பழகி, அனுபவித்து விட்டுப் பறந்து போகிற மைனர் போர்வழியே தவிர சபீதா உருகின மாதிரி அவன் உருகவில்லை.

உள்ளத்தில் உண்மையில்லை.

காமத்தால் தூண்டப்பட்டிருந்தானே தவிர காதலால் துடித்துப் போகவில்லை.

ஆகவே—

காதலன் கயவனாகி, கர்ப்பவதியானவளைக் கை விட்டு விட்டான்.

கண்ணெடுத்தும் பாராமல் இருந்தான். அவள் கெஞ்சக் கெஞ்ச அலட்சியப் படுத்தினான்.

அன்பைக் கொட்ட வேண்டிய நெஞ்சு அனலைக் கொட்டிற்று.

கதறிக் கண்ணீர் வடித்த சபீதா ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானாள். ஆஸ்பத்திரியில் குழந்தையின் அப்பா பெயரைக் கேட்டார்கள்.

அக்கம் பக்கத்தவர்கள் தூற்றினார்கள். பெற்றவர்கள் பொருமினார்கள். உற்றவர்கள் ஊர் சிரிப்போடு ஒட்டிக் கொண்டார்கள்.

அதையெல்லாம் கேட்ட சபீதா அதுவரை அழுதழுது அடங்கிக் கிடந்தவள் சட்டென்று அழுகை நிற்க எழுந்து கொண்டாள். அடி பட்ட புள்ளி மானாக மூலையில் சுருண்டிருந்தவள் புலிபோலப் பொங்கி எழுந்தாள்.

அன்று கால் சிலம்போடு மதுரை மாநகரில், நுழைந்த கண்ணகி மாதிரி இவள் கைக்குழந்தையோடு சோமனாத் வீட்டு வாசலை அடைந்தாள்.

அவனையும் அவனது பெற்றோர்களையும் சந்தித்தாள். தன்னையும், தன் குழந்தையையும் ஏற்றுக் கொள்ளச் சொல்லி வேண்டினாள்.

கண்ணீரில் கரைகிறவளாக நின்றாள். அதில் அந்தக் கல் நெஞ்சக்காரர்கள் கரையவில்லை. அவளுக்குக் கை கொடுக்க முன் வரவில்லை. மாறாக வீட்டை விட்டு வெளியேற்றினார்கள்.

வீட்டை விட்டு வெளியில் வந்த சபீதா யோசித்தாள். இனிக் கண்ணீர் விட்டுக் கதறிப் பயனில்லை. கை யெடுத்துக் கும்பிட்டுட்டுப் பலனில்லை. கண்ணகி மாதிரி கனல் கக்க வசனம் பேசுவதும் உபயோகப் படாது. அன்று அவளால் மதுரையை எரிக்க முடிந்தது. இன்று தன்னால் அந்த வீட்டின் ஒரு சின்னப் பகுதியைக் கூட எரிக்க முடியாது. இது கலியுகம். திரேதாயுகத்துப் பாணிகள் உதவிக்கு வராதவை. கலியுகத்திற்குக் கலியுகப் பாணிகள் தான் உதவ முடியும். இப்போது சேரன் செங்குட்டுவனின் வாளை எடுத்துக் கொண்டு போரில் இறங்க முடியாது. இந்த யுகத்தின் யுத்தத்திற்குத் தேவை 'மாடர்ன் மிஸைல்ஸ்.'

சபீதா முடிவு செய்தாள்.

சட்டென்று மகாத்மா காந்தி நினைவிற்கு வர அவரது அஹிம்ஸா யுத்தம் மாதிரி மௌனப் போராட்டம் நடத்த முடிவு செய்தாள். தன்னையும், தன் குழந்தையையும் சோமனாத்தும், அவனது குடும்பமும் ஏற்றுக் கொள்கிற வரை, அந்த இடத்தை விட்டு நகருவதில்லை.

தனக்கு நியாயமும், நீதியும் கிடைக்கிற வரை அவர்கள் வீட்டு வராந்தாவை விட்டுப் போவதில்லை.

என்ன ஆனாலும் சரி. எது வந்தாலும் சரி.

தீர்மானமானாள் சபீதா. தீர்க்கமானாள். அவர்கள் வீட்டு வராந்தாவிலேயே உட்கார்ந்து கொண்டாள். பக்கத்தில் துண்டு விரித்துக் குழந்தையைக் கிடத்தினாள்.



தனக்குத் தெரிந்த தொழிலான பீடி சுற்றுவதை ஆரம்பித்தாள். அப்பீடிகளை விற்ற பணத்தில் அவ்வராந்தா வாசலிலேயே அடுப்பு மூட்டி சோறு சமைத்துக் கொண்டாள்.

அது போல் பதிமூன்று மாதங்கள். தொய்யாமல், துவளாமல், காற்று, மழை, வெய்யில் எதற்கும் கண் கலங்காமல் காத்திருந்தாள் சபீதா.

அஞ்சாத நெஞ்சத்தினளாய் அறப்போரில் ஈடுபட்டாள்.

ஆனது ஆகட்டும் என்று துணிந்ததற்குப் பலன் கிட்டியது.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஓர் ஓரமான, ஆதி வாசிப் பகுதியான சாம்பல்பூர் என்ற இடத்தில் நடந்த இந்த அஞ்சா நெஞ்சம் கொண்ட ஆதிவாசிப் பெண்ணின் அறப் போராட்டமானது மெள்ள மெள்ள அவ்வூர்வாசி களின் மனதைத் தொட்டது. பின்னர் பத்திரிகைகளை எட்டின. சமூக சேவை சங்கங்களைக் கவர்ந்தன. அதன் பின்னர் அரசியல்வாதிகளின் கவனத்தைப் பெற்று, லோக் அதாலத் முடிவு செய்து சோமனாத் சபீதாவைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கிற தீர்ப்பு வழங்கப் பட்டது. வேறு வழியின்றி குழந்தையை ஏற்று அவளைத் திருமணமும் செய்து கொண்டான் சோமனாத் என்ற அந்த இளைஞன்.

இதைப் படிக்கிற போது ஏதோ கதை படிக்கிற மாதிரி இருந்திருக்கும் உங்களுக்கு. ஆனால் கதையல்ல. இல்லை, இல்லை. கதை மட்டும் எங்கிருந்து வருகிறது என நினைக்கிறீர்கள்? வானத்திலிருந்து குதிக்கிறதா? அல்லது கற்பனை என்ற பெயரில் கடல் கடந்து பறக்கிறதா......?

ஒவ்வொரு கதையிலும் ஓர் வாழ்க்கை இருக்கிறது. வாழ்க்கையில் சந்தித்த சில மனிதர்கள் இருக்கிறார்கள். கண்ட காட்சிகளின் அனுபவங்கள், பாதிப்புகள், பாதிக்கத் தவறிய விஷயங்கள்......

இவைதான் கதைகளாகின்றன. கதைதான் வாழ்க்கை. வாழ்க்கை அனுபவங்களே கதைதான்.

அதனால் சபீதாவின் இந்தச் சரித்திரம் கதையாகப் பட்டால் தவறில்லை. ஆனால் சில அழகுகளுக்காக மொழியாளுமையின் ஆற்றலுக்காகக் கையாளப்படுகிற கற்பனை முலாமும், நகாசு வேலைகளும் சபீதா சித்திரத்தில் இல்லை. இந்தச் சித்திரம் ஓவியம் கூட இல்லை. ஓவியரின் கைவண்ணம் கலந்தது எனச் சொல்வதற்கும் வழியில்லை. இது புகைப்படம். அதிலும் கறுப்பு வெள்ளையில் எடுக்கப்பட்ட பிளாஷ் கூட இல்லாத பாக்ஸ் காமிராவில் கையாளப்பட்ட யதார்த்தமான புகைப்படம்.

இப்புகைப்படத்தைத் தற்போது திரைப்படக் காமிராக்கள் எடுத்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

எடுக்கப்பட வேண்டிய சரித்திரம் தான். மதுரையை எரித்த கண்ணகி திரைப்படமானாள். ஜான்ஸி ராணி படமானாள். மங்கம்மாள், மகாதேவி இவர்கள் படமான போது.

அவர்களின் வீரத்திற்கும், துணிவிற்கும் சிறிதும் குறையாத திறமை கண்டு பொங்குவாய் என்ற பாரதியின் பாட்டைப் படிக்காத ஆனால் அதற்கொப்ப நடந்த படிப்பற்ற ஓர் ஆதிவாசிப் பெண் தனக்கு இழைக்கப்பட்ட சிறுமைக்கு நீதி கேட்டு யார் உதவியும் இன்றி தன்னந் தனியளாய், தளிர் குழந்தையோடு, தன் நாயகனைப் பெற வேண்டி அவனையே எதிர்த்துப் போராடினாளே ... இது வீரமில்லாமல் வேறு என்ன...? சாதனையில்லாமல் வேறு என்ன...? சரித்திரமில்லாமல் வேறு என்ன...?

இது எத்தனைப் பெண்களின் சரித்திரத்தை மாற்றும்? சாதனைப் படைக்க வைக்கும்...? சத்திய விளக்காக ஒளி வீசத் தெரியும்?

சபீதா மாதிரி எத்தனைப் பெண்களுக்குத் துணிவிருக்கும்? படித்த பெண்கள், பெரிய பெரிய உத்தியோகங்



களில் இருக்கிற பெண்கள் கூட இது போன்ற ஒன்று ஏற்பட்டு விடுமானால் அதை மூடி மறைக்கப் பார்ப்பார்கள் அல்லது வைத்தியர் உதவி நாடிக் கருக்கலைப்பு செய்து கொள்வார்கள். அதனையும் மீறிப் போய் விட்டால் அழுதழுது மூலையில் முடங்கி 'இது தங்கள் விதி' என்று வீணர்களாகக் காலம் கழிப்பார்களே தவிர மதியால் வெல்ல முற்பட மாட்டார்கள்.

அன்று துஷ்யந்தனிலிருந்து ஏற்பட்டுக் கொண்டு வருவது தான் இது. ஆண்கள் சுலபமாகத் தப்பிந்துக் கொண்டு விடுவதும் பெண்கள் மட்டும் பழி, பாவத்திற்கு ஆளாவதும் சமூகக் கொடுமைதான் இது.'

இக்கொடுமைக்கு விமோசனம் தேடி, இனி ஆண்களை அவ்வாறு வெறுமனே விட்டு விட முடியாது. விட்டு விடவும் கூடாது என வீர முழக்கம் இடாது போனாலும், மௌனமாய்ப் போராட்டம் நடத்திக் காட்டி, பொறுமையாய் தன் இன்னல்கள் அனைத்தையும் சகித்துக் கொண்ட சபீதா என்ற பெண்ணின் மனோதிடம், செயல் திறனும், வீரமும், விவேகமும் போற்றுதலுக்கு உரியது மட்டுமல்ல, பாராட்டப்பட வேண்டியது மட்டுமல்ல. பாடமாகக் கொள்ள வேண்டியது என்று தோன்றியதன் காரணமாகவே இந்தப் பாடம் அனைவராலும் படிக்கப் பட வேண்டும் என்பதன் காரணமாகவுமே இதை இங்கே எழுதி முடித்தேன்.

அடுத்து இது போன்று பாட்னாவில் இன்னொரு ஆதிவாசிப் பெண்ணுக்கு நேர்ந்த கொடுமை என்ன என்பதையும், அதைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த ஜனங்கள் எவ்வாறு வாய் மூடிக் கிடந்தார்கள் என்பதனையும், ஒரிஸாவிற்கும் பாட்னாவிற்கும் பூகோள ரீதியான தூரத்தை விட மனித மனோரீதியில் எத்தனை தூரம், எவ்வளவு வித்தியாசம் என்பதனையும் தெரிந்து கொள்வோம்......

## 12. அபலைக்கு அபயம்

பாட்னாவிலுள்ள சிறிய கிராமம். வரிசையாகக் குடிசைகள். ஆதிவாசி மக்களின் குடியிருப்புகள். வறுமையின் சின்னங்கள். எளிமையின் இருப்பிடங்கள். இல்லாமையினால் ஏற்படும் இயலாமைச் சித்தரிப்புகள்.

ஒரு குடிசையினுள் ஒரு இளம் பெண் சமையல் வேலையில் ஈடுபட்டிருக்கிறாள். விறகடுப்பை மூட்டி சோற்றை வேக வைத்துக் கொண்டிருக்கிறாள். அப்போது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை சிறிது நேரத்திற்குப் பின்னர் தன் நெஞ்சு வேகக் கூடிய சம்பவம் ஒன்று நடைபெறப் போகிறதென்று. கொதிக்கின்ற உலை மாதிரித் தன் மனது கொதிக்கப் போவதை அவள் அறிந்திருக்கவில்லை.

உலையிலிட்ட அரிசி வெந்து விட்டதா என்று பார்க்கக் குனிந்தவள் தெருவில் காலணிச் சத்தம் கேட்பதை உணர்ந்து நிமிர்ந்தாள். ஒன்றல்ல, இரண்டல்ல. நாலைந்து ஜோடி 'காலணிகள்' மண் தரையிலும் சத்தத்தை எழுப்ப அதிர்ந்த நடைகள். கிளப்பப்பட்ட புழுதிகள். ஒவ்வொரு குடிசையிலிருந்தும் வாசலுக்கு ஓடி வந்து கலவரத்தோடு காக்கி உடைகளைப் பார்த்த முகங்கள்......

காக்கி உடைக் காவலாளிகள் இந்தப் பெண் இருந்த குடிசைக்குள் நுழைந்தார்கள். என்ன நடக்கிறது என்பதை அவள் உணரும் முன்பாக கொதித்துக் கொண்டிருந்த சோற்றில் மண் அள்ளிக் கொட்டினார்கள். அவளது தலைமுடியைப் பற்றி இழுத்தார்கள். அந்தப் பெண் அதிர்ச்சியிலும், பயத்திலும் அலற அலற அவளது கேசத்தைப் பற்றி வெளியே இழுத்துக் கொண்டு வந்தார்கள்.

வெளியில் வந்தவர்கள் அவளை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லவில்லை. வேறு எங்கும் விசாரணைக்குக் கொண்டு போகவில்லை, அவள் செய்த தவற்றைச் சொல்லவில்லை. காரணத்தைக் கூறவில்லை. அவளை



வீட்டிலிருந்து இழுத்துக் கொண்டு வந்தவர்கள் நட்ட நடுத்தெருவில் வெட்ட வெளியில் நிறுத்தி அவளது புடவையை உருவினார்கள். நிர்வாணமாக்கி, தங்களின் கைத்தடிகளால் (லத்தி) அடிக்க ஆரம்பித்தார்கள். அப்பெண் கதறிக்கதறி, துடித்துத் துவண்டு மயங்கிக் கீழே சரிகிற வரை அந்த மிருகத்தனமான தாக்குதல் நடைபெற்றிருக்கிறது.

சுற்றி நின்ற மற்ற வீட்டினர் அவளது இனத்தைச் சார்ந்தவர்கள், செய்வதறியாது மௌனமாக அக்கொடிய காட்சியினைக் கண்டார்களேயன்றி வேறு எதுவும் செய்யவில்லை. ஓடிப் போய்த் தடுக்கவோ, போலீஸ்காரர்களிடம் சட்டம் பேசவோ, ஏன் என்று கேட்கவோ துணிவற்றவர்களானார்கள். நெஞ்சுரம் நசித்துப் போனார்கள். தங்கள் இனம் என்ற அபிமானம் வேண்டாம். ஒரு பெண் - அவளை - இழுத்து நடுத்தெருவிற்குக் கொண்டு வந்து துகிலுரித்துத் தாக்குகிறார்கள். மயக்கமுற்றுக் கீழே சரிகிற வரை தங்களின் கைத்தடிகளால் அடித்துக் காயப்படுத்துகிறார்கள் என்கிறபோது—

அதைப் பார்த்துக் கொண்டு பேசாமல் நிற்கலாமா...? எதற்காக அவ்வாறு மௌனம் சாதித்தார்கள்...? ஏன் ஒருவரும் அந்தப் போலீஸ்காரர்களைத் தடுக்க முன்வரவில்லை...? உரிமைக்குரல் கொடுக்கவில்லை? உறவை நினைத்துப் பார்க்கவில்லை...? அந்த அளவிற்குப் போலீஸ்காரர்களைக் கண்டு பயந்து போனது எதற்காக...? அல்லது பயமுறுத்தப் பட்டார்களா...?

எதுவும் தெரியவில்லை. அதுதான் தெரியவில்லை என்றால் பட்டப்பகலில் ஒரு பெண் தனியாக இருக்கும் குடிசைக்குள் எதற்காகக் காவலர்கள் நுழைந்தார்கள். .? அவளை வெளியில் இழுத்துக் கொண்டு வந்தார்களே... காவல் நிலையம் கொண்டு போனார்களா என்றால் - இல்லை. விசாரணை செய்தார்களா என்றால் அதுவும்

இல்லை. இதற்குப் பதிலாக அப்பெண் சுருண்டு மயங்கி விழுகிற வரை தாக்கியிருக்கிறார்கள்.

அப்படித் தடியடித் தாக்குதல் நடத்துகிற அளவிற்கு அப்பெண் செய்த குற்றம் என்ன? திருடினாளா? கொள்ளையடித்தாளா? அல்லது கொலை செய்தாளா? எதுவும் சொல்லப் படவில்லை. எந்தக் காரணமும் கூறப்படவில்லை. அப்படியே அவள் திருடியிருந்தாலும், கொலையே செய்திருந்தாலும், அல்லது வேறு எந்தக் குற்றத்தைச் செய்திருப்பினும்—

அவளைத் தண்டிக்கின்ற முறை இதுவல்ல. இதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை. உரிமையில்லை, சட்டத்தில் கூட இடம் இல்லை என்கிற போது இப்படிப்பட்ட அராஜகத்தைச் செய்ய அவர்களுக்கு யார் தைரியம் கொடுத்தது? எதனால் அதனைச் செய்கின்ற உரம் பெற்றனர்? யார் கொடுத்த உரமிது?

யார் கொடுத்திருந்தாலும், எதன் காரணமாக அவர்கள் இச்செயலைச் செய்கின்ற பலம் பெற்றிருந்தாலும், அச்செய்கை கண்டிக்கப்பட வேண்டியது. நிந்திக்கப்பட வேண்டியது. அன்று பாண்டுவின் மருமகள் அவையிலே தான் துகிலுரியப் பட்டாளே தவிர இது போல் கிராமத்துத் தெருவில் துகிலுரியப்பட்டது மட்டுமின்றி துண்டுக் கட்டைகளால் அடித்துத் துயரப்படுத்தப்படவில்லை.

செய்தித்தாள்கள் இதனை ஒரு ஓரத்தில் பெட்டி கட்டிப் போட்டதோடு நிறுத்திக் கொண்டது எனக்குள் ஒரு வேதனையை ஏற்படுத்தியது. மக்களின் நன்மதிப்பைப் பெற்ற, பொறுப்பு மிக்க செய்தித்தாள்கள் அவ்வாறு நின்று விடலாமா என்ற கேள்வி எழுந்தது.

பெண் குற்றவாளிகளைக் கைது செய்து விசாரிக்கப் பெண் போலீசார் இருக்கிற போது இவர்கள் ஏன் அனுப்பப் பட்டார்கள்? அதிலும் நிர்வாணப்படுத்தி நடுத் தெருவில் நிற்க வைத்து அடித்து நொறுக்குகிற நெஞ்சுரம் எதனால் ஏற்பட்டது, எப்படி ஏற்படலாம், இதன் பின்னணி என்ன



என்பதை எடுத்துக் கூற வேண்டாமா? மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டாமா? சிறுமை கண்டு பொங்க வேண்டாமா? சிறுமை கண்டு பொங்காது போனால் அப் பெண்ணை அடித்த போது பார்த்துக் கொண்டு நின்றிருந்த அவளது கிராமத்தைச் சேர்ந்த அந்தக் கிராம வாசிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? படிப்பறியாத அப் பாமரர்களுக்கும் நமக்கும் என்ன வேறுபாடு? அவர்களைப் போலவே நாமும் வாய்மூடிப் பேசாதிருக்கிற பட்சத்தில் நமக்குக் கல்வியும், அதனால் ஏற்படுவதாகச் சொல்லிக் கொள்ளும் ஞானமும் எதற்கு?

முன்பு பெங்களூருக்கு அருகில் தளி என்ற கிராமத்தில் கல்பனாசுமதி என்கிற ஆசிரியை இதே போல் காவல் துறையைச் சார்ந்த, அத்துறைக்கே இழுக்குத் தேடித் தந்த சில கயவர்களால் தாக்கப்பட்டு, கற்பழிக்கப்பட்ட போது அதற்குக் குரல் கொடுத்து சம்பந்தம்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வைத்து தண்டனை வாங்கித் தந்த செய்தித் தாள்களும், பத்திரிகைகளும் இந்த ஆதிவாசிப் பெண்ணின் தாக்குதலைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டது எதனால்?

எங்கோ பாட்னாவில் நடந்ததுதானே என்பதாலா? அந்த இடத்துச் செய்தித்தாள்கள் கவனித்துக் கொள்ளும் என்பதாலா? அல்லது கல்பனாசுமதி மாதிரி இப்பெண் கற்பழிக்கப்படவில்லை என்றுகிற ஆறுதலா?

அராபிய நாடுகளில் கூட குற்றவாளிகளுக்கு நடுத் தெருவில் நிற்க வைத்துக் கசையடி கொடுக்கப்படுகிற தண்டனை இருக்கிறது. ஆனால் அங்கே நிர்வாணப் படுத்துகிற அநாகரிகமில்லை. (இன்னும் சொல்லப் போனால் ஒரு பெண்ணை மானபங்கப்படுத்துவது என்பது அங்கு மிகப் பெரிய குற்றம்) அதுவும் தண்டிக்கிற உரிமையை இது போல் நான்கு காவலாளிகள் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு விடுவதில்லை. முறையாக விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்ட பின்னரே தண்டனை நிறைவேற்றப்படுகிறதேயன்றி தடி எடுத்தவன் தண்டல்காரனாவதில்லை.

சரி, பத்திரிக்கைகளையும், செய்தித் தாள்களையும் விடுங்கள்; பெண்களுக்காக உரிமைக் குரல் கொடுக்கிற பெண்ணுரிமைக் கழகங்களும், மாதர் சங்கங்களும் எங்கே போயின? அவர்கள் கண்களில் இச்செய்தி படவில்லையா? அல்லது எங்கோ பாட்னாவில் இருக்கும் பெண்ணுக்கு நடந்ததுதானே, அதுவும் பழங்குடிப் பெண்ணுக்கு நடந்ததுதானே என்று விட்டு விட்டார்களா? அதுவே படித்த ஒரு பெண்ணிற்கு, அலுவலகம் சென்று பணி புரிகிற பெண்ணிற்கு இவ்விழுக்கு ஏற்பட்டிருக்குமாயின் இது போல் வாய்மூடி மௌனித்திருப்பார்களா?

அச்செய்தியைப் படித்ததிலிருந்து எனக்குள் கனன்று கொண்டிருக்கும் கேள்விகள் இவை. ஒரு கை ஓசையாய் உள்ளுக்குள் ஏற்படுகின்ற எதிரொலிகள் இவை. ஒரு கை ஓசையாக இருப்பதால்தான் வெளியில் கேட்கப்பட வேண்டுமானால் இன்னொரு கை வேண்டும். சத்தமிடப்பட வேண்டும். உரக்க முழங்கப் பட வேண்டும். அனைத்துக் காதுகளையும் எட்டச் செய்ய வேண்டும். மனதில் பதிய வைக்கப்பட வேண்டும். பதிந்து ஒரு சிறு பொறியாகத் தூண்டிவிடப்பட வேண்டும். பின்னர் தீயாகப் பற்றிக் கொள்ளும்.

நான் இங்கு தீ என்று குறிப்பிடுவது 'அவேர்நெஸ்' என்று சொல்லப்படுகிற உள்ளுணர்தலை; புரிந்து கொள்ளுதலை; தெரிவடைதலை; தாமும் தெளிந்து மற்றவர்களையும் தெளிவடையச் செய்தலை.

இதற்கு என் ஒரு கை மட்டும் போதாது. அது எழுப்புகிற ஓசை கர்ஜனையாகாது. கர்ஜிக்கிற குரல்கள் தாம் இங்கே கேட்கப்படும். ஆகையினால் கையோடு கை சேர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உரத்துச் சத்தமிடுகிற குரல்களும், சிறுமை கண்டு பொங்குகிற நெஞ்சங்களும் வேண்டும் என்கிறேன். சமூகப் பிரக்ஞையும் விழிப்புணர்ச்சியும் உள்ளவர்கள் ஒருங்கிணைந்து காரியமாற்றிட வேண்டுகிறேன்.



தயவு செய்து யோசிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். தங்களின் யோசனைகளின் முடிவில் ஏற்படுகின்ற கருத்துக்களைக் கூடி விவாதித்தால் என்ன என்று தோன்றுகிறது.

தமிழ் நாட்டில் எத்தனையோ அரசியல் சார்பான கட்சிகள் தோன்றியிருக்கின்றன. மக்களுக்குத் தொண்டாற்றியும், ஆற்றிக் கொண்டும் வருகின்றன. ஆனால் இதுவரை பெண்களால் ஆரம்பிக்கப்பட்டு பெண்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டு பெண்கள் நலம் கோரும் பெண்கள் கட்சி என்று எதுவும் ஏற்பட வில்லை. ஏற்படுத்தப் படவில்லை. அவரவர் இனத்தைக் காக்க - சாதியினரின் நலன்களைக் காக்க ஏற்படுகின்ற கட்சிகளைப் போல்—

பெண்களாகிய நம் இனத்தையும், நலனையும், தலைமுறையினரையும் காக்க, குற்றம் நடை பெறுகின்ற போது கொதித்து எழ - குரல் கொடுக்க - பெண்கள் கட்சி என்ற ஒன்று தோன்றப்பட வேண்டும். எங்கெல்லாம் பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றதா, எங்கெல்லாம் பெண் என்பவள் தாழ்த்தப்படுகிறாளோ, எங்கெல்லாம் அவளது ஆற்றல் பரிணமிக்க வழியின்றி ஒடுக்கப் படுகிறதோ, எங்கே பெண் மானபங்கப் படுத்தப்படுகிறாளோ அங்கெல்லாம் பெண்கள் கட்சியினரின் குரல் ஒலிக்கப்பட வேண்டும். அது காஷ்மீரத்து ஓரமானாலும், கன்யாகுமரி குடிசையானாலும் ஒன்றாகப் பாவிக்கப்பட்டு வலிமையான குரல் எழுப்புகின்ற வீரமும், உறுதியும், மனோதிடமும் பெற்று, யாரையும் தட்டிக் கேட்கிற தைரியம் பெற்று செயல் முறையை மறந்து விடாத முனைப்பு கொண்டு இயக்கப்பட வேண்டும். இது போன்ற இயக்கம் ஒன்று தோன்றப்பட வேண்டும் என்பது என் நெடுநாளைய எண்ணமாய் இருந்து வந்திருக்கிறது. இன்று நேற்றல்ல, சக்தி - 81 எழுதின போதே, (அதன் கதாநாயகி இது போன்ற இயக்கத்தை ஆரம்பிக்கிறார் - பாரதியின் புதுமைப் பெண்) அதற்கு

முன்பே தோன்றின லட்சியக் கனவு இது. இனிமேலாவது நனவாக வேண்டும் நனவாக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். இதற்கு என் ஒரு கை போதாது என்பதனால் பலம் வாய்ந்த மற்ற கரங்களையும் பலப்படுத்தக் கூடிய கரங்களையும் எதிர் பார்க்கிறேன். எத்தனைக் கரங்கள் நீளுகின்றன, அவற்றில் எத்தனை நிலையாக நீளும் என்பதனை அறியக் காத்திருக்கிறேன்.

## 13. கிராமத்து இடி முழக்கம்

அந்தப் பெண்ணின் பெயர் செல்வி. பதினெட்டு வயது இளமை. வனப்பும் வாளிப்பும் பொருந்திய உடல். கிராமத்து மண்ணிற்குச் சொந்தமற்ற உருவம். நல்ல தாழம்பூவின் நிறம். நிறம் தாழம்பூவாக அமைந்திருந்த காரணத்தினால் தானோ என்னவோ அப்பூவின் ஓரத்து முள் மாதிரி அவளது வாழ்க்கை உறுத்தல் நிறைந்தாகி விட்டது. ஊர் மக்களால் ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டது. எல்லாக் கண்களும் அக்கினித் துண்டங்களாகி அவளைச் சுட்டன. ஒவ்வொரு கையும் கொள்ளிக் கட்டையேந்தி அவளை அடித்துத் துரத்தத் தயாராயின.

அதற்கெல்லாம் செல்வி பயந்து போய் விடவில்லை. பணிந்து விடவில்லை. பசுமையான பயிரை மாடு மேய்ந்து விட்டதற்காகப் பயிர் முழுவதையும் தீயிட்டுப் பொசுக்க வேண்டுமென்ற பாதகத்தை அவள் ஏற்றுக் கொள்ளாதது மட்டுமின்றி அதைத் தீர்ப்பாகக் கூறி உறுதியிட்டு அறுதி யிட்டுச் சொன்ன ஊர்ப் பஞ்சாயத்தையே எதிர்த்துக் குரல் கொடுத்தாள் அவள்.

அக்குரல் கேட்டு ஊர் வெகுண்டது. பஞ்சாயத்துப் பெரிய மனிதர்கள் வெகுண்டனர். பஞ்சாயத்துத் தீர்ப்பு வழங்கிற்றென்றால் அதற்கு இதுவரை எதிர்த் தீர்ப்பு வந்த தில்லை. மாறாக ஒரு குரல் ஓங்கினதில்லை. ஓங்குகிற



துணிவும் யாருக்கும் இருந்ததில்லை. அந்த அளவிற்குக் கட்டுப்பாடாக இருந்து பழக்கப்பட்டுப் போன மக்களுக்கும், பஞ்சாயத்துப் பெரிய மனிதர்களுக்கும் செல்வியின் குரல் அதிரடியாக விழுந்தது. தாங்கிக் கொள்ள முடியாததாக ஆயிற்று. கோபத்தீ கொழுந்து விட்டு எரியத் துவங்கிற்று.

'முளைச்சு மூணு இலை விடலை...பேசற பேச்சைப் பார்த்தியா?'

'ஒரு பொட்டச்சிப் பொண்ணு எத்தனை தைரியமிருந்தா பஞ்சாயத்தை எதிர்த்துப் பேசுவா?'

'அதுவும் அவமானம் தாங்காம மூலைல முடங்கிக் கிடக்க வேண்டியவ. தைரியமா தலை நிமிர்ந்து சபைல இல்ல பேச வந்துட்டா...'

'ஒரு பொட்டச்சிக்குத் தைரியம் வந்திச்சின்னா... அப்புறம் ஊர் பொட்டச்சிங்க அத்தனைப் பேருக்கும் இதே தைரியம் ஏற்பட்டுப் போயிடாதா?'

கண்களில் அனல் கக்கினார்கள். பேச்சில் கனல் கக்கினார்கள். ஒட்டு மொத்தமாக அத்தனைப் பேரும் ஒன்றாகச் சேர்ந்து 'அந்த ஊரில் அவள் வாழக் கூடாது' என்று தீர்ப்பு வழங்கினார்கள்.

அந்தத் தீர்ப்பையும் எதிர்த்து நின்றாள் செல்வி.

'இது சர்க்கார் நிலம். சர்க்கார் பூமி. இங்க வாழ உங்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கோ...எத்தனை தகுதி இருக்கோ...அதே உரிமையும், தகுதியும் எனக்கும் உண்டு. என்னை இந்த ஊரை விட்டுப் போகச் சொல்ல உங்க யாருக்கும் அதிகாரம் கிடையாது.'—ஐந்தாம் வகுப்புப் படித்தவள் சட்டம் படித்துத் தேர்ச்சி பெற்றவளைப் போலப் பேசினாள். பதினெட்டு வயதுப் பெண் ஊர்ப் பெரிய மனிதர்கள் அத்தனை பேரையும் எதிர்த்து நின்றாள். அவளோடு யாரும் பேசக் கூடாது, பழகக் கூடாது, அவள்

குளத்திலோ, கிணற்றிலோ தண்ணீர் எடுக்கக் கூடாது, கடைகளில் எந்த ஒரு பண்டமும் அவளுக்கு விற்கப்படக் கூடாது எனக் கட்டுமானம் விதித்து ஒதுக்கி வைத்த போது கூட அவள் மருண்டு போய் விடவில்லை. தளர்ந்து போய் விடவில்லை. தள்ளாடி விடவில்லை.

ஏரிக்கரை ஓரமாகத் தனியாய்க் குடிசை ஒன்றைப் போட்டுக் கொண்டு ஊரை விட்டுத் தள்ளி ஒதுக்குப்புறமாக வாழ்க்கையை ஆரம்பித்தாள். பத்து மைல்கள் சைக்கிளில் போய், பட்டணத்திலிருந்து சாமான்கள் வாங்கி வந்து மௌனமாகக் குருக்ஷேத்ர யுத்தம் நடத்தினாள்.

யார் இந்தச் செல்வி?

பஞ்சாயத்தார் சொன்ன தீர்ப்பு என்ன?

அதை ஏன் செல்வியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை?

ஊரை எதிர்த்துக் கொண்டு, பஞ்சாயத்தாரை எதிர்த்துக் கொண்டு அவள் வாழத் தீர்மானித்தது எதற்காக? யாருக்காக?

இத்தனை கேள்விகளும் உங்களுக்குத் தோன்றுகிற மாதிரியே எனக்கும் தோன்றிற்று. இவற்றின் விடைகளை அறிகிற நோக்கத்துடனும், செல்வியைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்துடனும் அக்கிராமத்திற்குப் போய் செல்வியைச் சந்தித்தேன். அவள் சொன்னதை வைத்து குருக்ஷேத்ரம் என்ற தலைப்பிலேயே நாவல் ஒன்று எழுத ஆரம்பித்தேன். அந்த நாவல் வெளி வந்த பத்திரிகை நின்று போனதன் காரணத்தாலும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் மீண்டும் இதோ எழுதுகிறேன்.

முதல் பாராவில் நான் விவரித்திருந்த தாழம்பூ நிற மேனியாள் தான் செல்வி. படிப்பு ஐந்தாம் வகுப்பு என்றாலும் புத்தகங்களின் மூலம், பத்திரிகைகளின் மூலம் அவள் தேடிக் கொண்ட பொது அறிவு அதிகம்.



இந்தப் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் அவளுக்கு வாங்கித் தந்தவன் மாணிக்கம். அவளது அத்தை மகன். இவளுக்கென்றே அவனும், அவனுக்கென்றே இவளுமாகப் பிறந்திருப்பதாக இரு குடும்பத்தாராலும் நினைக்கப்பட்டவர்கள். ஐந்து வயது முதற்கொண்டே 'நீ யாரைம்மா கட்டிப்பே...?' என்று கேட்கப்பட்ட கேள்விக்குத் தன் மழலையில் 'மாணிக்கம் அத்தானை...' என்றவள்.

வயதாக ஆக மாணிக்கத்திற்கும் அவளுக்கும் இடையில் ஏற்பட்ட அன்பும், காதலும், பாசமும், பிணைப்பும் அதிகமாயின. நீயின்றி நானில்லை என்ற நிலையில் உருகினர். இருவருக்கும் திருமணத்தை முடித்து விட வேண்டுமென்று செல்வியின் தாய் தவிக்கத் தொடங்கினாள்.

''ஏங்க...இந்த வருஷமாச்சும் செல்வியோட கல்யாணத்தை முடிச்சிடலாங்க...அவ சமைஞ்சு எத்தனை வருஷமாச்சுங்க...வீட்டோட மாப்பிள்ளையும் வச்சுக்கிட்டு வெண்ணையிருக்க நெய்க்கு அழுத கதையா எத்தனை நாளுங்க பேசாம இருக்க முடியும்?'' என்று நாள் தவறாமல் கணவனை நச்சரிக்க ஆரம்பித்தாள்.

''எனக்கு மட்டும் அக்கறையில்லையா என்ன? ஆனா நாலைஞ்சு வருஷமா மானம் ஏமாத்திடுச்சு. விளைச்சலில்லே. கையிலயும் பணமில்ல...இந்த நிலைமையில எப்படிக் கல்யாணத்தை வச்சுக்கிறது சொல்லு...?'' - தந்தை பரிதாபமாய்க் கேட்டார்.

''நாம என்ன அன்னி அசல்லயா பொண்ணைக் கொடுக்கறோம்? உங்க தங்கச்சி மகன்...செஞ்சுத்தான் ஆகணும்னு கேட்கவா போறாங்க?''

''அவங்க கேக்காட்டிப் போனாலும் நாமாகச் செய்ய வேணாமா? தங்கச்சி மவன்னு [illegible] முடியுமா?''



17661
3365683

''அதுக்காக எத்தனை நாள் ரெண்டு பேரும் இப்படியே காத்துக்கிட்டிருப்பாங்க? அந்தப் பிள்ளை மாணிக்கம் கூட என்கிட்ட வந்து ஜாடைமாடையாக் கேட்டுப்புட்டான் தெரியுமா?''

''இந்தத் தைல முடிச்சிடுவோம். நிலத்து மேல கடன் வாங்கித்தான் செய்யணும். வேற வழியில்ல...அதனால தை வரட்டும்...தேதி குறிச்சுடலாம்...''

ஆனால் தை வருவதற்குள் செல்வியின் வாழ்க்கையில் பூகம்பம் வந்தது. மனோகரன் என்கிற ரெவின்யு இன்ஸ்பெக்டர் உருவத்தில் வந்தது. புதிதாக அந்த ஊருக்கு ரெவின்யு இன்ஸ்பெக்டராகப் பொறுப்பு ஏற்க வந்த மனோகரன் இளைஞன். படித்தவன். பட்டணத்து நாகரிகம் மிகுந்தவன். மாணிக்கம் போல் இல்லாமல் நல்ல நிறமாகவும் இருந்தான். ரயிலை விட்டு இறங்கி ரயிலடி வாசலில் வண்டி ஏதும் கிடைக்காத காரணத்தால் அந்தக் கொளுத்தும் வெய்யிலில் ஊர் வரை நடக்சத் தீர்மானித்த மனோகரனுக்குப் பாதி வழியில் அறிமுகமானான் மாணிக்கம்.

கட்டை வண்டியில் நெல் மூட்டைகளை அரிசியாக்கிக் கொண்டு ஊர் திரும்பி வந்து கொண்டிருந்த மாணிக்கம் மனோகரனைத் தன் வண்டியில் ஏற்றிக் கொண்டான். மனோகரன்தான் ஊருக்கு வந்திருக்கும் புதிய ரெவின்யு இன்ஸ்பெக்டர் என்பதைத் தெரிந்து கொண்ட மாணிக்கத்திற்கு அவன் மீதுமரியாதை அதிகமாயிற்று.

''இந்த ஊர்ல தங்க ஒரு நல்ல வீடு கிடைக்குமா மாணிக்கம்?'' என்று கேட்டான் மனோகரன்.

''நான் பார்த்துத் தரேன் சார். நல்ல வீடு கிடைக்கிற வரைக்கும் நீங்க எங்க வீட்ல தங்கலாம் சார். எங்க வீட்லயே சாப்பிடலாம் சார்.''

''அதெல்லாம் வேணாம்பா...உன் வீட்ல அதுக்கு ஒத்துக்குவாங்களோ மாட்டாங்களோ; உம் பொண்டாட்டி உன்னைச் சத்தம் போடுவா...''



மாணிக்கம் அதைக் கேட்டு கிராமத்து வெள்ளையில் சிரித்தான். வெட்கப்பட்டான். மெல்ல தான் தன் மாமா அத்தையின் வீட்டில் இருப்பதையும் அத்தைப் பெண் செல்வியைத் திருமணம் செய்து கொள்ளப் போவதையும் சொன்னான்.

''அட! லவ் மாரியேஜா...காதல் கல்யாணம் இந்த மாதிரிப் பட்டிக்காட்டுக் கிராமம் வரை எட்டிடுச்சா... ரொம்ப சந்தோஷம்'' என்று நிஜமான சந்தோஷத்தில் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தான் மனோகரன்.

அந்த நிஜம் - சந்தோஷம் இரண்டுமே வீடு வருகின்ற வரைதான் நிலைத்தது. வீட்டிற்கு வந்து செல்வியைப் பார்த்த உடனே சடாரென்று மனம் மாறிற்று. செல்வியின் அழகில் விழுந்து போயிற்று.

மாணிக்கம் சொன்னதைக் கேட்டு அவனைப் போல, அதே மாதிரி கறுப்பில் ஒரு கிராமத்துப் பெண்ணை எதிர் பார்த்து வந்த மனோகரனின் எதிரில் வந்து நின்று செல்வி 'வணக்கங்க' என்று கை குவித்த போது மனோகரனின் இதயத் துடிப்பு ஒரு முறை நழுவிற்று.

இவளையா...இந்த அழகையா மாணிக்கத்திற்குத் தரப் போகிறார்கள்? கன்னங்கரேலென்று கரிக்கட்டை மாதிரி இருக்கின்ற அவனுக்கா இந்தத் தாழாம்பூ நிறத்தழகி? இவளா அவனைக் காதலிக்கிறாள்?

இருக்காது என்று தோன்றிற்று. கூடவே அவர்களது பழக்கத்தைப் பார்த்து இருக்கும் என்று தோன்றிற்று. ஆனாலும் அடி மனசு செல்விக்காக ஏங்க ஆரம்பித்தது. அவள் தனக்குக் கிடைக்க வேண்டுமென்ற ஆசை எழுந்தது.

அந்த ஆசையை வேறு யாரிடமும் வெளியிடாமல் மெல்ல ஒரு நாள் வயல்வெளியில் சந்தித்த செல்வியின் அப்பாவிடம் மெதுவாகச் சொன்னான். ஆனால், அவரோ பட்டுக் கத்தரித்த மாதிரிப் பேசி விட்டார்.

''அவங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர்ன்னு பிறந்தவங்க. ஒருத்தருக்காக ஒருத்தர் வாழறவங்க.

எப்பவோ நடந்திருக்க வேண்டிய கல்யாணம் இது. என் கைல காசில்லாத காரணத்தாலத் தள்ளிப் போயிடுச்சு. வர்ற தைல நிலத்தை அடமானம் வச்சு முடிச்சுடப் போறேன். அதனால என்கிட்டக் கேட்ட இந்த விஷயத்தை இதோட விட்டுடுங்க தம்பி ... நீங்க இந்த மாதிரிக் கேட்டதையே நான் மறந்து போயிடுவேன் ... நீங்களும் மறந்துடுங்க தம்பி...''

மிகச் சுலபமாகப் பெரியவர் முற்றுப் புள்ளி வைத்து விட்டார். ஆனால் மனோகரனால் அப்படி முற்றுப்புள்ளி வைக்க இயலவில்லை. மனம் கொந்தளிக்க ஆரம்பித்தது. செல்வியைப் பார்க்கின்ற போதெல்லாம் துடித்தது. ஒரு பொருள் தனக்குக் கிடைக்காது என்பது தெரிய வருகிற போது அதன் மீது ஆர்வமும், ஆசையும் அதிகரிக்கின்ற மனித இயல்பு அவனிடமும் இருந்தது. எப்படியாவது செல்வியை அடைந்து விட வேண்டும் என்கிற எண்ணம் வெறியாக மாறி அவனை அலைக்கழித்தது.

அந்த வெறி அவனை வெறியனாக்கிற்று. ஒரு நாள் ஊர் முழுதும் மாரியம்மன் கோவிலுக்குக் கூழ் ஊற்றுகிற பரபரப்பில் இருந்த போது மனோகரன் மட்டும் தனியாக வயல்வெளியின் நடுவிலிருந்த பம்பு செட் அறையில் படுத்துக் கிடந்தான். செல்வியை அடைகிற மார்க்கத்தை யோசித்துக் கொண்டிருந்தான். அதே சமயம் வீட்டில் செல்வியின் தாய் செல்வியை அழைத்துச் சொன்னாள்.

''அம்மா ... செல்வி இந்தப் பிள்ளை மனோகரன் இன்னும் சாப்பிட வரலை' எங்கே போச்சு பாரும்மா?''

''வேற எங்கம்மா போயிருப்பாரு? பம்பு செட்டு ரூமிலே படுத்துக்கிட்டு ஏதாச்சும் படிச்சுக்கிட்டிருப்பாரு...''

''சரி ... அப்படியானா இட்லி செய்து வடை சுட்டிருக்கேன். சூடா தூக்குல போட்டுத் தரேன். கொண்டு போய்க் கொடுத்திட்டு வாயேன்...''

''போம்மா ... உனக்கு வேற வேலையில்லை. பசி எடுத்தா தானா சாப்பிட வருவாரு...''



''ச்சீ...பாவம் யாரு பெத்த பிள்ளையோ ... நம்மை நம்பி இருக்கு...நாமெல்லாம் சாப்பிட்டமில்ல...அந்த வயிறு மட்டும் பசியாக் கிடக்கலாமா? கொஞ்சம் கொண்டு போய்க் கொடுத்திட்டு வாம்மா...''—தாய் கெஞ்சினாள். மகள் சலித்துக் கொண்டாள். ஆனாலும் அலுமினியத் தூக்கை எடுத்துக் கொண்டு சமையல் கட்டை விட்டுக் கூடத்திற்கு வந்தவள், சுவரோரமாகப் படுத்துக் கொண்டிருந்த மாணிக்கத்தைப் பார்த்தாள். அருகில் போய் எழுப்பிக் கேட்டாள்.

''ஏன் அத்தான்...உங்க சினேகிதருக்கு டிபன் கொடுத்திருக்காங்க அம்மா. இதைக் கொஞ்சம் எடுத்திட்டுப் போய் மிஷின் ரூம்ல கொடுத்திட்டு வாங்களேன்...''

மாணிக்கம் சலித்துக் கொண்டே சொன்னான். ''இப்பத்தான் கோயில் திருவிழா ஏற்பாடெல்லாம் கவனிச்சுட்டு வந்து படுத்தேன். ஒரு நடை நீயே போயிட்டு வந்துடேன் செல்வி...''

அவன் முகத்தைப் பரிவோடு பார்த்த செல்வி இரங்கிப் போனாள்.

''சரி ... நானே போயிட்டு வரேன். நீங்க படுத்துத் தூங்குங்க. அப்பத்தான் ராத்திரி கூத்துப் பார்க்க முடியும்...''

''டிபன் கொடுத்திட்டு வந்து நீயும் கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கு என்னா?''

அவள் அழகாகத் தலையசைத்து விட்டுப் புறப்பட்டாள். தனக்கு நேரப் போகிற ஆபத்தை உணராதவளாக மெலிதான குரலில் திரைப்படப் பாடல் ஒன்றை முணுமுணுத்துக் கொண்டே நடந்தாள். அன்றிரவு திருவிழாவில் மாணிக்கத்தோடு சேர்ந்து கூத்துப் பார்த்த மகிழ்ச்சியில் மனம் லயித்துக் கிடந்தது. சென்ற முறை சந்தையிலிருந்து மாணிக்கம் வாங்கி வந்து தந்த பச்சைத் தாவணியும், பச்சைப் பாவாடையும் அணிந்து கொள்ள

வேண்டுமென்ற எண்ணத்தோடு அவன் கழனியைக் கடந்து வரப்பின் மீது நடந்து பம்பு செட் இருந்த அத்தச் சின்ன அறையை அடைந்த போது—

தூரத்தில் அவள் வருவதைப் பார்த்த மனோகரன் முடிவு செய்து கொண்டான். அவசர அவசரமாக ஓடிப் போய் அதுவரை ஓடாமல் இருந்த பம்பு செட்டை ஓட விட்டான். தடதடவென்று அது நீர் இறைத்துக் கொட்டுகிற சத்தத்தில் செல்வியின் கத்தல் வெளியில் கேட்காது என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டான். அப்படியே கேட்டாலும் சுற்றி ஒரு மனித நடமாட்டமில்லை. ஊர் முழுதும் மாரியம்மன் திருவிழாவில் மூழ்கிக் கிடந்ததால் கழனி ஆளரவமற்றுக் கிடப்பதை உணர்ந்து கொண்டான். செல்வி அறையை நெருங்குவதற்கு முன் ஓடிப் போய்க் கதவின் மூலையில் ஒளிந்து கொண்டான்.

மனோகரனின் எண்ணத்தையும், கதவின் பின்புறம் அவன் ஒளிந்து கொண்டிருப்பதையும் அறியாத செல்வி, ''ரெவின்யு இன்ஸ்பெக்டர் சார்'' என்று குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

மறுவினாடி கதவை மூடித் தாளிட்டு அவளது வாயைப் பொத்திக் கீழே தள்ளிய மனோகரன் தன் எண்ணத்தைச் செயலாக்க நீண்ட நேரம் அவளுடன் போராடினான். அவனால் உருவி எறியப்பட்ட அவளது தாவணி மிஷினில் சிக்கித் துண்டு துண்டாகக் கிழிந்து போயிற்று. திருவிழாவை முன்னிட்டுக் கைகளில் அவள் அணிந்திருந்த புதுக்கண்ணாடி வளையல்கள் உடைந்து சிதறின. நீண்ட நெடும் போராட்டத்திற்குப் பின்னர் அடிபட்ட பறவையாக அவள் வீழ்ந்தாள்.

அரைமணி நேரத்திற்குள் அத்தனையும் நடந்து போயிற்று. வயல் வரப்பில் அழகான நடையில், கனவு காணும் மனமுமாக வந்த செல்வி என்கிற செல்வம் ஒரு திருடனால் அபகரிக்கப்பட்டது. கொள்ளையடிக்கப் பட்டது, மிருகத்தனமாகச் சூறையாடப்பட்டது. துள்ளி



அழகாய் ஓடும் புள்ளி மானை மறைந்திருந்து பாய்ந்து வந்த சிங்கம் அடித்துப் போட்ட மாதிரி அவள் போடப்பட்டு விட்டாள். வலிமை வாய்ந்த மனமுள்ள ஓர் உடலை, மனோ வலிமையற்ற வெறும் உடல் பலம் வீழ்த்தி விட்டது. வேடனால் குறி பார்த்து அம்பினால் அடிக்கப்பட்ட பறவை அப்படியே ரத்தம் சொட்டச் சொட்ட ஓடி வந்து சிபிச் சக்ரவர்த்தியின் மடியில் வீழ்ந்த மாதிரி ஓடி வந்து மாணிக்கத்தின் காலடியில் வீழ்ந்தாள் செல்வி.

அன்று மாலை தெருக்கூத்திற்குப் பதிலாக ஊர்ப் பஞ்சாயத்து கூட்டப்பட்டது. மாரியம்மன் திருவிழாவில் கலந்து கொள்ள வந்த ஜனங்கள் பஞ்சாயத்தில் கலந்து கொண்டார்கள்.

செல்வியும், மனோகரனும் மக்கள் முன்பு நிறுத்தப் பட்டனர். பஞ்சாயத்துத் தலைவரான பெரிய மனிதர் மனோகரனைப் பார்த்துக் கேட்டார்.

''என்னப்பா...ரெவின்யு இன்ஸ்பெக்டர்...நீ இந்த ஊருக்கு வந்த காரியம் என்ன? செஞ்சிருக்கிற காரியமென்ன?''

மனோகரன் பதில் சொல்லாமல் தலை குனிந்து மௌனமாய் நின்றான்.

''இப்படிப் பேசாம நின்னா என்ன அர்த்தம்? செய்த தப்பை ஒத்துக்கறயா இல்லையா?''

மீண்டும் தலை நிமிராத அதே மௌனத்துடன் இருந்தான் அவன்.

''இப்படி எதுக்கும் பேசலைன்னா எப்பிடி? தப்பை ஒத்துக்கறியா...இல்லையா?''

''ஒ...ஒத்துக்கறேங்க...''

''ஒத்துக்கிட்டா மட்டும் போறாதுப்பா ... அந்தப் பொண்ணை நீதான் கட்டிக்கணும். அதுதான் உன் தப்புக்குப் பிராயச்சித்தம், தண்டனை எல்லாம்...''

அதற்காகவே காத்திருந்த மனோகரன் மெல்லிய குரலில் ''சரிங்க'' என்றதும் அடிபட்ட வேங்கையைப் போல் சீறிக் கொண்டு எழுந்தாள் செல்வி. காற்சிலம்பைக் கையில் ஏந்தி மன்னனது அவைக்குள் நுழைந்த மங்கை யென சிலிர்த்துக் கொண்டு நின்றாள்.

பஞ்சாயத்தாரின் தீர்ப்பிற்கு எதிர்க்குரல் கொடுத்தாள்.

''முடியாது...இவனைக் கட்டிக்க நான் ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன்!''

அந்தக் குரல் பஞ்சாயத்தாரைத் துணுக்குற வைத்தது. மக்களைத் துணுக்குறச் செய்தது. அதிர்ந்து போன பஞ்சாயத்துத் தலைவர் புருவங்கள் சுருங்க அவளை ஏறிட்டுக் கேட்டார்.

''என்னது?! இவனைக் கட்டிக்க மாட்டியா? பின்ன, யாரைக் கட்டிக்கப் போற?''

''வேற யாரை? மாணிக்கம் அத்தானை! அவரைத் தவிர வேற யாரையும் நான் மனசாலயும் நினைச்சதில்லை. எனக்குன்னே அவரும், அவருக்குன்னே நானும் பிறந்தவங்கன்ற விஷயம் இந்த ஊருக்கே தெரியும்...''

''அது சரி புள்ளே...இப்ப எப்படி மாணிக்கம் உன்னைக் கட்டிப்பான்?''

''ஏன், என்ன நடந்துப் போச்சு? என் மேல என்ன தப்பு? இப்பவும் அத்தான் என்னைக் கட்டிக்கத் தயாராகத் தான் இருக்காரு...''

''என்ன?!'' என்று தலைவர் அதிர மாணிக்கம் எழுந்து வந்து சொன்னான்.

''ஆமாங்க...செல்வியைக் கட்டிக்க நான் தயாரா இருக்கேங்க. நடந்து போன விஷயத்த ஒரு விபத்துன்னு ஒதுக்கிட்டு அதை நான் கட்டிக்கத் தயாரா இருக்கேன், அதனால் செல்வியை எனக்கே கட்டி வச்சிடுங்க...''

இது பஞ்சாயத்தார் எதிர்பார்க்காதது. இந்தத் திருப்பத்தை மனோகரன் கூட எதிர்பார்க்க வில்லை. இப்படிச்



செய்தால் கடைசியில் வேறு வழியின்றி செல்வியைத் தனக்குத் திருமணம் செய்து வைத்து விடுவார்கள் என்ற எண்ணத்தினால் தான் அவன் அவ்வாறு நடந்து கொண்டான். ஆனால் இப்படி ஒரு புதிய கோணம் எழுந்ததும் மாணிக்கத்தை ஏறிட்டுப் பார்க்கிற தகுதியின்றி தலை குனிந்தே நின்றிருந்தான்.

ஆனால் பஞ்சாயத்துத் தலைவர் அப்படி இருக்க வில்லை. மாணிக்கத்தின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள வில்லை.

''அது எப்படிப்பா முடியும்?'' என்று ஆரம்பித்தார்.

''கெடுத்தவன் இருக்க நீ கட்டிக்கறேன்னு சொன்னா அது எப்படி முடியும்?''

''ஏன் முடியாதுங்க? நானும் செல்வியும் மனசார நேசிக்கிறோமுங்க. ஒருத்தரை விட்டு ஒருத்தரால இருக்க முடியாதுங்க...''

''இருக்கலாம்ப்பா...நீ சொல்றது எத்தனை நிஜமோ... அதே மாதிரி அவளை நீ கட்டிக்க முடியாதுன்றதும் நிஜமா இருக்கே...''

''கட்டிக்க முடியாதுங்களா? ஏங்க?''

''ஏன்னா...மனோகரன் அவளைக் கெடுத்தவன். அவனே அவளைக் கட்டிக்க முன் வர்றப்போ...அவனைத் தான் அவள் கட்டிக்கணும். அதுதான் நியாயம். அதுதான் முறை...''

இந்த 'முறை, நியாயம்' என்று சொல்லப்பட்ட இரண்டையும் எதிர்த்தாள் செல்வி. உடல் வலிமை ஒன்றினால் மட்டுமே தன்னை அடைந்த ஒருவனை மணக்க எந்தப் பெண்ணும் முன் வர மாட்டாள் என்று வாதிட்டாள். அதுபோல் ஒரு பெண் தன்னைக் கெடுத்தவனை ஏற்றுக் கொள்வதாக சினிமாக்களில் காட்டப்படலாம். அல்லது கதைகளில் எழுதப்படலாமே தவிர நிஜ வாழ்க்கையில், நடைமுறையில் தன்மானமுள்ள எந்தப் பெண்ணும் அதற்குச் சம்மதிக்க மாட்டாள் என்றாள். ஆகவே

தன்னாலும் அதற்குச் சம்மதிக்க முடியாது. மனோகரனைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று மறுத்தாள்.

அவள் எத்தனை பிடிவாதமாக மறுத்தாளோ, அதே பிடிவாதத்தைப் பஞ்சாயத்து தன் தீர்ப்பில் காட்டியது. செல்வி மனோகரனைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றது. அதை விட்டு அவள் வேறு யாரைத் திருமணம் செய்து கொண்டலும் ஊர் அதனை ஏற்காது என்றது. அது விபச்சாரத்திற்குச் சமம் என்று வாதிட்டது.

எதிர்வாதம் புரிந்த செல்வியும் விடவில்லை. தளர்ந்து போய் விடவில்லை. சோர்வடையவில்லை.

என்னவானாலும் மனோகரனை மணக்கிற முடிவை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்ற திடத்துடனும், நிர்க்கத் துடனும் வாதாடினாள் அவள்.

''ஐயா...என்னை எங்க அத்தானை விட்டுப் பிரிச்சுடா தீங்க. அவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதன்னு சொல்ற போது நீங்க இந்த மாதிரிப் பேசி, தடுத்துடாதீங்க. பச்சைப் பசேல்னு இருக்கிற வயல்ல் மாடு நுழைஞ்சு மேய்ஞ்சிடுச்சின்னா என்ன செய்யறீங்க? மாட்டைப் பிடிச்சுக் கட்டிப் போடறீங்க. பவுண்டரிக்கு ஓட்டறீங்க. மாட்டின் சொந்தக்காரன் வந்து அபராதம் கட்டிட்டு மாட்டை ஓட்டிக்கிட்டுப் போறானே தவிர மாடு மேய்ஞ்ச பயிர்னு பயிர் முழுசையும் வெட்டியா போட்டுடறீங்க? இல்ல நீ வச்சுக் கொளுத்தி அழுச்சுடறீங்களா? இல்லையே ...அந்த மாதிரித் தப்பு செய்தவனுக்குத் தண்டனை கொடுக்காம என் வாழ்க்கைல தீயிட்டுப் பொசுக்கப் பார்க் கறீங்களே...இது என்ன நியாயம்?

''முடியாது. என்னால உங்க தீர்ப்புக்குக் கட்டுப்பட முடியாது. நான் மாணிக்கம் அத்தானைத்தான் கட்டிப்பேன். அதுக்கு மேல, நீங்க என்ன செய்யணுமோ செய்துக்கலாம்.''

அழுத்தம் திருத்தமாய் உறுதியிட்டு அறுதியிட்டுச் சொல்லப்பட்ட அந்தச் சொற்களைக் கேட்ட பஞ்சாயத்



தாரும் ஊர் மக்களும் கொதித்து எழுந்தனர். அதன் பின்னரே செல்வி ஊரை விட்டுப் போய் விட வேண்டும் என்ற தீர்ப்பைக் கூறினர். அதனையும் அவள் ஒதுக்கி வைக்கப்பட்டாள். ஊர்க் கிணற்றில் நீர் மொள்வது மறுக் கப்பட்டது. பெற்றவர்கள் கூடப் பார்க்கப் போகக் கூடாது என்று தடுக்கப்பட்டது. சின்னத் தீக்குச்சிக்கூட அவளுக்குத் தரப்படக் கூடாது, என்று தடை விதித்துக் கட்டுமானம் போடப்பட்டது.

இவை எதற்கும் பயந்து போய் விடவில்லை செல்வி. தலை வணங்கி விடவில்லை. தைரியமாய்த் தலை உயர்த்தி கம்பீரமாக நின்றாள். தன் எண்ணத்திலும், கொள்கை யிலும் திடமாக இருந்தாள். மாணிக்கத்தையே கல்யாணம் பண்ணிக் கொண்டு 'வாழ்ந்து காட்ட வேண்டும்' என்கிற சித்தத்தில் ஏரிக்கரை ஓரமாய்க் குடிசை ஒன்றைப் போட்டுக் கொண்டு மாணிக்கத்தோடு வாழ்க்கை நடத்த ஆரம்பித்தாள்.

தன்னை நோக்கி எறியப்பட்ட அம்புகளுக்கு மத்தியில் வீரமாய் நின்ற ஜோன் ஆஃப் ஆர்க் ஆகத்தான் அவள் எனக்குத் தோன்றினாள். அவளது கேள்வியின் ஒவ்வொரு வார்த்தைகளும் என்னைச் சிந்திக்க வைத்தன. அவளுக்கு நேர்ந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு மருந்திட்டுக் கட்டாமல் ஆற்றுவதற்கான முறைகளைக் கையாளாமல், சனாதன சிந்திப்பில் இறங்கின சமுதாயத்தையே ஒதுக்கித் தள்ளித் தனியாய், தைரியமாய், பிடிவாதமாய், வீரமாய், வீர்யமாய் எதிர்த்துப் போராடின அந்தப் பெண் செல்வி—

நம்முடைய காவிய, காப்பிய எந்த வீராங்கனைக்குக் குறைந்தவள் சொல்லுங்கள்?

அது போன்று ஒரு நிகழ்ச்சி நடைபெற்று விட்டால் வேறு வழியில்லை என, தன் நெஞ்சில் வேல் பாய்ச்சியவனது நெஞ்சுக்கே மாலையிடுகிற அந்த துர்ப்பாக்கிய நிலையி லிருந்து வெளிவந்து துணிகரமான ஒரு முடிவை நோக்கி வெற்றிகரமாகச் செயல்பட்ட இவள்—

சரித்திரத்தின் எந்தப் புரட்சிப் பெண்களை விடத் தாழ்ந்தவள் என்பதைக் குறிப்பிடுங்கள்.

முடியாது. இப்படிச் சொல்லவோ, குறிப்பிடவோ, உங்களால் இயலாது. ஏனெனில்—

செல்வி நடத்திய போராட்டம் - அறவழிப் போராட்டம்.

அவளது அந்த யுத்தம் - தர்மயுத்தம்.

அவள் மேற்கொண்ட நெறி - புரட்சிக் கொள்கை.

அவளது முடிவு - மனித உணர்வுகளோடு கூடிய மனிதாபிமான முடிவு.

செல்வி போன்றவர்கள் சரித்திரத்தில் இடம் பெறாமல் போகலாம். எங்கோ ஒரு கிராமத்து மூலையில் இருந்து மௌனப் போராட்டம் நடத்தலாம். நிஜமான நீதி. நியாயம், நேர்மை, மனிதாபிமான இவற்றிக்குக் குரல் கொடுக்கலாம். அந்தக் குரல் கிராம மக்களின் காதுகளை எட்டாதது போல், மனங்களைத் தொடாதது போல் நம்மை எட்டாமல், தொடாமல் போய் விடக் கூடாது. செல்வி போன்ற பெண்களின் போராட்டங்கள் வெளி வராமல் ஓய்ந்து விடக் கூடாது. ஓய விடக் கூடாது என்ற காரணத்தினால் ஒரு குடும்பம் மட்டுமின்றி, சமூகம் மட்டுமின்றி, பஞ்சாயத்து மட்டுமின்றி கிராம முழுதையும் எதிர்த்து நின்று எந்த ஒரு கூட்டத்தின் உதவியின்றி, அமைப்பின் உதவியின்றி, இயக்கத்தின் உதவியின்றி தனிப் பட்ட ஒருத்தியாக, தன்னந்தனியாளாக நின்று போராடிய அந்தப் போராட்டத்தைக் தெரியப்படுத்த வேண்டும். மன்னனே ஆனாலும் மண்டபத்தினுள் நுழைந்து தவற்றை எடுத்துக் கூறுகிற தைரியம் கொண்ட கண்ணகிகள் இன்னமும் இருப்பதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதனாலே இதை எழுத முற்பட்டேன்.

நான் எடுத்துச் சொல்ல முற்பட்ட விதம், விஷயம் இரண்டினையும் அதே விதத்தில் அதே விஷயத்தோடு அதே



நோக்கில் புரிந்து கொள்ள உங்களால் முடியும் எனவும் நம்புகிறேன்.

## 14. அம்மா

அம்மா என்றால் அன்பு என்கிறார்கள்.

அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை என்கிறார்கள்.

தாயினும் சிறந்த கோயிலுமில்லை என்கிறார்கள்.

பண்பின் உறைவிடம், பாசத்தின் புகலிடம், கனிவின் இருப்பிடம், கருணையின் தனியிடம் - என்றெல்லாம் சொல்லப்படுகின்றவள் - புகழப்படுகின்றவள் - போற்றப் படுகின்றவள் யார்?

தாய், அம்மா, மா, மதர், மம்மி, அம்மா...

இப்படி எந்த மொழியானாலும் அம்மா - அம்மாதான்.

அந்த அன்பிற்கு, பாசத்திற்கு, கருணைக்கு, இரக்கத் திற்கு ஈடில்லை.

உலகம் முழுவதிற்கும் ஒன்றானவள் அவள்.

உலகம் முழுவதிலும் பரவி நிற்பது அவளது பாசம்.

பொறுமையின் எடுத்துக்காட்டு.

தியாகத்தின் சின்னம்.

இன்னும் எது சொன்னாலும் பொருந்தக் கூடியது ஒன்று தான்—

அதுதான் தாய்மை.

அன்பின் இலக்கணமே தாய்மைதான்.

பண்பின் எடுத்துக் காட்டே அவள்தான்.

தன்னைக் கொன்று தன் இதயத்தை எடுத்துக் கொண்டு போய் காதலியின் காலடியில் சமர்ப்பிக்கத் தவிக்கும் மகன் கல்தடுக்கி விழுந்ததைப் பார்த்து அந்தத் தாயின் இதயம் கேட்டதாம்.

''பார்த்துப் போகக் கூடாதா மகனே...அடிபட்டு விட்டதாடா குழந்தாய்?''

இதை விட வேறு எந்த விதமாகவும் தாய்ப் பாசத்தை எடுத்துச் சொல்லி விட முடியாது. மேன்மைப் படுத்தி விட முடியாது.

அப்படிப்பட்ட தாய்ப் பாசமும், தாய்மார்களும் சமீப கால காலமாகச் செய்தித் தாள்களில் எவ்வாறு அடிபடுகிறார்கள் என்று பார்த்தீர்களானால்—

தன் காதலனைக் காதலித்த மகளைக் கொலை செய்யக் கசாப்புக் கடைக்காரக் காதலனை அனுப்பிய தமிழ் நாட்டுத் தாய்.

இட்லி வேண்டாம், சோறு வேண்டுமென்ற ஆறு வயசுச் சிறுவனை அவன் தாய் அறைந்ததன் காரணமாகச் சுருண்டு விழுந்து செத்த சிறுவன்.

மறுநாள் பார்த்தால் அச்சிறுவனின் சாவிற்குக் காரணம் சோறு இல்லை - கள்ளக்காதல் என்று மறுக்கப்பட்ட செய்தி...

இதையெல்லாம் படிக்கிற போது நெஞ்சு பதைக்கிறது" மனம் குமுறுகிறது. உள்ளம் துடிக்கிறது, சொல்ல முடியாத வேதனை வடிகிறது. தூக்கமற்றுப் போகிறது. ஏன்...ஏன் இப்படி என்கிற கேள்வி எழுகிறது. எதனால் இந்த மாறுதல் என்று அரற்றுகிறது.

கொலையும் செய்வாள் பத்தினி என்று சொன்னார்களே தவிர, கொலை செய்வாள் தாய் என்று யாரும் சொல்லாதது மட்டுமல்ல; நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்.

உயிருக்கு ஊசலாடுகிற தன் குழந்தையை, குற்றுயிரும் குலை உயிருமாக வதைபடுகின்ற அவஸ்தையைக் காணச் சகியாமல் ''கடவுளே...இதைப் பார்த்துக்கிட்டிருக்கிற என்னைக் கொண்டு போய் விடு!'' என்று கதறுவாளே தவிர—



''அந்தக் குழந்தை படற கஷ்டம் தாங்கலையேப்பா... இதைவிட அந்தக் குழந்தையை உன் கிட்ட அழைத்துக் கொண்டு விடேன்...'' என்று பிரார்த்திப்பாளே தவிர—

கருணைக் கொலைக்குக் கூடச் சம்மதிக்க மாட்டாள்.

அதைக் கூட அவளால் தாங்க இயலாது. அவ் வார்த்தையைக் கேட்டே துடித்துப் போவாள். கை எடுத்துக் கும்பிடுவாள். ''ஐயோ...வேணாங்க...நான் பெத்த கொழந்தய நானே கொல்றதா?'' என்று பதறிப் போவாள்.

அப்படிப்பட்ட தாய்க் குலத்தில் வந்த சிலர்தான் காதலுக்காக - அதுவும் செய்தித் தாள்களில் வருகின்ற மாதிரி - கள்ளக் காதலுக்காக - பத்து மாதம் சுமந்து பெற்ற பிஞ்சுகளை எண்ணெய் ஊற்றி எரிய வைப்பவளாக - துடிக்கத் துடிக்க, கதறக் கதறக் கொலை செய்பவளாக - அறைந்து கொல்பவளாக...

இவர்கள் எல்லாம் கதையில் வருபவர்கள் இல்லை. சினிமாவில் காட்டப்படும் வில்லிகள் இல்லை. சினிமாவில் காட்டப்படும் வில்லிகள் இல்லை. நிஜமானவர்கள். நிஜ வாழ்க்கைப் பெண்கள். அதாவது கல்யாணமாகிக் குழந்தைகள் பெற்ற குடும்பப் பெண்கள், தாய்மார்கள்.

தாய்மார்கள் என்று எழுதுகிற போது என் கை தயங்குகிறது.

மனம் தயங்குகிறது.

தாம்மார்களா, தாய்மைக்குணம் கொண்டவர்களா இவர்களா என்கிற கேள்வி எழுகிறது.

தன்னைக் கொன்று தன் இதயத்தைத் தூக்கிப் போகும் மகன் கல் தடுக்கி விழுவதைக் கூடக் காணச் சகிக்காத அந்தத் தாய்க்குலத்தைச் சார்ந்தவர்களா...?

முதலில் எழுதின அந்த அன்பு மயமானவர்களா?

பண்பின் உறைவிடமா?

பாசத்தின் புகலிடமா?

கனிவின் இருப்பிடமா?

கருணையின் தவிப்பிடமா?

எவ்வாறு மாறிப் போனார்கள் இவர்கள்? தங்கள் உதிரத்தின் உதிரமாய் உதித்த உருவத்தை, பத்து மாதம் சுமந்து, வலியேந்திப் பெற்ற செல்வத்தை எரிக்க, ஓழிக்க, அழிக்க எவ்வாறு துணிவு பெறுகிறார்கள்? எப்படி மனம் வருகிறது? அந்தப் பிஞ்சு முகங்களின் கொஞ்சு மொழிகளை விட வலிமையானதா அவர்கள் சொல்லிக் கொள்கிற அந்தக் காதல்? பெற்றக் குழந்தைகளைக் கொல்கிற அளவிற்குக் கயமையும், கண்மூடித்தனமும் நிறைந்ததா?

விடுங்கள். பெண்மை, தாய்மை என்பதெல்லாம் கூட வேண்டாம். மனிதனாய்ப் பிறப்பெடுத்ததன் தன்மை இல்லையா? அந்த மனிதத்தனம் என்பது அவர்களின் மனங்களை விட்டு எங்கே ஓடி ஒளிந்து கொண்டு விட்டது? குழந்தைகளைக் கொல்கிற அளவிற்கு ஈரமற்றுப் போயிருக்கிறதென்றால்...

இது காதலா...இல்லை கண்களை, அறிவை மறைக்கிற காமமா?

தான் பெற்ற குழந்தைகளின் பசி தாங்க முடியாமல், வறுமை தாங்காமல் கிணற்றில் வீசிக் கொன்றாளே நல்லதங்காள்—

அவளும் பெண் தான்.

அவளும் தாய் தான்.

செய்தித் தாள்கள் வெளியிட்டிருக்கின்ற இவர்களும் பெண்கள். இவர்களும் தாய்கள்.

ஆனால் இவர்கள் நல்லதங்காள்களா என்றால் - ஆம்;

இவர்களும் நல்ல தங்காள்கள் தான்.

பசி தாங்காத காரணத்தினால் குழந்தைகளைக் கொன்றாள் அவள்.



இவர்களும் பசி தாங்க இயலாதவர்களாகத் தங்கள் குழந்தைகளைத் தாங்களே கொன்றிருக்கிறார்கள்.

அது வயிற்றுப் பசி என்றால்—

இவர்களுடையது உடல் பசி.

தான் பெற்ற குழந்தைகளைக் கொல்லத் தாங்களே திட்டம் தீட்டுகிற அளவுக்கு அகோரப் பசி.

தீட்டிய திட்டத்தைச் செயலாற்றுகின்ற அக்கிரமப் பசி.

இவற்றையெல்லாம் படிக்கிற போது, இந்த அளவிற்கு மனிதப் பண்புகளும், பண்பாடுகளும் கீழே போய் விட்ட போது, பெண்மையின் மென்மையும், தாய்மையின் தனிச் சிறப்பும் வற்றுவதைப் பார்க்கிற போது—

புனிதமானதும்,

புராதனமானதும்,

கம்பீரமானதும்,

கலாச்சாரமிக்கதுமான நம் நாட்டை விட்டு இவை அத்தனையும் கொஞ்சங்கொஞ்சமாக நூலிழை நூலிழையாக நழுவிக் கொண்டிருக்கிறதோ என்ற பயம் ஏற்படுகிறது. என் பயம் நிஜமாக இருக்கிற பட்சத்தில் எதிர்காலம் என்னவாகும் என்கிற கேள்வி எழுந்து மருட்டுகிறது.

மனிதாபிமானங்கள் மறைந்து வெறும் சுயநலங்கள் பெற்ற குழந்தைகளை வெற்று உடல் ஆசையில் கொல்கின்ற ஈனத்தனங்களும் நிறையுமேயானால் - மலிவுபடுமேயானால்...

அவற்றைத் தடுத்து நிறுத்தி மீண்டும் தாய்மை உணர்வுகளைத் தழைக்கச் செய்ய வேண்டிய பெரிய பொறுப்பும் கடமையும் இருப்பதை நினைவு படுத்த வேண்டிய மிகப் பெரிய காரணத்தினால் தான் இதை எழுதுகிறேன். மீண்டும் தாய்க்குலங்கள் தாய்க்குலங்களாக வேண்டுகிறேன். அறிவை உடல் ஆட்கொள்ள வேண்டியதன்

அவசியத்தினை வலியுறுத்துகிறேன். மனிதன் மனிதனாக இயங்கவும், பெண் பெண்மையை மறக்காதிருப்பதற்கான சந்தர்ப்பம் மீண்டும் ஏற்பட வேண்டுகிறேன்.

அம்மா என்றால் அன்பு;

அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை;

தாயினும் சிறந்த கோயிலுமில்லை;

—என்பதெல்லாம் வெற்றுச் சொற்களில்லை. வேத மந்திரங்கள் என்பதை நிரூபிக்கும் நேரம் நெருங்கி விட்டதாக உணருகிறேன்.

இது ஒரு பிரச்னை. மாறி வரும் பெண்களின் மனநிலை பற்றின பிரச்னை. எந்த ஒரு மாற்றமும் தானும் தழைத்து, தன்னைச் சுற்றியுள்ளவர்களும் தழைப்பதற்காக ஏற்பட்டதாக இருக்க வேண்டுமே தவிர, எவரையும் கருக வைப்பதாக இருக்கக் கூடாது. காந்த அடிக்கக் கூடாது. அதுவும் மொட்டுக்களையும், பிஞ்சுகளையும் பறித்தா நெருப்பில் போடுவார்கள்? க்ஷண நேர சுகத்திற்காகவா? சரீரம் பெருகின்ற இன்பத்திற்காகவா? யோசியுங்கள். பெண்களே... தயவு செய்து சிந்திக்கிற பக்குவம் பெறுங்கள். ஒரு வினாடி நிதானித்தால், அமைதியாக அணுகினால் மாறி வரும் இந்த மன உணர்வுகள் மீண்டும் மாறும். பெண் பெண்ணாவாள். தாய் தாயாயாக மாறுவாள்.

●

## 15. பெண்ணுக்குப் பெண்ணே எதிரியா?

இந்த தேசத்துப் பெண்கள் அவ்வளவாக அரசியல் நாட்டமற்றவர்கள். தீவிரப் பங்கு எதுவும் கொள்ளாதவர்கள். விழிப்புணர்ச்சி தேடாதவர்கள். சுபாவமாகவே தாங்கள், தங்களின் குடும்பம் என்கிற சிறிய வட்டத்திற்குள் அடைபட்டு விடுகிறவர்கள் என்கிற எண்ணம் நிறைய பேருக்கு உண்டு. இந்தத் தேசம் மட்டுமின்றி உலகெங்கிலும் பெண்களின்



நிலை இதுவாகத்தான் இருக்கிறது என்கிற அபிப்பிராயமும் உண்டு.

இந்த அபிப்பிராயம் ஓரளவிற்குச் சரியானதோ என்று கூட எனக்குத் தோன்றும். ஏனெனில் உலகத் தலைவர்களில் பெண்கள் என்று எடுத்துக் கொண்டால் மூன்று நான்கு பேர்களே இருந்திருக்கிறார்கள். இப்போதும் திருமதி அகினோவைச் சேர்த்து அதே கணக்குத்தான் வரும். அதிலும் மாக்ரெட் தாட்சர் விலகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதன் பின்பு இரண்டே பெண் தலைவர்கள் என்றாகும்.

உலகைவிட்டு நம் நாடு என்று பார்த்தால் கூடப் பெண்களின் அரசியல் ஈடுபாடு குறைவாகவே இருக்கின்றது. சமீபத்தில் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில்கூட பெண் வேட்பாளர்கள் குறைவு. சமீபத்தில் காட்டப்பட்ட ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனின் பாரளுமன்ற உரையின் நேர்முகத் தொலைக்காட்சி ஒளிபரப்பில் முதல் முதலாக நம் நம் வீடுகளிலிருந்து பாராளுமன்றத்தின் முக்கியமன்றத்தைப் பார்க்கக்கூடிய வசதி ஏற்பட்டபோது அத்தனை ஆண்களுக் இடையில் பெண்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. தொலைக்காட்சியின் ஒளிப்பதிவாளருக்குக் கூடப் புடவையணிந்த முகங்களைத் தேடிக்காட்டுகின்ற சிரமம் இருந்திருக்கும். ஆகவேதான் மேனகா காந்தி, ஜமுனா, வைஜெயந்திமாலா பாலி போன்ற மூவர் மட்டுமே தொலைக் காட்சியின் காமிராவிற்குள் பிடிபட்டனர்.

இந்த நிலை மாறவேண்டும் என்கிற எண்ணம் பெரும்பாலான பெண்களுக்கு இருக்கிறது. பொதுவாழ்விலும் அரசியலிலும் பங்குகொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் இருக்கிறது. தங்களால் இயன்ற அளவில் பணியாற்றுகிற நோக்கம் இருக்கிறது. தீவிர அரசியலில் ஈடுபடுகிற எண்ணம் இருக்கிறது. பாரளுமன்ற இரு சபைகள். சட்டசபை இவற்றில் பங்கு பெறுகிற ஆர்வம் இருக்கிறது.

அரசியலின் நெளிவு சுளிவுகளைத் தெரிந்து கொள்கிற, கற்றுக்கொள்கிற ஊக்கம் இருகிறது.

ஆனால் இந்த ஊக்கம், ஆர்வம், பணியாற்றுகிற திறமை, குடும்பம் தவிர வெளி உலகம் என்கிற ஒன்று உண்டு. அதில் பங்கு கொள்ளவேண்டும் என்கிற எண்ணம் இவை அனைத்தும் அடங்கிப் போவதன் காரணம், ஊக்குவித்து வழிகாட்டி அழைத்துச் செல்லக் கூடிய நம்பிக்கையான நேசக் கரங்கள் கிடைக்காததும், தெரியாததும்தான். வழிமுறைகள் புரியாததுதான். தாங்கள் செல்லக்கூடிய வழி இடர்ப்பாடுகள் அற்றதாக இருக்கவேண்டும். சொகுசானதாக இருக்கவேண்டும் என்பதல்ல அவர்களின் எதிர்பார்ப்பு. பெண்களுக்கு இடர்ப் பாடுகள் புதிதல்ல. தைரியமும், திடசித்தமும் அற்றவர் களல்ல. ஆனால் தங்களின் பணி தொடர, ஆற்றல் சிறக்க, நல்லதோர் பாதையைத் தெளிவுபடுத்திக்காட்டி வழி நடத்திச்செல்லக்கூடிய தலைமையைத் தேடுகிறார்கள். அத் தலைமை கிடைத்தால்தான் இவர்களுக்குப் பாதை பிடிபடும். பாதை பிடி பட்டால்தான் பயணம் சிறக்கும். இலக்கை எட்டமுடியும்.

இல்லாவிட்டால் அரைவேக்காட்டுத் தனமாக மாறி அறிவற்ற நிலைக்கு இட்டுச் சென்றுவிடுகிற அபாயகரமான நிலை உருவாகும். அரை குடங்களாகத் தளும்பும். வெறிபிடித்த செயல்முறைகளுக்கு வழி வகுக்கும். அறிவு முதிர்ச்சியுமற்ற பேதைமைக்கும், அழிவு நிலைமைக்கும் காரணமாகும்.

இப்படிப்பட்ட ஒரு நிலைமை சமீபத்தில் ஆந்திராவில் நேரிட்டிருக்கிறது. பெண்கள் அரசியலில் ஈடுபடுவதாக நினைத்து அறிவற்ற நிலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். பகுத்தறிவைப் புறக்கணித்துக் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். பெண்ணுக்குப் பெண்களே எதிரிகளாகி இருக்கிறார்ரள். அநாகரிகமாக நடந்து



கொண்டிருக்கிறார்கள். கேவலமான முறையில் மானபங்கப் படுத்தியிருக்கிறார்கள்.

இதற்கு முன் ஆண்கள் பெண்களை அவமானப் படுத்தியதைப் பார்த்திருக்கிறோம். துகிலுரித்து மானபங்கப் படுத்தியதாகக் கேட்டும் படித்தும் இருக்கிறோம். ஆனால் பெண்கள் ஒன்று சேர்ந்து ஒரு பெண்ணைத் துகிலுரிலுரிந்த கொடுமையை, அநாகரி கத்தை, அருவறுப்பான செயலைக் கேள்விப்பட்டதோ, பார்த்ததோ, படித்ததோ இல்லை. இது போன்று மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்க ஒரு செயல் ஆந்திராவில் நடந்திருக்கிறது. அதுவும் எப்போதா நடந்ததில்லை. பெண் முன்னேறினவளாக, சுயசிந்தனையடைந்தவளாக, கல்வியறிவு பெற்றவளாக, நாட்டை நடத்திச் செல்லக் கூடிய திறன் படைத்தவளாகக் கருதுகின்ற இந்த நூற்றாண்டில் அதிலும் இந்த 1989-ம் ஆண்டில் டிசம்பர் திங்களில் நடந்தேறி இருக்கிறது. பெண் இனத்தைத் தலை குனிய வைத்திருக்கிறது.

ஆந்திர மாநிலத்தின் கவாலி பகுதியில் உள்ள கிராமம் கோதண்டராமபுரம். அந்தக் கிராமத்தின் பெரும் பகுதி மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள். பெரும் பகுதிக் குடும்பங்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள்.

இவ்வாறு பெரும்பான்மையினர் காங்கிரஸ் கட்சி சார்ந்தவர்களாக இருந்த ஒரு கிராமத்தில் 'கபுஸ்' என்ற ஒரு குடும்பத்தினர் மட்டும் தெலுங்குதேசக் கட்சியின் ஆதரவாளராக இருந்தனர். தெலுங்கு தேசக் கட்சிக்காகப் பாடுபட்டனர்.

கடந்த தேர்தலில் இவர்கள்-இந்த கபுஸ் குடும்பத்தினர் தெலுங்கு தேசக் கட்சிக்கு ஓட்டுப் போட்டனர் என்ற ஒரே காரணத்தினால் அந்தக் கிராமத்தினர் 'கபுஸ்' குடும்பத்தினரைத் தள்ளி வைத்தனர். ஓட்டு மொத்தமாகப்

புறக்கணித்தனர். அக்குடும்பத்தைச் சார்ந்த எவரும் பொதுக் குழாயில் தண்ணீர் பிடிக்கக் கூடத் தடை விதித்திருந்தனர்.

ஆனால் கபுஸ் குடும்பத்தைச் சார்ந்த லட்சம்மா என்கிற பெண்மணி சிறிது தைரியசாலி. அநியாயமாக விதிக்கப்பட்ட இத்தடைகளுக்கு அஞ்சாமல் ஓட்டுப் போடுவது எங்களின் பிறப்புரிமை, என்று எண்ணி அவர்களின் தடையை மீறிப் பொதுக் குழாயில் தண்ணீர் பிடிக்கச் சென்றார். அவர் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்ததைக் கவனித்த சில கிராமத்துப் பெண்கள் கொதித்துப் போனார்கள். தடையை மீறி லட்சம்மா நீர் பிடிக்க வந்த துணிச்சல் அவர்களுக்குள் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

''இவ எப்படி இங்க வந்து தண்ணி பிடிக்கலாம்...? வாங்க இவளை ஒரு கை பார்த்துடலாம்...'' என்று கும்பல் சேர்த்துக் கொண்டு போய் லட்சம்மாவைத் தாக்கினார்கள். வாய்க்கு வந்தபடிப் பேசினார்கள். நடுரோட்டிலேயே லட்சம்மா கதறக் கதற அவளது ஆடைகளைக் கிழித்து நிர்வாணமாக்கினார்கள். அந்த நிர்வாணக் கோலத்திலேயே வலுக்கட்டாயமாகப் பிடித்திழுத்து ஊர்வலமாகவும் அழைத்துச் சென்றார்கள்.

ஊர்வலம் முடிந்து வீடு திரும்பிய லட்சம்மா கதறிக் கண்ணீர் வடித்தார். தனக்கு நேர்ந்த அவமானத்தைத் தாங்க இயலாமல் துடித்துத் துவண்டார். கடைசியில் 'அதற்கு மேல் வாழக் கூடாது' என்கிற முடிவில் தற்கொலை செய்து கொள்ளவும் முயன்றாள்.

ஆனால் நல்லவேளையாகச் சில உறவினர்கள் ஓடிவந்து வளைக் காப்பாற்றினார்கள். நல்ல வார்த்தை சொல்லி வளைத் தேற்றினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக வளது மனதை மாற்றவும் முயன்றார்கள். தற்போது ஷயம் போலீஸ் காதுவரை எட்டி அவர்கள் வழக்குப் பதிவு சய்து விசாரித்து வருகிறார்கள்.



இதைப் படிக்கிறபோது மனது குமுறத்தான் செய்கிறது. இவர்களும் பெண்களா என்று கொதித்துப் போகிறது. பெண்களே பெண்களுக்கு எதிரிகளாக இருக்கின்ற கொடுமை புலப்படுகிறது. ஆனால் இதற்கான காரணம் அரசியல்என்கிறபோது—

இந்த மாதிரி அரசியல் அறிவீனங்களைக் கண்டு, அரை வேக்காட்டுத்தனங்களைக் கண்டு, நெஞ்சு பொறுக்கத்தான் இல்லை.

இது அறிவீனம்; மதியற்ற செயல்; காட்டு மிராண்டித் தனம். நம் நாடு ஜனநாயக நாடு. நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம். ஓட்டுரிமை நமது ஜனநாயக உரிமை. பிறப்புரிமை. பயப்படாமல் ஓட்டுச்சாவடிக்குச் செல்லவும் ஓட்டுப் போடவும் தேர்தல் கமிஷன் கேட்டுக் கொள்கிறது.

இந்த ஜனநாயக அடிப்படை உரிமையை மறுத்து, பொதுக்குழாயில் குடி தண்ணீர் பிடிக்க வந்த பெண்ணை மற்ற பெண்களே. நிர்வாணமாக்கி ஊர்வலம் வரச் செய்த இந்தக் கயமைக்கு, கொடுமைக்கு, ஈனச்செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். நிர்வாணப்படுத்துவதன் மூலம் ஒரு பெண்ணை மிகச் சுலபமாக மானபங்கப் படுத்தி விடலாம் என்கிற எண்ணம் முதலில் அறவே துடைக்கப்படவேண்டும்.

பெண்களே பெண்களுக்கு எதிரியாவது தடுக்கப்பட வேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மூல காரணமான இது போன்ற மூட நம்பிக்கைகள் ஒழிந்து பெண் இனமும் அறிவு பெற்றவளாக வேண்டும். இதெல்லாம் அரசியல் என்கிற ஈனத்தனமான எண்ணங்களில் இருந்து விடுதலைப் பெற்று நிஜமான அரசியலை அவள் புரிந்து கொள்ளவேண்டும். மனித அடிப்படை உரிமைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதோடு மட்டுமின்றி உணரவும் வேண்டும். வெறித்

தனமும், பழிவாங்கவேண்டும் என்கிற மிருகத்தனமும் அடங்கி அவளுக்குள் சேவை மனப்பான்மை எழவேண்டும். தன்னால் முடிந்த அளவில் நல்லது செய்யத் தோன்ற வேண்டும். இந்தத் தோன்றுதலின் அடிப்படையே பெண்களின் பொது வாழ்வின் நோக்கமாகவும் இருக்கவேண்டும். இதன் காரணமாகவே பெண்களுக்கு அரசியல் அறிவும், விழிப்புணர்ச்சியும் ஏற்படவேண்டும். இதைப்போன்ற தளைகளைப் பிடுங்கி எறியவும், நல்லோதர் தலைவிகளாக உருவாகவும், நல்ல பாதைகளில் நடக்கவும் பெண்களுக்கு வழிகாட்டிகள் தேவை. ஆசிரியர்கள் தேவை. ஆசான்கள் தேவை. நல்ல நெஞ்சங்களின் ஆதரவு தேவை. இவை அனைத்தும் கிடைத்து, நல்லதோர் தலைமையின் கீழ் - தலைவனின் கீழ் பணிபுரிகின்ற வாய்ப்புகள் தேவை, அறிவார்ந்தவர்களிடமிருந்து பெருகின்ற அனுபவங்கள் தேவை.

இவை அனைத்தும் கிடைக்கக்கூடிய பட்சத்தில் அனைத்துத் துறையிலும் பெண்களின் பங்கு - முக்கியமாக அரசியலில்அவளது பங்கு இன்னும் அதிகமாகவே இருக்கும் என்பதை என்னால் அழுத்தமாக, ஆணித்தரமாக இங்கே சொல்லிக் கொள்ள முடிகிறது.

ஞானப் பெண்ணாக வாசகர் ஒருவர் வீடு தேடி ஒரு மணி நேரம் சண்டை போட்டார்.

''ஏன் மேடம் பெண்களைப் பற்றி இத்தனை எழுதும் உங்களுக்கு அவர்களின் குறைகள் எதுவுமே தெரியாதா?'' என்று கேட்டார்

''குறைகளற்ற மனிதன் யார்?''—நான் திருப்பிக் கேட்டேன்.

''குறைகள்னா குறைகள் இல்லை மேடம். அவங்களால ஒரு குடும்பம் படற அவஸ்தை...முக்கியமா என்னை மாதிரி ஆண்களுக்கு ஏற்படற சங்கடம்...இதையெல்லாம் எடுத்துச் சொல்லி சரி செய்யக் கூடாதா?''



அவர் தன் மனைவி பற்றி, கூடப் பணிபுரிகின்றவரின் மனைவி பற்றி, தெரிந்த நண்பர் ஒருவரின் மனைவி பற்றிச் சொல்லிக் கொண்டே போனார். எல்லாம் சொல்லி முடித்துக் கடைசியில் கேட்டார். அவர் கேட்ட கேள்விகளை வரிசைப்படுத்துகிறேன்.

1. பெண் விடுதலை என்ற பெயரில் பொட்டு வச்சுக்கிறது அடிமைத்தனம், தாலி போட்டுக்கிறது அடிமைத்தனம் என்று தாலியைக் கழற்றிப் போட்டு, பொட்டை அழித்து விட்டுக் குடும்பப் பெரியவர்களின் மனதைப் புண்படுத்தி குடும்ப நிம்மதியைக் கலைப்பதுதான் விடுதலையா?

2. கணவனைச் சந்தேகப்பட்டுச் சதா சர்வகாலமும் 'அவ கூட ஏன் பேசின? இவளை ஏன் பார்த்த?' என்று பிச்சுப் பிடுங்கி எடுக்கிற சந்தேகப் பிசாசுகளைத் திருத்துகிற வழி என்ன?

3. கல்யாணம் பண்ணிக் கொண்ட காரணத்திற்காகப் பெற்றவர்கள், கூடப் பிறந்தவர்கள் அத்தனை பேரையும் ஒதுக்கி விடச் சொல்லி சண்டை போடும் மனைவி, காலணாக் காசு கூட அவர்களுக்கென்று செலவழிக்கக் கூடாது எனக் கூச்சல் போட்டு வீட்டை நரகமாக்கும் மனைவிமார்கள்...

4. 'நீ என் அம்மா அப்பாவோடு வந்து இருக்கிறாயா? நான் மட்டும் ஏன் உன் அம்மா அப்பாவோடு வந்திருக்க வேண்டும்?' எனக் கேட்பார்கள்...

இப்படி எத்தனைப் பிரச்னைகள் தெரியுமா? சில ஆண்களின் வாழ்க்கை பெண்களால் நரகமாகிக் கொண்டிருப்பது தெரியுமா? 'ஆசைப்பட்ட எதையும் வாங்கித் தரத் துப்பு இல்ல...பின்ன என்னை ஏன் கட்டிக்கிட்டீங்க?' என்று கேட்டுக் கேட்டு நாக்குக் கொடுக்கால் கொட்டுகின்ற பெண்களைத் தெரியுமா? ஆக ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் முன்பு மாதிரி அமைதியான, அன்பான, சகிப்புத் தன்மை

நிறைந்த, விட்டுக் கொடுக்கிற தன்மையுள்ள பெண்களைப் பார்க்கவே முடியாமல் போய் விடப் போகிறதோ என்கிற எங்கள் ஏக்கங்கள் தெரியுமா?''

அந்த நண்பரிடம் 'விட்டுக் கொடுப்பது என்பது இரு பக்கத்திலிருந்தும் வர வேண்டும்' என சமாதானப்படுத்தி அனுப்பிய பின்பு யோசித்தால்—

அவர் சொன்ன மாதிரியான பெண்களும் இருப்பது நிஜம் எனத் தோன்றிற்று.

இன்னமும் 'யூனிவர்ஸல் லவ்' பற்றிப் போகின்ற இந்த நூற்றாண்டில், படித்தவர்கள் ஆண்டாகக் கொண்டாடப் படுகின்ற இன்றைய நிலைமையில் உன் அம்மா, என் அம்மா எனப் பிரித்துப் பேசுகின்ற பெண்கள் இருக்கிறார்கள் தான்...இதன் காரணமாக ஆண்டாண்டு காலமாக ஆண்கள் சொல்லி வந்ததை இப்போது திருப்பிச் சொல்லிக் காட்ட வேண்டும் என்பதாகவும் இருக்கலாம்.

அதே போல் தான் சந்தேகப்படுகின்ற மனைவிமார் களும் ஒன்று - இவர்கள் அதிக பொஸிசிவ் குணம் உள்ளவர்கள்...அல்லது சந்தேகப்படும் உரிமை தங்களுக்கும் உண்டு என நிரூபிக்க ஆசைப்படுபவர்கள்.

பெண் விடுதலை என்ற பெயரில் பொட்டு வைப்பது பற்றி, தாலி அணிவது பற்றியெல்லாம் பாரதி கூட சொல்ல வில்லை. அவை அடிமைச் சின்னங்கள் எனவில்லை.

புதுமைப் பெண்ணாக பாரதி சித்தரித்தவள்—

நிமிர்ந்த நன்னடை உடையவள்
நேர்கொண்ட பார்வை உடையவள்
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத
நெறிகள் கொண்டவள்
இவற்றோடு திமிர்ந்த
ஞானச் செருக்கு மிக்கவள்

ஞானச் செருக்கு என்று பாரதி சொன்னாரே தவிர வெறும் செருக்கு என்று சொல்லவில்லை.



அதனால் ஞானமுள்ள பெண்கள் நிச்சயம் யோசிப் பார்கள். ஒவ்வொரு செயலின் விளைவுகளையும் சீர் தூக்கிப் பார்ப்பார்கள். தன் மனம் புண்படக் கூடாது என்று எதிர் பார்க்கிற மாதிரி மற்றவர்கள் மனதையும் புண்படுத்த மாட்டார்கள்.

ஏனெனில் குடும்ப ஒற்றுமை என்பது மிக மிக அவசியம். வீடு ஒற்றுமையாக இருந்தால் தான் நாடு நன்றாக இருக்கும். வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும் என்கிற மாதிரி தான்.

ஒற்றுமையான அன்பும், பாசமும் கொண்ட பெற்றோருக்குப் பிறந்த குழந்தைகளைப் பாருங்கள். நீர் உயர நெல் உயர்ந்தவர்களாக இருப்பார்கள்.

ஒற்றுமையின்றி சண்டை போடும் பெற்றோரின் குழந்தைகளைப் பாருங்கள். பெற்றோர்களின் சண்டை களினால் பயந்து, பாதிக்கப்பட்டு, வீடு வெறுத்து, அன்பிற்கும், பாசத்திற்கும் ஏங்கி...

உடல் குன்றி, நோயுற்று, வேண்டாத பழக்கங்களுக்கு அடிமையாகிற நிலை ஏற்பட்டு...

இவை தேவையா? இப்படிப்பட்ட குழந்தைகளினால் படிக்க இயலுமா? இவர்களால் எதிர்கால இந்தியாவை உருவாக்க இயலுமா? எதிர்கால இந்தியாவைக் கூட விடுங்கள். நாளை அவர்களுக்குப் பிறக்கப் போகும் அவர் களின் குழந்தைகள் எப்படி இருப்பார்கள் என்பதை யோசியுங்கள்...

இவற்றையெல்லாம் யோசிக்க இயலுமானால் 'நான்' மறைந்து 'நாமாக' முடியும். நாம் என்ற சின்ன சங்கிலி கை கோர்த்து, கை கோர்த்துப் பெரிய சங்கிலியாக விரிந்து உலகைத் தொடும். உலகைத் தொட இயலும் என்றால் உங்கள் சின்னக் குடும்பங்களை, இதயங்களைத் தொட முடியாதா என்ன?

முடியும்!

முடிய வேண்டும்.

எதுவும் என்னால் இயலும் என்ற ஆக்கபூர்வ சிந்தனையில் இன்றே, இந்த வினாடியே இறங்குவீர்களானால்...

பாரதி கண்ட புதுமைப் பெண்களால், ஞானச் செருக்கால் இந்நாடே நிறைந்து விடாதா...!

17661
3366683